# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு - 08
குவிப்பு - 09
பக்கங்கள் - 16
விலை ரூபா 20.00
செப்ரெம்பர் 2005

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377


## மதங்கள் கூறும் விதிமுறைகளில்

# விரும்பியவற்றை எடுத்துக்கொண்டு

## மற்றவற்றை அலட்சியம் செய்வது தவறான போக்கு!

### ஜேர்மனியில் நடைபெற்ற உலக இளைஞர் தின நிகழ்வில் திருத்தந்தை 16ம் பெனடிக்ற்



மதங்கள் கூறும் விதிமுறைகளில் விரும்பியவற்றை எடுத்துக்கொள்வது மற்றவற்றை அலட்சியம் செய்வது போன்ற போக்கு தவறானது. பெரும் எண்ணிக்கையில் மதங்கள் பெருகி வருகின்றன. இது கண்டிக்கத்தக்கது. இவ்வாறு பரிசுத்த பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற் ஜேர்மனியில் உள்ள கொலோனின் மெரீன் பெல்ட் பகுதியில் நடந்த உலக கத்தோலிக்க இளைஞர்கள் தினத் திருப்பலியின்போது குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில், நுகர்பொருட்கள்போல் மதங்கள் பெருகி வருகின்றன. அவற்றால் நிறையப் பேர் ஆதாயம் அடைகின்றனர். இது கண்டிக்கத்தக்கது. இவ்வாறு மதங்கள் அதிகரித்தால் அவை நுகர்பொருள் போன்ற நிலைக்கு மாறிவிடும். அன்றாட மதநடைமுறைகளை அனைவரும் சிரத்தையுடன் கடைப்பிடிக்க வேண்டும் என திருத்தந்தை இளைஞர்களைக் கேட்டுக்கொண்டார்.

## அகில இலங்கை ரீதியில்

## கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம



டயலொக் ஜி.எஸ்.எம் (Dialoge G. S.M) நிறுவனமானது இலங்கையின் கல்வி அமைச்சுடனும் திறந்த பல்கலைக்கழகத்துடனும் இணைந்து அகில இலங்கை ரீதியாக நடத்திய கனிஷ்ட பிரிவுக்கான கட்டுரைப் போட்டியில் மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியின் தரம் 9ஐச் சேர்ந்த செல்வன் எஸ். பெரஸ்ரிக் திவியன் குரூஸ் முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.

இவர் இந்நிறுவனங்கள் ஏற்பாடு செய்த இரண்டு வார கல்விச் சுற்றுலாவினை மேற்கொண்டு லண்டன் சென்று வந்துள்ளார். "இலங்கையின் பொருளாதார சுபீட்சத்திற்கு சமாதானம் அவசியம்" என்ற தலைப்பில் இடம்பெற்ற இப்போட்டியில் இலங்கையின் சகல பாடசாலைகளிலும் இருந்து சுமார் 37000 மாணவர்கள் பங்குபற்றினர். இவர் வங்காலையை பிறப்பிடமாகவும், மன்னார் பெரியகடையை வசிப்பிடமாகவும் கொண்டவர். திரு. திருமதி. ஸ்பெல்வின் குரூஸ் தம்பதிகளின் மூத்த புதல்வராவார். இச்சாதனையை ஈட்டிய இம்மாணவனையும் ஊக்குவித்த பெற்றோரையும் அதிபர், ஆசிரியர்கள், கல்விச் சமூகம், மன்னார் வலயக் கல்வித் திணைக்களம் மற்றும் மன்னா பதிப்பாசிரியர் ஆகியோர் பாராட்டி நிற்கின்றனர்.

## இன மத வேறுபாடின்றி செயற்படும் வாழ்வுதயம்

### செயற்கைக்கால் பெற்ற முஸ்லிம் சகோதரர் கூறுகின்றார்



இன மத வேறுபாடின்றி செயற்படும் வாழ்வுதய நிறுவனத்தை நான் நன்றியோடு நினைவுகூருகின்றேன் என மன்னார் வாழ்வுதய நிறுவனத்தினால் செயற்கைக் கால் பெற்றுக்கொண்ட முஸ்லிம் சகோதரர் குறிப்பிட்டார். மருதங்கேணி 10ம் கட்டையைச் சேர்ந்தவரும் தற்போது வவுனியாவில் வசிப்பவருமாகிய திரு. அன்ஸார் அவர்களே இவ்வாறு கருத்துத் தெரிவித்தார். அண்மையில் வாழ்வுதயம் உதவிக்கரம் பிரிவில் இவர் செயற்கைக் காலை பொருத்திக்கொண்டார். வாழ்வுதய நிறுவனமானது தன்னகத்தே பதினொரு பிரிவுகளை உள்ளடக்கி இன மத மொழி பேதமற்ற ரீதியில் தனது சேவையினை வழங்கி வருகின்றது. மன்னார், வவுனியா மாவட்டங்களில் மட்டும் அல்லாது தேவை ஏற்படும் மாவட்டங்களுக்கும் வாழ்வுதயத்தின் செயற்கைக்கால் பொருத்தும் பிரிவினர் நடமாடும் சேவை மூலம் செயற்கைக் கால்களை இலவசமாக வழங்கி வருகின்றனர்.

## துறவற வாழ்வின் பொன்விழாக் காணும்

### அருட்சகோதரிகள் அமலி, கத்தறின்

முத்தரிப்புத் துறையைச் சேர்ந்த அருட்சகோதரி அமலி (தி.கு) மற்றும் தலைமன்னாரைச் சேர்ந்த அருட்சகோதரி கத்தறின் (தி.கு) ஆகியோர் இவ்வாண்டு தமது துறவற வாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்து பொன்விழாக் காண்கின்றனர். இவர்களுக்கு மன்னா தனது செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றது. இவர்களைப் பற்றிய விரிவான தகவல்களை பக்கம் 10ல் காணலாம்.



சகோதரி அமலி



சகோதரி கத்தறின்

## துறவற வாழ்வில் வெள்ளி விழாக் காணும்

### அருட்சகோதரி அழகேஸ்வரி



நானாட்டானைச் சேர்ந்த அருட்சகோதரி அழகேஸ்வரி செபஸ்ரியாம்பிள்ளை (தி.கு) தமது துறவற வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காண்கின்றார். இவருக்கு மன்னா தனது செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றது. (தொடர்ச்சி பக்கம்10).

### ஜேர்மன் கொலோன் நகரில் நடைபெற்ற இளைஞர் தினம்

## 8 இலட்சம் கத்தோலிக்க இளைஞர்கள் சங்கமம்

### கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் வெட்டவெளியில் காத்திருப்பு

ஜேர்மனியின் கொலோன் நகருக்கு இளைஞர் தினத்தில் பங்கேற்க வந்திருந்த திருத்தந்தை 16ம் பெனடிக்ற் தனது 4 நாள் பயணத்தை ஓகஸ்ட் 21ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நிறைவுசெய்தார். ஞாயிற்றுக்கிழமை நடந்த திருப்பலிக்கு அவரைக் காண சுமார் 8 இலட்சம் கத்தோலிக்க இளைஞர்கள் திரண்டிருந்தனர். கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் வெட்டவெளியில் அவர்கள் இரவு முழுவதும் காத்திருந்தனர். மெரீன்பெல்ட் பகுதியை நோக்கி அமைந்திருந்த பீடத்துக்கு காரில் திருத்தந்தை வந்தார். (தொடர்ச்சி 10ம் பக்கம்)

### 13 வயதின் கீழ்பிரிவி ருக்கான உதைப்பந்தாட்டப் போட்டியில்

## சவேரியார் ஆண்கள் கல்லூரி தேசிய சாதனை



13 வயதின் கீழ்ப்பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி தேசிய சாதனையை நிலைநாட்டி உள்ளது. இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளத்தினால் நடாத்தப்பட்ட மாவட்ட மட்ட சுற்றுப் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று, கடந்த யூலை 29,30,31ந் திகதிகளில் கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட தேசிய மட்ட இறுதி சுற்றில் இக்கல்லூரி கலந்துகொண்டு தேசிய மட்ட சம்பியனாக இவ்வாண்டு தெரிவாகியது. (தொடர்ச்சி 10ம் பக்கம்)

### அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்களுக்கு விசேட அன்பளிப்பு

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், இலங்கை ஐக்கிய நாட்டு நட்புறவு சங்கத்தின் (SUNFO)) தலைவர் அருட்சகோதரர் பப்டிஸ்ற் குரூஸ் அவர்களுக்கு SANAAD பொதுச் செயலாளர் இந்தியாவைச் சேர்ந்த அனில் கே. சிங் (ANIL K. SING) ஒரு விசேட அன்பளிப்பை வழங்கினார்.



## மதமாற்றத் தடைச்சட்டம் குறித்து

### அமெரிக்கா இலங்கை அரசுக்கு கடும் எச்சரிக்கை!

இலங்கை அரசாங்கத்தின் மதமாற்றத் தடைச்சட்டம் அமுல்படுத்தப்படுமானால் இலங்கைக்கான நிதியுதவிகள், வணிகத் தொடர்புகள் அனைத்தும் நிறுத்தப்படுமென அமெரிக்கா எச்சரித்துள்ளது. அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேர்னாட் குணதிலகாவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா அமெரிக்க அரசின் இந்த எச்சரிக்கையை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார். முன்மொழியப்பட்ட இந்த யோச்னைச்சட்ட மூலம் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாதென இலங்கை அரசாங்கம் அமெரிக்கத் தூதுவர் ஊடாக ஏற்கனவே வாக்குறுதி அளித்திருந்தது. இதனை அரசாங்கம் நினைவில் கொள்ளவேண்டும். மத சுதந்திரத்தைப் புறக்கணித்து அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்து முனையுமானால் இலங்கைக்கான நிதியுதவி மற்றும் வர்த்தகத் தொடர்புகள் நிறுத்தப்படலாம் என கிறிஸ்ரினா றொக்கா மேலும் எச்சரித்துள்ளார்.

# மன்னா

## மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## நமது தமிழ்ப் பற்று

### தனிநாயக அடிகளின் தமிழ்த் தாகம்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் இறந்து 25 வருடங்கள் உருண்டோடி விட்டன.(01.09.19980) தமிழ் மொழியின்பால் அவருக்கிருந்த பற்றும் பாசமும் அளவிட முடியாதது. "தமிழும் சமயமும் எனது இரண்டு கண்கள்" என்று கூறி தமிழுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த இந்தக் கத்தோலிக்க துறவியின் - உலகம் போற்றும் ஒப்பற்ற தமிழ்ப்பேரறிஞரின் நினைவு நாளில் அவருடைய தமிழ்ப் பற்றை - தமிழ்ப் பணியை இரைமீட்டுப் பார்த்து நமது மொழிப் பற்றை ஆழப்படுத்திக்கொள்வது பொருத்தமானதாகும்.

### யாமறிந்த மொழிகளிலே .....

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோமே"

என்று பாடினார் புரட்சிக் கவி பாரதியார். அவரைப்போலவே தமிழ் மொழியின் தனித்துவத்தை அறிந்து உணர்ந்தவர் அடிகளார். வேறு எந்த மொழியையும் அறியாமல் தமிழை மட்டும் அறிந்த ஒருவர் இப்படிக் கூறுவாரானால் அதைப் பற்றி நாம் அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் பல மொழிகளைக் கற்று பாண்டித்தியம் பெற்றிருந்த அடிகளார் தமிழ் மொழியின் மேன்மையை தொன்மையை இனிமையை அறிந்திருந்தார். அதனால்தான் பாரதியின் இந்த பாடல் வரிகளை பல சர்வதேச பல்கலைக்கழகங்களில் அவர் எதிரொலித்தார்.

### மறைவாக நமக்குள்ளே ......

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை.
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"

என்றார் பாரதியார். பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் புலவர்கள் தமிழ்ப் பண்டிதர்கள் தமிழ்க் கல்விமான்கள் தமிழகத்திலும் தமிழ் ஈழத்திலும் இன்னும் ஏனைய இடங்களிலும் வாழ்ந்து மறைந்துள்ளனர். இவர்கள் தமக்குள்ளேயே தமிழின் பெருமைகளைப் பேசி மகிழ்ந்தனர். "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து மூத்த குடி எங்கள் தமிழ்க்குடி" என்று தமிழர்களின் பூர்வீகத்தை - புராதனத்தை அறிவியல் ரீதியான ஆதாரமின்றி பேசி மகிழ்ந்தனர். ஆனால் மொழியியல் துறையில் ஒப்பீட்டு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தமிழின் - தமிழரின் தொன்மையை தரணிக்கு எடுத்துக் காட்டியவர் தனிநாயக அடிகளே. தமிழ் மொழியின் தொன்மையையும் அதேவேளை இனிமையையும் பிறநாட்டு அறிஞர்கள் அடிகளார் வாயிலாக கேள்விப்பட்டபோது ஆச்சரியத்தால் அவர்கள் கண்கள் அகல விரிந்தன. தமிழின் திறமான புலமைகளை, இலக்கியங்களை வெளிநாட்டார் அறிந்து வியக்கும் வகை பாரதியின் கனவை நனவாக்கியவர் தனிநாயக அடிகளார்.

### தமிழுக்கு அமுதென்று பேர் ....

தமிழுக்கு அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

என்று முழங்கிய பாவேந்தர் பாரதிதாசன் தன் காலத்தவர்களுக்கு தமிழுணர்வை ஊட்டினார். இன்று தமிழகத்திலும் சரி தமிழ் ஈழத்திலும் சரி தமிழர்கள் பரந்து வாழும் புலம்பெயர் நாடுகளிலும் சரி இந்தத் தமிழ்ப் பற்று அருகி வருவது கவலை தரும் விடயமாகும்.
மெல்லத் தமிழினி சாகுமோ என்று அச்சம் தமிழறிஞர் மத்தியில் ஏற்பட்டுள்ளது. எனவே நாம் எமது தமிழ் மொழியின்பால் பற்றும் பாசமும் கொண்டு நமது பேச்சிலும் மூச்சிலும் தமிழ் உணர்வு கொண்டவர்களாக வாழ வேண்டும். நமது மொழியை நமது உயிருக்கு நேராக மதிக்க வேண்டும் அதை வளர்க்க வேண்டும்.

### யாதும் ஊரே யாவரும் கேளிர் .....

நமது மொழிப் பற்று குறுகிய பார்வையை நம்மில் வளர்ப்பதாக அமையக்கூடாது. நமது உலகளாவிய பார்வையையும் உலகளாவிய சகோதரத்துவத்தையும் (Universal Brotherhood) உதாசீனப்படுத்தும் ஒன்றாக அது அமையுமானால் அந்த மொழிப்பற்று குறுகிய சிந்தனை கொண்ட இனவாதிகளாகவே நம்மை இனம் காட்டும்.
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற புறநானூறு போற்றும் உலக மனப்பான்மையை தனிநாயக அடிகளார் தமதாக்கிக்கொண்டார். இந்த மனப்பான்மையை அனைவரும் வளர்க்க வேண்டும் என தாம் செல்லும் நாடுகளில் எல்லாம் கூறிவந்தார். கணியன் பூங்குன்றனாரின் இவ்வழகிய அடிகளை தமிழில் எழுதி இதன் மொழிபெயர்ப்பினை அவ்வவ்நாட்டு மொழிகளில் அவர் வரைவார்.

Evrry country is my Country
Every Man is my Kinsman

என ஆங்கிலத்தில் இவ்வடிகளை அவர் எடுத்தாழுவார்.
எனவே நமது தமிழ்ப்பற்றை வளர்க்கும் அதேவேளை குறுகிய மனப்பான்மைகளுக்கு எம்மை விட்டுக்கொடுக்காமல் பரந்த மனப்பான்மையோடு வாழுவோம்.

"இறைவன் என்னை நன்றாகப் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும் வரை
அன்புடன் - அருட்பணியாளர் நேசன்
பதிப்பாசிரியர்



## வாசகர் எண்ணங்கள்





### உலகெங்கும் தொடர்ந்து மணம் பரப்பு!

அன்பின் மன்னா, வாழ்க உன் பணி. வளர்க உன் சேவை! மன்னாவே நீ நீடுழி வாழ்க! நீ கொண்டு வரும் ஆக்கங்கள் யாவும் தரம். அதிலும் அன்னை தெரேசா பற்றிய விறுவிறுப்புத் தொடர், புனித பதுவை அந்தோனியார் தொடர் போன்ற ஆக்கங்கள் எமக்கு மிகவும் பயனைத் தருகின்றன. எனவே மன்னாவே நீ உலகெங்கும் சென்று தொடர்ந்து மணம் பரப்ப எனது வாழ்த்துக்கள்.

எஸ். வினோதினி (யூலி), தரம் - 11 A,
மன்/ பரிகாரிகண்டல் இ.த.க. பாடசாலை.

### இல்லத் துணைவியருக்கு இனிய மன்னா!

அன்பின் மன்னா, உனது பக்கங்கள் யாவும் இனிய நறுமணமே! உனது நறுமணம் கண்டு உனில் அக்கறைகொள்வோரும் அதிகமே. உன் மூலமாக அறியாத நற்செய்திகளை அறிந்து, அறிவு வளர, வாழ்வு வளம் பெற ஆற்றிடும் உன் சேவைக்கு எனது வந்தனங்கள் பற்பல.
மன்னாவே! "சமைப்போம் சுவைப்போம்" எனும் பகுதியினை வழங்கிடும், சகோதரி தீபா அவர்களை இத்தால் வரவேற்பதோடு, இனிய சுவைகளை இல்லத்தில் துணைவியர் நாமும் சமைத்து குடும்பம் மகிழ்வுற மேன்மேலும் இனிய தகவல்களை (செயல் முறைகளை) தந்திட தாழ்பணிகிறேன்.

*நன்றியோடு R. பிரகாசியம்மா (டெய்சி), சூரியகட்டைக்காடு.*

### காலம் முழுவதும் வருவாயா?

என் அன்பு நண்பன் மன்னாவே, நீ மாதத்தில் ஒருமுறை என்னை சந்தித்துக்கொள்வதில் எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. இதேபோல் நான் வாழும் காலம் முழுவதும் எனக்கு அன்பு நண்பனாக வருவாயா! நீ வருவாய் என்ற நம்பிக்கையுடன் என் எழுத்துப் பயணத்தை உன்னுடன் தொடர்கின்றேன்.

*தே. ஜெகன் பீரிஸ், தலைமன்னார் மேற்கு.*

### தேடலையும் துணிவையும் தருகின்றது!

அன்பிற்குரிய பதிப்பாசிரியர் அவர்களுக்கு,
மன்னாவில் நீங்கள் தரும் அனைத்து ஆக்கங்களும் மிகவும் தரமானவை. மன்னாப் பத்திரிகையின் மறை அறிவுப் பகுதி எங்களுக்குத் தேடலையும் துணிவையும் தருகின்றது! மன்னா இன்னும் உயர வேண்டும். அதன் பணி தொடர என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள். *எம். ரேகா, தோட்டவெளி.*

### அனைத்து ஆக்கங்களும் அருமை!

நான் கடந்த மூன்று ஆண்டுகளாக மன்னாவின் சந்தாதாரராக இருந்து வருகின்றேன். மன்னாவில் வருகின்ற ஆக்கங்கள் அனைத்தும் அனைவருக்கும் உகந்ததாக வெளிவருவதையிட்டு உங்களுக்கு வாழ்த்துக்கூறுகின்றேன். பெரியப்பா கேட்கும் கேள்விகளுக்கு நல்ல பதில் தேடி எங்களை ஜோசிக்க வைக்கின்றார். நல்லது. தொடரவும். எனது கவிதைகளையும் சிறுசிறு ஆக்கங்களையும் பிரசுரம் செய்வதை முன்னிட்டு என் நன்றிகளை தெரிவிக்கின்றேன். மன்னா உன் நற்செய்தி பணி சிறக்க என் உளமார்ந்த வாழ்த்துக்கள்!

*சிறகுடைந்த இளஞ்சிட்டு, பெனில்டஸ், தோட்டவெளி.*

## கருத்துக் களம்..... கருத்துக் களம்.....கருத்துக் களம்


### பெயரில் என்ன இருக்கிறது? What is there in a name?

புகழ்பூத்த ஆங்கிலக் கவிஞன் வில்லியம் ஷேக்ஸ்பியர் What is there in a name? பெயரில் என்ன இருக்கின்றது? என்று கேட்டார். உண்மைதான். தனிமனிதனின் குணநலமும் (Character), தனித்துவ விழுமியங்களும் ஒருவருக்கொருவர் மாறுபட்டதாக விளங்குவது கண்கூடு. இத்தகைய கண்ணோட்டத்தில், கத்தோலிக்க திருச்சபையில் புனித பேதுருவின் (St. Peter) வழித்தோன்றல்களாக விளங்கும் பாப்பரசர்களின் பெயர்கள் எப்படி அழைக்கப்படல் வேண்டும், அதன் தன்மை, முக்கியத்துவம், மேன்மை, மகத்துவம் எத்தகைய சிறப்பானது என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஐயந்திரிபற அறிந்திருத்தல் அவசியமாகும். திருத்தந்தையின் பெயரை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அழைப்பதென்பது திருச்சபையின் சர்வவியாபகமான (Universality) தன்மையைக் குறைத்து மதிப்பிடுவதாக அமையக்கூடாது. கத்தோலிக்க திருச்சபையின் தனித்துவம் ஒரே தலைவன் என்பதாகும். கருதினால்கள் ஒன்றுகூடி புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும் பொழுது, அவர் தனக்குகந்த ஒரு புனிதரின் பெயரைத் தெரிவு செய்வது மரபு. (உதாரணம்) முன்பு Karol Wojitily கரல் வயதுல்லா என்றழைக்கப்பட்டவர் பாப்பரசராகத் தெரிவான பின்னர்,2ம் ஜோண் போல் என தான் அழைக்கப்பட விரும்புவதாக தெரிவித்தார். ஜோண் போல் என்பதை நாம் தமிழில் மொழி பெயர்த்து இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் என்று அழைத்தோம். புதிய பாப்பரசர் கருதினாலாக JOSEPH RATSINGER என்று அழைக்கப்பட்டவர், தனது பெயரை 16வது பெனடிக்ற் என்று தெரிவுசெய்துகொண்டார்.
இவரது பெயரை பெனடிக்ற என்றா அல்லது தமிழ் மொழி பெயர்ப்பில் ஆசீர்வாதப்பா என்றா அழைப்பது? ஒவ்வொரு மறைமாவட்டமும், குருக்களும் ஒரே பாப்பரசரின் பெயரை இருவேறு விதமாக பூசைப்பலியில் உச்சரிக்கும்போது குழப்பமடைவது விசுவாசிகளின் கூட்டமே. ஒரே திருச்சபையின் தலைவருக்கு இருவேறு பெயர்கள் உண்டா என சாதாரண மக்கள் சிந்திப்பதில் வியப்பேதுமில்லை.
இவ்விடயமாக, மன்னாவின் ஆகஸ்ட் மாத இதழில், அருட்பணி அ. பி. ஜெயசேகரம் அடிகளாரின் கருத்திற்கு மதிப்பளிக்கும் அதேவேளை, "புதிய பாப்பரசின் பெயரை 16ம் பெனடிக்ற் என்றே அழைக்கவும் - யாழ் ஆயர் கோரிக்கை" என்ற தலைப்பில் மன்னாவின் ஜூன் மாத இதழில் பிரசுரமான செய்தியையும் கருத்திற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*வின்சென்ட் டலிமா (J. P), தலைமன்னார் மேற்கு.*

## அனைவரும் விரும்பும் சுவை.... நகைச் சுவை...!

### பெரிய பாதருக்கு சுவிஸ் மணிக்கூடு



பெரிய பாதருக்கு தன் பிறந்த நாள் பரிசாக ஒரு சுவிஸ் மணிக்கூட்டை பங்கு மக்கள் கொடுத்திருந்தனர். இதையிட்டு அவருக்கு மிகவும் சந்தோசம். சின்னப் பாதரிடம் அடிக்கடி அதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார். ஞாயிற்றுக் கிழமையும் வந்தது..... பூசை ஆரம்பமாகும் முன்னர் சின்னப் பாதர் பெரிய பாதருக்கு ஞாபகப்படுத்தினார். "பாதர் பிரசங்கம் சொல்ற நேரம் அடிக்கடி மணிக்கூட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள்"என்று. அப்போதுதான் பெரிய பாதருக்கு விளங்கியது எதற்காக தன் பங்கு மக்கள் தனது பிறந்த நாளுக்கு மணிக்கூட்டைப் பரிசாக கொடுத்தார்கள் என்று.

### ஐந்து ரூபாய் பெறுமதி

அந்த மனிதர் ஏதோ ஒரு யோசனையில் தனது திருமண மோதிரத்தைத் தடவிக்கொண்டிருந்தார். பூசையில் காணிக்கை எடுக்க ஆட்கள் வந்தபோது காணிக்கைத் தட்டில் அதைப் போட்டுவிட்டார். உடனே அதை எடுக்க முடியவில்லை. பூசை முடியும்வரை காத்திருந்தார். நேராக பாதரிடம் போய் சொன்னார். "பாதர் நான் ஐந்து ரூபாக் குத்தி என நினைத்து என் கலியாண மோதிரத்தை காணிக்கையில் போட்டுவிட்டேன். திரும்பவும் தரமுடியுமா?" என்றார்."அதெல்லாம் முடியாது தம்பி! கடவுளுக்குக் கொடுத்தது கொடுத்ததுதான். மறுபடியும் எடுக்க முடியாது" என்றார் பாதர். அந்த மனிதர் சற்றே யோசித்தார்: பின்னர் சொன்னார்: "பரவாயில்லை பாதர், அது கடவுளுக்கே போகட்டும். ஆனால் நான் மோட்சத்திற்குப் போகும்போது அவர் எனக்கு அதற்குண்டான சன்மானத்தைத் தராமல் இருந்துவிடுவாரா என்ன?" என்றார்.
பாதர் சென்னார்: "அங்கேதான் நீ பிழை விடுகிறாய் மகனே! நீ அதைக் காணிக்கையில் போடும்போது உன் மனதில் அதை ஒரு ஐந்து ரூபாக் காசு என்றுதானே நினைத்தாய். அந்த ஐந்து ரூபாப் பெறுமதியை மட்டுமே நீ அங்கே நிச்சயம் எதிர்பார்க்கலாம்" என்றார்.

### புனிதர் பொன்மொழி

*ஒரு குருவானவர் தன் கைகளில் அப்பத்தையும் இரசத்தையும் ஏந்தித் திருப்பலியில் அவற்றை இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் மாற்றுகின்றார். அன்னை மரியாளும் இயேசுவைத் தன் உடலில் சுமந்த காலத்தில் அப்பம், பானம் உட்கொண்டு அவற்றை இயேசுவின் திருவுடலாக மாற்றவில்லையா? ஆகவே அவளை ஒரு உயிர்வாழும் திருப்பலி என நாம் அழைக்கலாமே*

*- ஆயர் புல்டன் ஜே. ஷீன்*

## யுத்தம் மற்றும் கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# இன்றுவரை நிவாரணம் கிடைக்கவில்லை

### மடு ஆவணித் திருவிழாவில் யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை

கடந்த 20 வருட யுத்தம், மற்றும் கடந்த வருட டிசம்பரில் ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதத் தீர்வும் நிவாரணமும் இதுவரை கிடைக்கவில்லை. இதனால் வேதனை நிறைந்த துயரத்துடன் இங்கு நாம் கூடியுள்ளோம் என யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மடுத்திருப்பதியின் ஆவணித் திருவிழாவில் தெரிவித்தார். தொடர்ந்து அவர் கூறுகையில், நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட நாம் அனைவரும் மடு அன்னையிடம் உருக்கமாக மன்றாட அழைக்கப்படுகிறோம் என்றார்.

இத்திருவிழாவில் 3 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர். நாட்டின் பல பாகங்களிலிருந்து பெரும் திரளான கத்தோலிக்க மக்கள் மதவாச்சி, செட்டிகுளம் வீதி ஊடாக மடுத் திருப்பதியை வந்தடைந்தனர். மக்களுக்குரிய அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. 15ந் திகதி காலை 7.00 மணிக்கு மன்னார், யாழ்ப்பாணம், கொழும்பு, அநுராதபுரம், காலி மறைமாவட்ட ஆயர்கள் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பல அரச உயர் அதிகாரிகளும் இத்திருவிழாவில் கலந்துகொண்டனர்.




மடு ஆவணித் திருவிழாவின்போது ஆயர்கள் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும் கொழும்பு பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் மடு அன்னையில் திருச்சுருப ஆசீரை மக்களுக்கு வழங்குவதையும் படத்தில் காணலாம்.

## வட மாகாண மட்டத்தில்

# சித்திரப் போட்டியில் முதலாம் இடம்



சிலோன் பென்சில் கொம்பனி, சுயாதீன தொலைக்காட்சி, கல்வியமைச்சு, விஜய், சன்டே ரைம்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்திய அகில இலங்கை ரீதியான சித்திரப் போட்டியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியைச் சேர்ந்த செல்வன் கிரிதரன் துவாரகன் வட மாகாணத்தில் முதலாமிடம் பெற்றுள்ளார்.

போட்டிக்காக தெரிந்தெடுக்கப்பட்ட 1300இற்கும் மேற்பட்ட சித்திரங்கள் கொழும்பு காலபவனத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பின்னர் லயனல் வென்ற் கலையரங்கத்தில் நடாத்தப்பட்ட பரிசளிப்பு வைபவத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கினர். துவாரகனுக்கு மன்னாவின் வாழ்த்துக்கள்.

## மன்னார் வாழ்வுதயத்தின்

# தொழிற்பயிற்சி நிலைய திறப்பு விழா


மன்னார் வாழ்வுதய நிறுவனமும், உலக கனேடிய பல்கலைக்கழக சேவைகள் நிறுவனமும் (வூஸ் - WUSC) இணைந்து மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட ஆட்காட்டிவெளியில் கட்டிய தொழிற்பயிற்சி நிலையம் கடந்த 04.08.2005 அன்று மாலை 4.00 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை பி. ஜேசுராஜா அடிகளார் WUSC நிறுவன வவுனியா – மன்னார் மாவட்ட திட்ட இணைப்பாளர் திரு. துவான்மன்சில், ஆட்காட்டிவெளி பங்குத்தந்தை அருட்பணி. எஸ். மரியதாசன், உதவி பங்குத்தந்தை, கிராம சேவகர், ஊர் பெரியார்கள், பயிற்சி பெறவுள்ள மாணவர்கள், இம்மாணவர்களது பெற்றோர், வாழ்வுதய பணியாளர்கள் போன்ற பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# பங்கு தள சங்கதிகள்



### கீளியன்குடியிருப்பில் லூர்து அன்னையின் கெபி



லூர்து அன்னைக்கு கீளியன் குடியிருப்பில் ஒரு அழகான கெபி கட்டப்பட்டு 13.07.2005 அன்று ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகையால் அன்னையின் திருச்சுரூபம் ஆசீர்வதிக்கப்பட்டு திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மறைமாவட்டக் குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளாரால் கெபி திறந்து வைக்கப்பட்டு பங்குத்தந்தை ம. சூசைப்பிள்ளை அடிகளாரால் ஆசீர் வதிக்கப்பட்டது. *தகவல் - பி. செல்வி*

### உயிலங்குளத்தில் இளைஞர் ஒன்றுகூடல்

உயிலங்குளப் பங்கைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கும் ஆட்காட்டிவெளிப் பங்கைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்குமான ஒன்றுகூடல் உயிலங்குளத்தில் 22.07.2005 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது. இவ் ஒன்றுகூடலில் 70ற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டனர். மாலையில் சிநேகபூர்வ கிரிக்கட், வலைப்பந்து போட்டிகள் நடைபெற்றன. இரவு முழுவதும் கலை நிகழ்வுகளும் அறிமுகமும் இடம்பெற்றது. இந்நிகழ்வானது இளைஞர் யுவதிகளிடையே பரஸ்பர உறவையும், நட்பையும் வளர்க்கும் ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது இந்நிகழ்வை உயிலங்குளம் பங்குத்தந்தையும், ஆட்காட்டிவெளித் துணைப் பங்குத்தந்தையும் நெறிப்படுத்தினார்கள்.

*தகவல் - எஸ். டெனிலா.*

## மன்னார் மறைமாவட்டத்தில்

# நடனப் பயிற்சி

மன்னார் மறைமாவட்டத்தின் திருக்கலையருவி எனப்படும் சமுகத்தொடர்பு நிலையத்தினால் நடனப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. இந்தியாவில் 5 ஆண்டுகள் நடனப்பயிற்சி பெற்று நாடு திரும்பிய இருவரின் உதவியோடு இந்த நடனப்பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற உள்ளன. இதற்கான ஒழுங்குகளை மன்னார் மறைமாவட்ட சமுகத் தொடர்பு நிலைய இயக்குனர் அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக பங்குத் தந்தையர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், ஒக்ரோபர் 1ந் திகதி மன்னார் தாழ்வுபாடு வீதியில் உள்ள குடும்பப்பணி நிலையத்தில் இந்த வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் எனவும் இப்பயிற்சி ஒரு வருடம் இடம்பெறும் எனவும் மாதாந்த கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும் எனவும் பெண்களுக்கு வயதெல்லை இல்லை எனவும் ஆண்கள் 6 தொடக்கம் 14 வயது வரையானவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் செப்ரம்பர் 20ந் திகதி இடம்பெறும்.

முருங்கன் மறைக்கோட்ட திருப்பாலத்துவ சபை

## மறையறிவுப் போட்டி முடிவுகள்

### பேச்சுப் போட்டி

குழு பெயர் பங்கு

குழு - 1
1ம் இடம் அ. அனுசியா - உயிலங்குளம்
2ம் இடம் மி. நிறோஜன் - உயிலங்குளம்
3ம் இடம் ஜே. ஜக்குலின் சிறோமி- வஞ்சியங்குளம்

குழு - 2
1ம் இடம் பே. போல் அன்ரனி - உயிலங்குளம்
2ம் இடம் றொ.யெ. ஜெறோஜினி - அளவக்கை
3ம் இடம் ம. மெக்டலின் - உயிலங்குளம்

குழு - 3
1ம் இடம் ஜோ. தர்சிகன் - உயிலங்குளம்
2ம் இடம் மி. நிறோசா - உயிலங்குளம்
3ம் இடம் பே. அன்ரோ திவ்யா - உயிலங்குளம்

### பாடல் போட்டி

குழு - 1
1ம் இடம் வி. ஆன் கிறிஷோளினி - நானாட்டான்
2ம் இடம் றொ. நிவேதா - அளவக்கை
3ம் இடம் பே. ஜெயறூபி - அளவக்கை

குழு - 2
1ம் இடம் பே. ஆன் கனிமொழி - வஞ்சியங்குளம்
2ம் இடம் கு. மேரி மெக்ரலின் - உயிலங்குளம்
3ம் இடம் த. ஆன். துஷாந்தினி - உயிலங்குளம்

குழு - 3
1ம் இடம் அ. பிளவின் கில்டா - கற்கிடந்தகுளம்
2ம் இடம் டே. பெனிஸ்தஸ் - வஞ்சியன்குளம்
3ம் இடம் ஞா. சிலுவை ராஜ் - வஞ்சியன்குளம்

### கவிதைப் போட்டி

குழு - 1
1ம் இடம் ச. மடுமலர் - அளவக்கை
2ம் இடம் அ. ஆன் நிவேதிக்கா - உயிலங்குளம்
3ம் இடம் அ. றோசாறி - வஞ்சியங்குளம்

குழு – 2
1ம் இடம் அ. யூட் றொஷானி - உயிலங்குளம்
2ம் இடம் ஆ. நீவின் நர்மதா - உயிலங்குளம்
3ம் இடம் ம. ஆன். டள்சி - உயிலங்குளம்

குழு – 3
1ம் இடம் சீ. பேளின் சிந்துஜா - வஞ்சியன்குளம்
ம் இடம் ப. அகிலன் - அளவக்கை
3ம் இடம் க. சுகிர்தா - நானாட்டான்

அருட்பணி செ. வசந்தகுமார், இணைப்பாளர்,
முருங்கன் மறைக்கோட்டம்.

# மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் செய்திகள்

## கூத்துப் பயிற்சிப் பட்டறை



கடந்த 21.06.2005ம் திகதி, நானாட்டான் மகா வித்தியாலயத்தில் நாட்டுக்கூத்துப் பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்ட்து. மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் மூத்த கலைஞர்களால் நடாத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையில் இளைஞர் அவை உறுப்பினர்கள் 50 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். அருகிவரும் நாட்டுக்கூத்துக் கலையினை உயிரூட்டுவதற்கு திருமறைக் கலாமன்றம் எடுக்கும் முயற்சி பாராட்டுக்கு உரியது.

## பெண்கள் அமைப்பு கலைவிழா



04.06.2005 அன்று மன்னார் திருமறைக்கலா மன்றத்தின் அனைத்துப் பெண்கள் அமைப்புக்களும் இணைந்து நானாட்டான் வாழ்க்கைப்பெற்றான் கண்டல் கிராமத்தில் வெகு சிறப்பாக தமது கலைத்திறனை வெளிப்படுத்தினர். இப்பெண்கள் கலைவிழாவானது முதன் முறையாக இங்கே நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருமறைக்கலாமன்ற இயக்குனர் மன்னார் வருகை



கடந்த 08.07.2005 அன்று திருமறைக் கலாமன்றத்தின் இயக்குனர் என். மரிய சேவியர் அடிகளார் உத்தியோகபூர்வமாக மன்னாருக்கு வருகை தந்திருந்தார். அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு மன்னார் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் திருப்பலியினை நிறைவேற்றினார். தொடர்ந்து காலை 10.00 மணிக்கு மன்னார் Y. M.C.A மண்டபத்தில் இயக்குனரை வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது மன்னார் மாவட்ட திருமறைக் கலாமன்ற உறுப்பினர்கள் 25 கிராமங்களிலிருந்து வருகை தந்து நிகழ்வை சிறப்பித்தனர்.

# சிறுவர் பொழிவு






## செய்யும் தொழிலே தெய்வம்
### - சிறுவர் கதை -

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் உடல் உழைப்பு இல்லாதவன். சுத்த சோம்பேறி. அதனால் அவன் ஏழையாகவே வாழ வேண்டியதாயிற்று. அவனிடம் ஒரு வண்டியும், ஒரு சோடி எருதுகளும் இருந்தன. வண்டியில் பாரம் ஏற்றி, கூலி பெற்று அவன் எளிய சீவனம் நடத்தி வந்தான்.

ஒருநாள் அவன் சில கட்டைகளை வண்டியில் ஏற்றிக்கொண்டு, பக்கத்து ஊருக்குச் சென்றுகொண்டிருந்தான். வழிப்பாதை செம்மையாய் இல்லை. எருதுகளும் கஷ்டப்பட்டுக்கொண்டே வண்டியை இழுத்துச் சென்றன. போகும் வழியில் ஓரிடத்தில், நீரும் சேறுமான ஒரு பள்ளம் இருந்தது. அப்பள்ளத்தில் வண்டியின் சக்கரம் நன்றாய் சிக்கிக்கொண்டது. குடியானவன் மாடுகளை அதட்டி ஓட்டினான். அடிமேல் அடி அடித்தான். எருதுகள் தம்மால் ஆனவரை உந்தி இழுத்தன. ஆனால் பள்ளத்திலிருந்து சக்கரம் வெளிக்கிளம்பவில்லை. உடனே அக்குடியானவன், வண்டியிலிருந்து இறங்கி, வழிப்பாதையில் நின்றுகொண்டு "ஐயோ கடவுளே! என் கதி இப்படியாகி விட்டதே! நீராவது எனக்கு உதவி புரியக்கூடாதா" என்று ஓலமிட்டான்.



அப்போது கடவுள் மனித உருவில், அவனது கண்ணுக்கு தோற்றமளித்து, "ஐயா குடியானவரே, கடவுளை நீர் கூவியழைக்கத் தேவையே இல்லை. அவரது அருள் ஒவ்வொருவருக்கும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் கடவுள் அருள் இருப்பதும், இல்லாததும் நன்றாக பாடுபட்டு உழைப்பவர்களுக்கே விளங்குவதாகும். ஆகவே முதலில் நீர் தோளைக் கொடுத்து வண்டியைக் கிளப்பிப் பாரும். முயற்சி சிறிதும் செய்யாமல், ஆண்டவரைக் கூப்பிடுதல் பாவம். அவர் தான் என்ன செய்வார்" என்றான். இதைக் கேட்ட குடியானவன் மனம் தேறி, வண்டியின் சக்கரத்தைப் பிடித்து, தள்ளவே அதுவும் பள்ளத்திலிருந்து வெளிக்கிளம்பிற்று. அன்று முதல் அக் குடியானவன், சீரிய முயற்சி உடையவனாகத் திருந்தி சில காலத்துக்குள் பெரிய பணக்காரன் ஆனான்.

*வே. தர்சி, தரம் 7, புனித செபமாலை மாதா ஆலயம், பிச்சகுளம். முருங்கன்*

## சிறுவர் தொடர் கதை

### புனித பதுவை அந்தோனியார்

அங்கம்-11



41. "வருகிற இரண்டு நாட்கள் நான் அந்தக் கழுதைக்கு உணவு ஏதும் கொடுக்க மாட்டேன். மூன்றாம் நாள் அதைப் பொது மைதானத்திற்குக் கூட்டி வருவேன். ஒரு பக்கம் பசும் புற்களை வைப்பேன். மறுபுறம் நீர் உம் நற்கருணையைக் காட்டும். கழுதை உண்ண மறுத்து, நற்கருணை முன்னால் முழந்தாளிட்டால் நான் நம்புவேன்" என்றான். – " உன் திட்டத்தை ஏற்றுக்கொள்கிறேன்." என்றார் அந்தோனியார்.

42. "ஆனால் கழுதை முழந்தாளிட்டு வணங்காவிடில், அது எனது பாவங்களின் பொருட்டே" என்றார் அந்தோனியார். குறிப்பிட்ட நாளில் பொதுமைதானத்தில் ஏராளமான மக்கள் கூட்டமாகக் கூடினார்கள். சக்கரியாஸ் தனது கழுதையுடன் வந்தான். வேலையாள் புற்கட்டை ஒரு புறத்தில் வைத்தான். பிறகு நற்கருணைப் பவனி கோயிலிலிருந்து வந்தது. அந்தோனியார் பக்திப் பரவசத்துடன் திவ்விய நற்கருணையை ஏந்தி வந்தார்.

43. சக்கரியாஸ் தன் கழுதையை, திவ்விய நற்கருணை, புற்கட்டு இவற்றிற்கு மத்தியில் கொண்டுபோய் விட்டான். எல்லோருடைய கண்களும் கழுதையின் பக்கம் திரும்பின. அக்கழுதை ஒரு வினாடி கூட தாமதிக்காமல், புல்லைத் திரும்பிக்கூட பார்க்காமல் திவ்விய நற்கருணையை நோக்கிச் சென்றது. சிறிது தொலைவில் இருக்கும் போதே, ஆராதனை செய்யும் பாவனையில், மரியாதையுடன் முழந்தாளிட்டது.

44. இதைக்கண்ட சக்கரியாஸ்கூட கொஞ்சமும் தயங்காமல், தன் கழுதையின் அருகிலேயே முழந்தாளிட்டு, தன் நெஞ்சில் பிழைதட்டிய வண்ணம், திவ்விய நற்கருணையை ஆராதித்தான். அங்கு குழுமியிருந்தோர் அனைவரும் நன்றிக் கீதங்களும் ஆராதனைப் பாடல்களும் பாடத் தொடங்கினர். (தொடரும்)



## கொஞ்சமாச் சிரிங்க...!



ஒருவர்:- என்ன அந்த ஆள் "தினமும் நான் காலாட்டிக் கொண்டு இருந்து சாப்பிடுவேன்" என்கிறார். அவர் பெரிய பணக்காரனா?
மற்றவர்:- ஒண்ணுமில்லை! அவர் நெசவுத் தொழில் செய்கிறவரு. அதுதான் அப்படிச் சொல்கிறார்.

***********

மேரி :- தம்பி இந்த தேங்காய் என்ன விலை?
வியாபாரி :- பதினைந்து ரூபா. மேரி :- குறையாதா.....?
வியாபாரி :- திருவினால் குறையும்.......!

*ராஜன் நடராஜன், முருகன் கோவிலடி, கீரி, மன்னார்.*

மாணவன்: ரீச்சர் நேற்று உங்களை தியட்டரில் கண்டேன்.
ரீச்சர்: என்னன்டு என்ன அவ்வளவு சனத்துக்க கண்டாய்?
மாணவன்: நீங்க நேற்று வந்திருந்தது என்ர அப்பாவுடன்தான்.

*அ. பற்றிசியா, கன்னாட்டி, அடம்பன்.*

### என்ன எழுதியிருந்தது?

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நண்பர் ஒருவரைப் பார்க்கச் சென்றார் அவர். அவர் உள்ளே செல்லும் மட்டும் நல்ல சுகமாக இருந்த அந்த நோயாளி நண்பர் திடீரெனத் துடிக்கத் தொடங்கினார். துடிக்கத் தொடங்கியவர் ஏதோ சொல்ல ஆசைப்பட்டார். எனவே அவருக்கு ஒரு கடதாசியும் பேனாவும் கொடுக்கப்பட்டது. அதில் ஏதோ எழுதியவர் சிறிது நேரத்தில் இறந்துவிட்டார். அந்தக் கடதாசியை நண்பர் தனது பையினுள் வைத்துக்கொண்டார். சாவுச் சடங்கு முடிந்த பின்பு நண்பர் அந்த இறந்தவரின் மனைவியிடம் "எனது நண்பர் சாவுமுன் உங்களுக்கு ஏதோ எழுதிக் கொடுத்தார்" என்று அதை அவளிடம் கொடுத்தார். அதைப்பார்த்த அவள் உடனே மயங்கி விழுந்தாள். உடனே அருகில் நின்றவர்கள் அந்தக்கடதாசியை எடுத்து வாசித்தார்கள் அதில் "டேய் மடையா தள்ளிப்போடா நீ எனது ஒட்சிசன் குழாயை மிதித்துக்கொண்டு நிற்கிறாய்" என எழுதியிருந்தது.

*பீ. நொய்லின் லியோன், அரிப்பு*

ஒருத்தி: மாப்பிள்ளையின் போட்டோவைக்கூட பார்க்காமல் எப்படி கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சிட்டா?
தோழி: போடி! சூப்பராய் சமைப்பாராம் அதைவிட ஆணுக்கு வேற என்ன வேணும்!

***********

ஒருவர்: தரகரே மாப்பிள்ளை பிஸ்னஸ் செய்றார்னு சொல்லி ஏமாத்திட்டிங்களே...!
தரகர்: அவர் கொழும்பில் சுண்டல் விக்கிறாரு சிட்டியிலே அது ரொம்ப பெரிய பிஸ்னஸ்தானே....!

*எஸ். மேர்சி தனுஜா, பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்*

ஒருவர்:- நம்ம ஊர்ல யாரோ ஒருத்தன் கிணத்துல விழுந்து தீக்குளிச்சிட்டான்..
மற்றவர்:- என்ன உளர்றீங்க... கிணத்தில விழுந்து எப்படித் தீக்குளிக்க முடியும்?
ஒருவர்:- யோவ் ............ அது பெற்றோல் கிணறடா....

*அ.சுயா, புதுக்கமம், உயிலங்குளம்.*

### வாழ்த்துவோம்



ஆசிரியர்: பிள்ளைகளே! எவ்வாறு ஒருவரை வாழ்த்த வேண்டும் என்பதை இன்று உங்களுக்கு நான் நிகழ்த்தி காட்டுகின்றேன் என்றார். ஆசிரியர் ஒரு மாணவனை அழைத்தார். மாணவனைப் பார்த்து இவ்வாறு கூறினார். "நீர் ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி பேரறிஞனாக நீடுழி வாழ வாழ்த்துகிறேன்" என்றார் ஆசிரியர். மாணவனை எழுப்பிய ஆசிரியர் "நான் கூறியதுபோல் என்னையும் நீர் விரும்பியபடி வாழ்த்தும் கேட்போம்" என்றார். அப்போது அந்த மாணவன் ஆசிரியரை பார்த்து, "பல்லாண்டு காலம் பொல்லூன்றிப், பல் இல்லாமல் வாழ்க!" என்றான். வகுப்பே சிரித்துவிட்டது.

*S. சோபா சயாந்தினி, தரம் 09, வ[illegible]ர்ணாகு[illegible]ளம், ஆட்காட்டிவெளி*

முதலாளி:- தோட்டத்துச் செடிகளுக்கு எல்லாம் தண்ணீர் ஊத்திற்றியா?
தோட்டக்காரன் :- ஐயா! நல்ல மழை பெய்துகொண்டிருக்கு
முதலாளி :- அதனால் என்ன, குடையைப் பிடித்துக் கொண்டு நீர் ஊற்ற வேண்டியது தானே.....

***********

நோயாளி :- டொக்டர் எனக்கு எதைப் பார்த்தாலும் இரண்டு இரண்டாகத் தெரியுது
டொக்டர் :- கவலைப்படாதீங்க இந்த ஊசி போட்டவுடன் எல்லாம் சரியாகிவிடும்.
நோயாளி :- டொக்டர் ஊசி போடறதுக்கு எவ்வளவு பணம் தரணும்
டொக்டர் :- பத்து ரூபாய்தான்.
நோயாளி :- இந்தாங்க.
டொக்டர் :- என்ன! ஐந்து ரூபாய்தான் தாறீங்க
நோயாளி :- இல்லியே ரெண்டு ஐந்து ரூபாய் கொடுத்தேனே....

*த. டிலைக்ஷன், தரம் 9, சென். மேரீஸ் வீதி, அடம்பன்,*




### தியாகம்

அகிலத்தில் மானிடர் நாம் அனாதையாய் நிற்பதனால்
தந்தாய் உம் தாயை எம்மவரின் தாயாக!
ஏழை எளியவர் வறுமையில் வாடுவோர்
வளமான வாழ்வு பெற தந்தாய் உம் அன்னையை!
அன்பின் சிகரமாய் ஏழையரின் தோழியாய்
அன்னை திரேசாவை அளித்தாய் இவ்வுலகிற்கே!
இப்புவியில் நானும் மானிடனாய்ப் பிறந்திடவே
தியாகத்தின் வேள்வியிலே தினமும் குளிக்கின்ற
அன்னையைத் தந்தாய் அன்புடன் நன்றி அப்பா!

*சிறகுடைந்த இளம் சிட்டு பி. பெனில்டஸ், தோட்டவெளி, மன்னார்*

### நம்பிக்கை



மானிடனே கலக்கமா
உழைப்பில்லை என்ற ஏக்கமா
ஊதியம் போதவில்லை என்ற துக்கமா
வாழ வழியில்லை என்ற நெருக்கமா

பல கைகள் உன்னை வெறுத்தாலும்
உன் கைகள் உடைக்கப்பட்டாலும்
நம்பிக்கை என்ற கையைப் பயன்படுத்தி
வாழ்க்கை என்ற ஓடத்தை ஓட்டிடு.

*நே. சிந்துஜா, தரம் 13, கலைப்பிரிவு, மன். பரிகாரிகண்டல் ம.வி.*


### ஒற்றுமை

பள்ளிப் பருவமதில் பாலர் எம் உள்ளங்களில்
அன்பு, பகிர்வு, ஒற்றுமை எனும் பண்புகளை எம்
வாழ்வில் நாம் கடைப்பிடிப்போம்.

ஓர் குலமாய் நாம் கூடி ஒற்றுமை என்னும் சங்கிலியால்
ஒருங்கிணைந்து வாழ்ந்திடுவோம்
ஒன்றுகூடி உழைத்திடுவோம்

*டே. டல்சி தரம் 7 B, திருக்குடும்ப கன்னியர் மடம், நானாட்டான்*

### என்றுமே நிலைகுலையேன்



சோறு போட தந்தை இல்லை
பட்டினியை நான் உணர்ந்தேன்.
அன்பு காட்ட அன்னை இல்லை
துன்பத்தில் துவண்டு நின்றேன்.
பராமரிக்க யாருமில்லை
கண்ணீரில் மூழ்கி நின்றேன்.
இறை அன்பு என்னுடனே – எனவே
என்றுமே நிலை குலையேன்.

*வி. அருணா, வாழ்க்கைப் பெற்றான் கண்டல், முருங்கன்.*

### தம்பி உனக்காக

கண்ணியத்தைக் காக்க வேண்டும் கடமைகளைச் செய்ய வேண்டும்
புண்ணியங்கள் பேண வேண்டும் புகழ் பெற்று வாழ வேண்டும்
கண்ணிரண்டாய் பெற்றவரைக் கனிவுடன் நீ போற்ற வேண்டும்
எண்ணியவை யாவுமிங்கே புண்ணியமாய் மாற வேண்டும்

ஆட்சிகளை மதிக்க வேண்டும் ஆளுமைகளை வளர்க்க வேண்டும்
பொய்ச்சாட்சிகளை மறுக்க வேண்டும் புனிதனென வாழ வேண்டும்
உயர்ச்சிகளை அடைய வேண்டும் உன்னதமாய் வாழ வேண்டும்
தளர்ச்சியானது நீங்க வேண்டும் எங்கும் புகழ் ஓங்க வேண்டும்

பட்டங்கள் பெற்று நீயும் பார்போற்ற வாழ வேண்டும்
திட்டமிட்ட வாழ்க்கை தன்னை திறனுடனே அமைக்க வேண்டும்
பட்டினியை ஒழிக்க வேண்டும் பாடுபட்டு உழைக்க வேண்டும்
கட்டுப்பாடும் கண்ணியமும் கடமையதும் காக்கவேண்டும்

உத்தமனாய் வாழ வேண்டும் உலகமதை மதிக்க வேண்டும்
சத்தியத்தைக் காக்கவேண்டும் சாதி பேதம் ஒழிக்க வேண்டும்
சுத்தமானதைப் பேண வேண்டும் சுகம் பெற வாழ வேண்டும்
உத்தமனாய் ஊர் போற்ற நீ இத்தனையும் பேண வேண்டும்

*பி. டிறோனி றெவ்வல், முள்ளிக்குளம், சிலாபத்துறை.*


### சுனாமி

கடல் அன்னையே நெடுநாளாய் நீ தவமிருந்தாய்
உன் குழந்தைகளைப் பறிப்பதற்கா?
உறவுகள் இல்லையென்றா
எம் உறவுகளை நீ பறித்தெடுத்தாய்
கடலின் உப்பா கண்ணீரின் உப்பா
மிகச் சிறந்தெனப் பார்ப்பதற்கா...?
ஆறடி நிலம் சொந்தம் என்றார்கள்
அதையும்கூட நீ பறித்துவிட்டாயே
உன்னைப் பார்த்து அன்றொருநாள் இசை என்றேன்.
இன்றுதான் தெரிந்துகொண்டேன்
எம்மைக் கொல்ல நீ ஒத்திகை பார்த்ததென்று
சுனாமியே இனியும் வேண்டாம் உன் சீற்றம்
உன்னைக் காட்டிலும் கண்ணீரின் சீற்றம் வேகமானது
ஒதுங்கு அது உனக்கு நல்லது.

*இ. டெரன்ஸ், இறம்பைக் குளம், வவுனியா.*

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் 25வது ஆண்டு நினைவு 01.09.1980 - 01.09.2005

# தமிழால் உலகாண்ட
# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்



"தனிநாயகத்திற்கு ஒரு சபாநாயகம் தேவையில்லை. அவா ஒரு தனிநாயகம். தனியாகம் பேசிற்று என்றால் தமிழ் உலகமே பேசியது என்பது பொருள். தமிழ் உலகின் சின்னம் தனிநாயகம்" என்று 1952லே யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடைபெற்ற தமிழ் மாநாட்டில் சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை செப்பிய செம்மொழி தனிநாயகம் அடிகளாரின் தனிச் சிறப்பினை தரணிக்கு எடுத்துக்காட்டுகிறது. தனிநாயகம் என்ற பெயரில் ஏதோ எளிதில் விளக்கமுடியாத தனிக் கவர்ச்சி இருந்தது. எனவேதான் நம் மூதறிஞர் இராஜாஜிகூட, "I am always fascinated by the name Thaninayagam" ('தனிநாயகம் என்ற பேரைக் கேட்கும்போதெல்லாம் நான் எப்போதும் கவரப்படுகிறேன்') என்று தன்னை மறந்து கூறிய கூற்று இங்கு மகிழ்வோடு நினைவு கொள்ளத்தக்கதாகும்.

## பாரதி வழியில் தனிநாயகம் அடிகள்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்றும் "திறமான புலமையெனில் பிறநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்றும் பாடிய பாரதியின் பாடல்களுக்குச் செயல் வடிவம் கொடுத்து உலகத் தமிழ் உள்ளங்களை ஈர்த்த பெருமகனாக விளங்கியவர் தனிநாயக அடிகளார்.

தமிழகத்திற்கு அடுத்த நிலையில் தமிழுக்கு வாழ்வும் வளமும் ஊட்டிய பெருமை ஈழத்திற்கு உண்டு. குறிப்பாக 19ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி தொட்டு இந்நூற்றாண்டு வரை சிறப்பு மிக்க பணிகளை ஆற்றிய பெருமை ஈழத்தமிழ் அறிஞர்களையே சாரும். இப்பேரறிஞர்கள் வரிசையில் இங்கே நாம் நினைவு கொள்ளவேண்டிய ஈழத்துக் கிறிஸ்த்தவ அறிஞர்கள் இருவர். ஒருவர் ஞாலம் புகழும் நல்லூர் ஞானப்பிரகாச அடிகளார். மற்றையவர் தமிழால் உலகாண்ட தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்.

தனிநாயக அடிகளார் நெடுந்தீவைச் சேர்ந்த நாகநாதன் கணபதிப்பிள்ளைக்கும், கரம்பனைச் சேர்ந்த சிசில் இராசம்மா வஸ்தியாம்பிள்ளைக்கும் 1913ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் நாள் மகனாகப் பிறந்தார்.

இவர் தந்தையின் இயற்பெயர் நாகநாதன் கணபதிப்பிள்ளையாக விளங்கியபோதும், கிறிஸ்தவம் தழுவியபோது ஹென்றி ஸ்டானிலோஸ் (Henry Stanislaus) என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார்.

## காஞ்சி மரபில் தோன்றிய அடிகளார்

தனிநாயக அடிகளாருக்கு இளமையில் சூட்டப்பட்ட பெயர் சேவியர் என்பதேயாகும். உரோம் நாட்டில் அவர் பயில்கின்ற போது ஏற்பட்ட தனித்தமிழ்ப் பற்றுக் காரணமாக சேவியர் என்ற பெயருடன் தனிநாயகம் என்ற பெயரையும் சூட்டிக்கொண்டார். தனிநாயகம் என்பது இவரின் மரபுவழிப் பெயராகும்.

தமிழகத்தில் உள்ள காஞ்சிபுரத்திலிருந்து ஈழத்திற்குக் குடிபெயர்ந்த தனிநாயக முதலியாரின் மரபின் வழிவந்தவர் இவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தனிநாயக அடிகளாரின் தொடக்கக் கல்வி ஊர்காவல்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் தொடங்கியது. பின்பு அவர் தனது மேல்நிலைப் படிப்பை 1923ஆம் ஆண்டு தொட்டு 1930ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணப் பத்திரிசியார் கல்லூரியில் (St. Patricks College) பயின்றார்.

1928இல் ஈ.எஸ்.எல்.சி. (ESLC) தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற இவர் 1930இல் நடைபெற்ற கேம்ரிஜ் தேர்வில் ஆங்கிலத்திலும், வரலாற்றிலும் திறமையுடன் தேர்ச்சி பெற்றார். பின்பு ஆறு மாத இடைவெளியில் இலத்தீன் பயின்று மெட்ரிகுலேஷன் தேர்விலும் மிகச்சிறந்து விளங்கினார்.

## துறவறத்தில் காலடி

தனது 15ஆம் வயதிலேயே (Resurrection of Tolstoy) டால்ஸ்டாயின் "உயிர்ப்பு' என்ற நூலைப் பயின்றதன் விளைவாக துறவறத்தில் நாட்டம் கொண்டு கிறிஸ்துவக் கல்லூரியில் சேர்ந்தார். கொழும்பு பொரளையிலுள்ள புனித பேர்னாட் பெரிய குருமடத்தில் 1931ஆம் ஆண்டு முதல் 34ஆம் ஆண்டு வரை மெய்யியல் பயின்றார்.

## உலகத் தமிழ் மாநாடு

இவர் கல்லூரியில் பயில்கின்றபோது கவிஞர் தாம்ஸன் எழுதிய "Hound of Heaven" (விண்ணகத்தின் வேட்டை நாய்) என்ற கவிதையை விவிலியத்தின் ஒரு பகுதியோடு ஒப்பாய்வு செய்து இவர் நிகழ்த்திய ஆங்கிலச் சொற்பொழிவு என்றும் நினைவு கொள்ளத்தக்க அளவிற்கு நிலைத்ததோர் தாக்கத்தை ஏற்படுத்தியது. இத்தாலியிலும், இங்கிலாந்திலும் இறையியல் பயின்று இந்தியா சென்று இறைபணி தொடங்கி பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முறையாக தமிழ் பயின்று பின்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். அத்தோடு உலக நாடுகள் பலவற்றிற்கும் தமிழ்த் தூது சென்று தமிழின் தொன்மையையும், பெருமையையும் உலகோருக்கு எடுத்துரைத்து உலகம் போற்றும் தலையாய தமிழ்க் குடிமகனாக தனிநாயக அடிகளார் விளங்கினார். அடிகளின் பணி பல்துறைப் பணியாக விளங்கியது. எனினும், அவற்றின் தலையாயது அவரின் தமிழ்ப் பணியும், சமயப் பணியுமே ஆகும்.

இவர் ஆக்கிய பணிகளில் இவருக்கு அழியாத புகழைத் தேடித்தந்தது. இவர் 1964ஆம் ஆண்டு மலேசியாவில் கூட்டிய அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடேயாகும். உலகில் மொழிக்கென்று முதல் மாநாடு கூட்டிய பெருமை இவரையே சாரும். 1964இல் தமிழ் ஆராய்ச்சிக்கு இவர் வித்திட்டதின் விளைவு 1968இல் தமிழ் நாட்டின் தலைநகராம் சென்னையிலும், 1970இல் பிரெஞ்சு நாட்டு தலைநகர் பாரிஸிலும் 1974இல் யாழ்ப்பாண நகரிலும், 1981இல் தமிழ்நாட்டின் நான்மாடக்கூடலாக விளங்கும் மதுரையிலும், தமிழுக்கு உலகளவில் மாநாடு நடாத்தக் காரணமாய் அமைந்தது.

## புதுவடிவம் பெற்ற பூங்குன்றனாரின் கூற்று

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுப் புலவர் பூங்குன்றனாரின் பொருள் பொதிந்த கூற்றை இன்றைய நூற்றாண்டின் தேவைக்கேற்ப புதுவடிவம் கொடுத்து மலேசியா முன்னாள் தலைமை அமைச்சர் துங்கு அப்துல் ரஹ்மான் இச்சொற்றொடரை தமிழில் உச்சரிக்கச் செய்ததோடும், "Every Country is my Country, every man is my kinsmen" என்று ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துக் கூறுகின்ற நிலையை உருவாக்கிய பெருமை தனிநாயக அடிகளாரையே சாரும்.

இம்மாநாட்டைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய முன்னாள் மலேசியத் தலைமை அமைச்சர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் பின்வருமாறு நம் தனிநாயக அடிகளாரைப் பற்றிக் குறிப்பிட்டார். "The department of Indian studies is fortunate in having as its head a person who is not a narrow specialist, but one who commands a knowledge of several Languages. I refer to Prof. Thaninayagam Dean of the faculty of Arts. No doubt his leadership has been one of the reasons for your choice of the University of Malaya as the venue for your conference"

(எமது பல்கலைக்கழகத்தின் இந்தியத்துறை பன்மொழிப் புலமை பெற்ற பரந்த மனப்பான்மை கொண்ட ஓர் அறிஞரை தலைவராகப் பெற்றது இப்பல்கலைக்கழகத்தின் பெரும் பேறாகும். இங்கு நான் பேராசிரியர் தனிநாயக அடிகளையே குறிப்பிடுகின்றேன். அவருடைய தலைமைதான் இந்த மாநாட்டை இந்தப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு வழியமைத்ததாகும்)

தனிநாயக அடிகளார் உலகம் சுற்றி வந்த அறிஞர், உலக மொழிகள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்த பேராசிரியர். குறுகிய நோக்கிற்கு என்றும் இடம்கொடாது உலகம் தழுவி வாழ விரும்பியவர். அதேவேளையில், தன் இனத்தின் தனித்துவத்தையோ, தமிழ் மொழியின் தனித்துவத்தையோ அழிக்க அவர் ஆயத்தமாய் இருந்ததில்லை.

"மலேயா பல்கலைக்கழகத்தின் இந்தியத்துறையின் பேராசிரியராய் இருக்கின்ற தனிநாயக அடிகளாரைப் பார்த்து உங்கள் சமயம் எதுவென்று கேட்டால் கிறிஸ்தவம் என்பார். உங்கள் ஊர் எது என்று கேட்டால் யாழ்ப்பாணம் என்பார். உங்கள் மொழி எது என்று கேட்டால் தமிழ் என்பார். அவ்வளவிற்கு தமிழ் உணர்வு கொண்டவர் அடிகளார். அந்தத் தமிழ் உணர்வு எல்லோருக்கும் வரவேண்டுமென்பார்" என்று தனிநாயக அடிகளாரின் தனிச் சிறப்புப் பற்றித் தன் "திராவிட நாட்டின் பொங்கல் மலரில்" அறிஞர் அண்ணா அன்று குறிப்பிட்டது இங்கு நினைவுகொள்ளத்தக்க இனிய செய்தியாகும்.

## அடிகளாரின் அருந்தமிழ்ப் பற்று

அவரின் மொழிப்பற்றுக்கு எடுத்துக்காட்டாக உலகப் புகழ் பெற்ற தொல்காப்பியம் பற்றி அவர் உரைத்த கருத்து இதோ:

"வேர்ஜில் என்னும் இலத்தீன் புலவரை ஏந்திப் படித்து மகிழ்ந்துள்ளேன். எகிப்து நாட்டின் தொன்மை வாய்ந்த ஏடுகளையும், நாகரிகச் சின்னங்களையும் புரட்டிப் பார்த்து வியந்துள்ளேன். அமெரிக்கா இன்ஜா அஸ்தெக் பண்பிற்கு அறிகுறிகளான கோட்டைகளையும் கட்டிடங்களையும் கண்டு களித்துள்ளேன். எனினும், தொல்காப்பியத்தை என் கைகளில் ஏந்தி விரிக்கும்போது எனக்கு ஏற்படும் - அத்தகைய உளக்கிளர்ச்சி வேறு எந்த நூலிலும் ஏற்படுவதன்று. நம் பண்டைத் தமிழ் நூல்களை தொட்டதும் பல்லாயிரம் ஆண்டுகளாகத் திகழ்ந்து, பண்பில் வளர்ந்து திருந்திய இலக்கிய இலக்கணப் பயிற்சி நம் கண்முன் நிற்கிறது" என்பர் தனிநாயகம் அடிகளார்.

தமிழன் தன்மானத்தோடு வாழவேண்டின் - அவனை உலகம் மதிக்கவேண்டின் - அவனிடம் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று இருத்தல் வேண்டும். இவற்றைப் பெற்ற நிலையில் உலகம் தழுவுகின்ற உயர் பண்பும் அவனிடம் குடிகொள்ள வேண்டுமென்று அடிக்கடி அடிகளார் கூறுவதுண்டு.

அடிக்கடி தமிழ்ப் பண்பாட்டின் தனிப் பண்பினை வலியுறுத்தி வந்த அடிகளார் "தமிழ்ச் சால்பு" என்ற காலாண்டு இதழையும் சில காலம் நடாத்தி தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்பினை தரணி அறியச் செய்தார்.

உலக மொழிகள் பலவற்றைப் பயின்றதால் ஒவ்வொரு மொழியின் சிறப்பியல்புகளையும், அடிகளார் கண்டு மகிழ்ந்ததுண்டு. ஆனால், பக்திக்குரிய மொழியாகத் தமிழே விளங்குவதை அவர் உணர்ந்து பின்வரும் முறையில் தமிழின் தனிச் சிறப்பினை எடுத்துக் கூறுகிறார்.

"ஆங்கிலத்தை வாணிபத்தின் மொழியென்றால், பிரெஞ்சு தூதின் மொழியாகும். இலத்தீன் சட்டத்தின் மொழியென்றால், ஜேர்மன் தத்துவத்தின் மொழியாகும். இத்தாலி காதல் மொழி என்றால் தமிழே பக்தியின் மொழியாகும். தமிழில் இரங்குவதுபோல் வேறு எந்த மொழியிலும் இரங்க முடியாது".

தனிநாயக அடிகளார் புலமையின் ஊற்றாக விளங்கி மொழித்துறை, இலக்கியத்துறை, சமயத்துறை ஆகிய துறைகள் அனைத்திலும் தன் தனி முத்திரையைப் பதித்துள்ளார். அதேவேளையில், அவர் ஒரு அரசியல் அறிஞராகவும் விளங்கிய பெருமகனாவார். 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதையடுத்து தமிழனின் அரசியல் வாழ்வு வளம்பெற தம்மால் இயன்ற அனைத்தையும் செய்தார். சிங்களம் மட்டும் சட்டம் மாற்றி அமைக்கப்பட்டு தமிழுக்கும் ஒத்த உரிமை வழங்கவேண்டுமென வேண்டி எஸ். டுபிள்யூ .ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் உரையாடல் நடத்தினார்.

## அறப் போர்க் களம் கண்டவர்

தந்தை செல்வாவின் தலைமையில் கொழும்பு காலி முகத்திடலில் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற அறப்போராட்டத்தில் அடிகளார் கலந்துகொண்டார். இலங்கையில் எழுந்துள்ள இனச்சிக்கலைத் தீர்க்க இணைப்பாட்சி அமைப்பே ஏற்றதெனக்கூறி *இணைப்பாட்சி அரசியல்* என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய உரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அத்தோடு Language and Liberty in Ceylon (இலங்கையில் மொழியும் சுதந்திரமும்) என்ற தலைப்பில் வெளியிட்ட சிறு நூலும் அவரின் மொழியுரிமை பற்றிய ஆழ்ந்த அரசியல் அறிவிற்குத் தலை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## அடிகளார் குறிப்பு

அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தேவையென்பதை 1970 ஆண்டு பாரிஸில் நடைபெற்ற மூன்றாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தீர்மானமாகக் கொண்டுவந்து நிறைவேற்றியவர் தனிநாயகம் அடிகளார். இத்தீர்மானத்தின் விளைவாக உருவம்பெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி நிறுவனம் இன்று தமிழ்நாட்டின் அடையாறில் பொலிவோடு விளங்கி பயன்பல தந்துகொண்டிருக்கின்றது.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் மூழ்கித் திழைத்த தனிநாயக அடிகளார், காலத்தின் கருத்தோட்ட வளர்ச்சிக்கேற்ற வரலாற்று நாவல்கள், சிறுகதைகள், தொடர்கதைகள் ஆகிய துறைகளிலும் கவனம் செலுத்தினார். "எழுத்தாளர் கல்கி" என்ற நூலில் *கல்கியின் வரலாற்று நாவல்கள்* என்ற தலைப்பில் அடிகளார் வரைந்துள்ள கட்டுரை வரலாற்று நாவல்களில் அவருக்கிருந்த ஈடுபாட்டினையும், கல்கி ஆசிரியர் அவரது உள்ளத்தை எவ்வளவு தூரம் கவர்ந்துள்ளார் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

தனிநாயக அடிகளாருக்குத் தமிழ்மீது தணியாத காதல். ஆனால் அதேவேளையில் "English is a window to world culture" (உலகப் பண்பாட்டின் பலகணி ஆங்கிலம்) என்று ஒரு காலத்தில் மூதறிஞர் ராஜாஜி கூறிய கூற்றையும் தனிநாயகம் அடிகளார் மறக்கவில்லை. நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி, உலகின் இணைப்பு மொழியாக விளங்குகின்ற ஆங்கிலத்தை புறக்கணித்து நாம் முன்னேற்றம் காணமுடியாது.

இதனை அடிகளார் மிக்க துயர்தோய்ந்த நிலையில் பின்வருமாறு கூறுகின்றார். அனைத்துலகக் கூட்டங்களிலும் ஒப்பியல் கருத்தரங்குகளிலும் தமிழறிஞர்கள் ஒதுங்கி நிற்கும் தன்மை தமிழறிஞர்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும் இடையே ஒருவித தாழ்வு மனப்பான்மையைக் கொண்டுவந்திருக்கிறது. நமது பல்கலைக்கழகங்களில் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்தவர்களிலேகூட நவீன முறைகளிற்குச் சற்று எதிர்ப்புணர்ச்சியிருப்பதாகத் தெரிகின்றது. அவர்கள் பல்கலைக்கழகங்களில் தமக்குள்ளே ஒரு தனித்தீவை உண்டு பண்ணுகிறார்கள். தமிழர்களைத் தாழ்த்துவதற்கு வழி வகுக்கும் (Bolmal) வகுப்புக்களை நம் அடிகளார் மிக வன்மையாகச் சாடுவதுடன் தமிழர்கள் தம்மை எப்படி உயர்த்திக்கொள்ள வேண்டும் என்பதைப் பின்வருமாறு கூறுகின்றார்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### புனிதனாக .....!

விளக்கு ஒன்று அணைந்தது
வீடு முழுவதும் இருட்டானது
மேற்கே சூரியன் மறைந்தது
பாதி உலகம் இருண்டது!
மாமனிதனாய் வாழ்ந்த பாப்பிறை
இரண்டாம் ஜோண் போல் மறைந்தாரே!

இன்னல் இடர்கள் நடுவே
இறை இயேசுவின் துணையுடன்
இருபத்தா றாண்டுகளாக
இழைத்திடாத மனிதனாய்
இன்பமுடனே திருச்சபையினை
இப்பாரினிலே வழி நடத்தினார்!

நாடு மத மொழி சமய
வேறு பாடு எதுவுமின்றி
நாலு பேருக்கு நன்மை செய்திட
நாடோடியாக தனை மாற்றி
நாடு கடந்த சேவை செய்தார்
நானிலம் போற்றிடும் நாயகனாய்!

இறைவனை நாடும் மனிதர் நலம்
காக்கின்ற கடமை நமதேயென
இடர்கள் பல தாண்டி
எதிர்ப்புக்கள் பல ஏற்று
உடலிலே குண்டு பாய்ந்தும்
ஓடிச் சென்றீர் சிறைவாசல்
உம் எதிரிக்கும் மன்னிப்பளித்திடவே!

கண்டிருக்கவே மாட்டான் தன் வாழ்விலே
உம்மைக் கொன்றுவிடத் துடித்தவன்
இப்படியொரு மனிதனை இவ்வுலகிலே!

பயணித்த நாடுகளெங்குமே
மக்கள் மனதிலே மங்கிடா ஒளியாய்
பண்புடனே பணிந்து நின்றீர்
மன்னித்து வாழும் பண்பினை.

கருவிலே உண்டான சிசுமுதல்
கல்லறையேகிடும் காலம் வரை
மனிதன் மனிதனாக மதிக்கப்பட
மதியாதார் மா நாடுகளிலும்
மணியாக முழங்கினீர் மகிழ்வுடனே
மனிதத்தை வாழ வைத்த நீர்
புனிதனாகவே வாழ்ந்து சென்றீர்.

*அருட்சகோ. லக்கோன்ஸ் பிகிறாடோ,*
*புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

### இளைஞனே

சிந்தைதனை சந்தையிடும்
விந்தை உலகினிலே
மந்தைபோல் இருக்கிறாய்.

பூமி எனும் பந்தை
புரட்டிப் போடுது விந்தை
என்ன செய்கிறது உன் சிந்தை?
அதற்குள் ஆகிவிடுகிறாய்
குழந்தைக்கு தந்தை!

பாய்ந்து வரும் அலையும்
தேய்ந்து போகும் பிறையும்
பறந்து வரும் காற்றும்
உதிரும் கதிரவன் கதிரும்
ஓய்வதில்லை இளைஞனே!

இளமையிலே பயந்து
வீட்டுக்குள் சிதைந்து
விந்தை உலகினுள் புதைந்து
கந்தைத் துணிபோல்
கட்டுண்டு இருக்கிறாய்.

அறியாததை அறிந்து
திறமைதனைப் புரிந்து
புதிய உலகு படைப்போம்
விரைந்து வா எழுந்து வா.

நினைத்தால் எல்லாம் உனக்குள்ளே
வாழ்க்கை உனது கையிலே
வெற்றி விடா முயற்சியிலே
தோல்வி இல்லை சரித்திரத்தில்.

வீரமும் தீரமும்
பணமும் பகட்டுமல்ல வாழ்க்கை
எதிலும் வேகம் வேண்டும்
அதிலும் விவேகம் வேண்டும்.

அந்திப் பொழுதில்
சந்தியில் குந்தி இருப்பதை விட்டு
சற்றேனும் சிந்தி இளைஞனே
முதுமை வரும் முந்தி
முழுவதையுமே சந்தி இளைஞனே.

வாழ்க்கையில் வேண்டும் இலட்சியம்
இல்லேயேல் எல்லாம் பூச்சியம்
இதற்கு இளமைதான் சாட்சியம்
இனி உந்தன் இராச்சியம்
உன் திறமைதனை விளக்கு
இவ்வுலகை நன்கு கலக்கு.


*இளம் எழுத்தாளன் வை. கஜேந்திரன்,*
*எமில்நகர், மன்னார்*

---

## மன்னா சிறுகதை

# சமயோசித யுத்தி

**ஞா. நகோமி, ஆலங்குளம், வட்டக்கண்டல்**



மாலை மணி சரியாக ஐந்து. நிர்மலா தன் கணவன் வரும் நேரம் வந்துவிட்டதே என்று தான் படித்துக்கொண்டிருந்த 'சமயோசித புத்தி' என்ற புத்தகத்தை அடையாளம் வைத்துவிட்டு சமயலறைக்குள் புகுந்து உப்புமா செய்தாள். பின்னர் தன் கணவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய கணவன் பீற்றர் அலுவலகத்தில் இருந்து தன் மனைவிக்குப் பிடித்த ஒரேஞ்சும், பூச்செண்டும் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தான்.

கணவர் வந்தவுடன் நிர்மலா சிற்றுண்டிகளை தட்டில் வைத்துக் கொடுத்தாள். பீற்றர் சாப்பிட்டுக்கொண்டே "நிர்மலா, மத்தியானம் என்ன செய்துகொண்டிருந்தாய்?" என்று கேட்டான். நிர்மலா, "*சமயோசித புத்தி* என்ற புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன்" என்றான். பீற்றர், "சமயோசித புத்தியா? அதைப் படித்த உனக்கு சமயோசித புத்தி உண்டாகும் நிர்மலா. இரவு எனக்கு சமயல் செய்யாதே. தெரிந்தவர் ஒருவர் வீட்டில் விஷேசம். நான் அங்கு போக வேண்டும்" என்றான்.

நிர்மலா சமைத்துக்கொண்டே தன் கணவனுடன் பேசிக்கொண்டிருந்தாள். "நிர்மலா மணி என்ன" என்று கேட்டான். "ஒன்பது மணிதான் ஆகின்றது" என்றாள். "சரி சரி நான் போக வேண்டும்" என்று கூறி ஆயத்தமானான். நிர்மலா நீ சாப்பிட்டுவிட்டு கதவைத் தாளிட்டுக்கொண்டு இரு. நான் ஒரு மணி நேரத்தில் வந்துவிடுவேன்" என்று கூறிவிட்டு பீற்றர் தெருவில் போய் ஒரு ஆட்டோவில் ஏறிச் சென்றான். நிர்மலா கதவைத் தாழிட்டுக்கொண்டு சாப்பிட்டுவிட்டு இருந்தாள். ஆட்டோவில் செல்லும் பீற்றர் இரும்புப்பெட்டி சாவிக்கொத்தை ஆட்டோவில் தன் பக்கத்தில் வைத்துவிட்டு குறிப்பிட்ட இடம் வந்ததும் இறங்கினான்.

அங்கே நண்பர்கள் இவனை வரவேற்றனர். அந்த மகிழ்ச்சியால் சாவிக்கொத்தை மறந்து விட்டான். ஆட்டோக்காரன் சாவிக்கொத்தைக் கண்டான். அதை எடுத்து என்ன செய்யலாம் என யோசித்தான். அவன் உள்ளத்தில் ஏதேதோ எண்ணங்கள் ஊசலாடின. அவன் ஒரு முடிவிற்கு வந்தான். ஒரே ஓட்டமாக ஆட்டோவை பீற்றரின் வீட்டிற்குச் செலுத்தினான். வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினான். நிர்மலா, "யாரங்கே?" என்றாள். ஆட்டோக்காரன் "அம்மா! ஐயா அனுப்பினார்கள். கதவைத் திறவுங்கள்" என்றான். நிர்மலா கதவைத் திறந்து "என்னப்பா? ஐயா எங்கே? என்ன விஷயம்?" என்று கேட்டாள். ஆட்டோக்காரன் "அம்மா ஐயா அங்கே சினேகிதர் வீட்டில் இருக்கிறார். உங்களையும் அழைத்து வருமாறு அவருடைய சிநேகிதர்கள் தொந்தரவு செய்தார்களாம். ஐயா உங்களை நகைகளையெல்லாம் போட்டுக்கிட்டு நல்ல சேலையாய் உடுத்திக்கொண்டு வருமாறு சாவிக்கொத்தைக் கொடுத்தனுப்பினாங்க. சீக்கிரம் வாங்க" என்றான்.

நிர்மலா சாவிக்கொத்தைக் கண்டவுடன் அவன் சொல்வதை நம்பி நகைகளையெல்லாம் போட்டு மிகவும் அழகாக அலங்காரம் செய்துவிட்டு பின் வீட்டில் உள்ளவர்களிடம் கூறிவிட்டு ஆட்டோவில் ஏறிப் புறப்பட்டாள்.

ஆட்டோக்காரனுக்கு மிகவும் சந்தோசம். அப்போது மணி 10 இருக்கும். முன்கால் இருட்டு. ஆட்டோக்காரன் அந்த இடத்தை விட்டு வேறொரு பள்ளத்தாக்கு வழியாகப் போய்க்கொண்டிருந்தான். அவளைக் கொன்றுவிட்டு நகைகளைக் களற்றிக்கொண்டு ஓட வேண்டும் என்று எண்ணினான். ஆட்டோவை அப்படியே செலுத்தினான். அங்கே பீற்றர் சாப்பாடு முடிந்தபின் சாவியைக் காணாது திகைத்தான். தலை சுழன்றது. விரைவில் விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்கு வந்தான். வீடு பூட்டப்பட்டிருந்தது. அதைக்கண்டு அவன் மனம் கலங்கியது. பெரிய மோசடி நடந்து விட்டது எனக் கலங்கினான். பின்வீட்டில் போய் தன் மனைவி எங்கே என்று கேட்டான்.

"நீங்கள் அழைப்பதாக ஆட்டோக்காரன் சாவிக்கொத்தைக் கொடுத்துக் கூப்பிட்டான். அம்மா நகைகளையெல்லாம் அணிந்து கொண்டு உங்களிடம்தானே வந்தார்" என்று கூறினார்கள். அவன் மனம் கலங்கியது. "நகைகளுக்கு ஆசைப்பட்டு என் மனைவியின் உயிரை மாய்த்து விடுவானோ?" என்று கலங்கினான். கண்ணீரால் அவன் உடம்பு நனைந்தது. ஆட்டோவில் சென்ற நிர்மலா அந்த இடத்தை விட்டு வேறு வழியாக ஆட்டோ செல்வதையுணர்ந்து ஏதோ பெரிய ஆபத்துக்குள் சிக்கிவிட்டதை நினைத்துப் பயந்தாள்.

திடீரென அவளுக்கு ஒரு யுத்தி தோன்றியது. உடனே அவள் ஆட்டோக்காரனைப் பார்த்து "ஐயா போகின்றபோது பத்தாயிரம் ரூபா பணத்தைத் தருமாறு கேட்டார். நான் மறந்துவிட்டேன் வண்டியை வீட்டிற்குத் திருப்பு 10 நிமிஷத்திற்குள் போய் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு போவோம்" என்றாள். ஆட்டோக்காரன் ரொக்கமாக பத்தாயிரம் கிடைப்பதை ஏன் விட்டுவிட வேண்டும் என்று நினைத்தான். அவள் சொற்படியே ஆட்டோவை வீட்டிற்குச் செலுத்தினான்.

வீட்டை அடைந்ததும் நிர்மலா புலிவாயிலிருந்து தப்பிய மானினம் போல துள்ளி இறங்கி "நில் காசை எடுத்து வருகின்றேன்" என்று உள்ளே நுழைந்தாள். அங்கே தன் கணவன் கண்ணீர் சொரிந்து நிற்கக் கண்டாள். பீற்றர் மனைவியைக் கண்டவுடன் "நிர்மலா என்ன நடந்தது? இவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து எப்படி தப்பிவிட்டாய்" என்று கேட்டான்.

அவள் ரெலிபோனை எடுத்து போலிஸ் அதிகாரிக்கு அழைப்பு விடுத்தாள். பொலிசார் உடனே அங்கே வந்தனர். ஆட்டோக்காரனைக் கைது செய்தனர். பீற்றர் தன் மனைவியின் சமயோசித புத்தியை எண்ணி ஆச்சரியம் அடைந்தான்.

---

## தொடர் கட்டுரை - அங்கம் 30

### கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

**- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -**



பகுதி II வியாகுல பிரசங்கம் அளிக்கப்படுகின்ற பன்முக வடிவங்கள்

### 14. தவக்கால நோன்பின் தளர்வு:

மேற்கூறப்பட்ட விடயத்திலிருந்து மத்திய காலப் பகுதியில் தவக்காலமானது ஐரோப்பாவின் பெரும் பகுதிகளில் ஆறு வாரங்களை உள்ளடக்கியதாகவும், ஞாயிறு உட்பட எல்லாக் நாட்களும் நோன்பு நாட்களாகக் கொள்ளப்பட்டன. இங்கு ஆரம்பம் முதல் எல்லா இறைச்சி வகைகளும் விலக்கப்பட்டிருந்தது. மேலும் (Lacticinia) என்னும் உணவு வகை ஞாயிறு தினத்தில் விலக்கப்பட்டிருந்தது. நோன்பு நாட்களில் ஒரு உணவு மட்டும் அதுவும் மாலை நேரத்தில் மட்டும் உட்கொள்ள அனுமதிக்கப்பட்டது. எனினும் நோன்பு நாள் உணவு பி.ப. 3 மணியளவில் செய்யப்படும் செபம் மதியத்திற்கு மாற்றம் பெற்று தவக்காலத்தின் மதிய செபத்தின் பின்பு உணவு உட்கொள்ளும் மரபு வழக்கிற்கு வந்தது. எனினும் இவ்வாறான வழக்கிற்கு மறுப்பான காரணங்களும் முன்வைக்கப்பட்டன. அதேவேளையில் தவக்கால நோன்பின்போது, மதியத்தில் உணவு உட்கொள்வோர் நோன்பின் விதிகளை மீறவில்லை எனக்கொள்ளப்பட்டது.

தவக்கால நோன்பின் தன்மையின் மற்றொரு தளர்வாகக் கொள்ளப்பட்டது, நோன்பு நாட்களில் மாலையில் உட்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட எளிய சிற்றுண்டியாகும். இத்தளர்வு துறவு மடங்களில் மாலையில் வேலைக் களைப்புக் காரணமாக ஒரு மிடறு நீர் உட்கொள்ளலாம் எனவும் அனுமதிக்கப்பட்டது. இது படிப்படியாக மேலும் பல தளர்வு நிலைக்கு வழி வகுத்தது. சிறிய அளவு ஊணவாக அல்லது ஊட்டமளிக்கும் பானமாக உட்கொள்வது அனுமதிக்கப்பட்டது. இது நோன்பை மீறும் செயலல்ல எனத் தோமஸ் அக்வினார் உட்பட மேலும் சில இறையியலாளர்கள் கருத்தாகும். இது மேலும் தளர்வு பெற்று எட்டு அவுன்ஸ் உணவு உட்கொள்ளலாம் என்னும் நிலை வழக்கிற்கு வந்தது. இந்நிலை பிற்பட்ட காலங்களில் மேலும் தளர்வு பெற்றது. காலையில் தேனீர் அல்லது காப்பியுடன் சிறு துண்டு பாண் உட்கொள்ளும் சகிப்புடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தவக்காலத்திலேயே முதலில் ஞாயிறு தினத்திலும் பின்பு வாரத்தில் ஒரு நாள், இரண்டு நாட்கள், மூன்று, நான்கு, ஐந்து நாட்கள் இறைச்சி உண்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. நீண்ட காலமாக இறைச்சி விலக்கப்பட்டிருந்த பெரிய வியாழக்கிழமையிலும் இறைச்சி உண்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### பரிகார நாட்கள் பற்றிய இன்றைய நிலைப்பாடு :

இன்று இலத்தீன் திருச்சபையின் படிப்பினையின்படி, வருடத்தில் உள்ள எல்லா வெள்ளிக் கிழமைகளிலும் இறைச்சி உண்பது தவிர்க்கப்பட்டுள்ளது. எனினும் வெள்ளிக் கிழமைகளில் பெருவிழாக்கள் இடம்பெறுமாயின், இறைச்சி உண்பதற்கு விதிவிலக்கு உண்டு. விபூதிப் புதன் கிழமையிலும், பெரிய வெள்ளிக்கிழமையிலும் சுத்த போசனமும், (மாமிச தவிர்ப்பு) நோன்பு கடைப்பிடிக்கும் கடமை பதினெட்டு வயதிற்கும் அறுபது வயதிற்கும் உட்பட அனைவருக்கும் உண்டு. பதினான்கு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் சுத்த போசனம் தொடர்பான ஒழுங்கைக் கடைப்பிடிக்க கடமை உள்ளவர்கள். எனினும் இந்த வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களும் நோன்பு, மாமிசத் தவிர்ப்பு விதிகளைக் கடைப்பிடிக்க ஊக்கம் அளிக்கும்படி, குருக்களும் பெற்றோரும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(தொடரும்)

---

## ஹைக்கூ கவிதைகள்

**நித்திரை**
மனிதன் தவறு செய்யா
ஒரு பொழுது.

**சவப்பெட்டி**
நிரந்தரத் தூக்கத்திற்காக
காத்திருக்கும் படுக்கையறை.

**கதிரை**
தன் மடியில் எமைத் தாங்கும்
சுமை தாங்கி.

**பிரிவு**
பாசத்தின் ஆழத்தை
உணர்ந்திடும் நேரம்.

**ஓவியம்**
வார்த்தைகளற்ற கவிதை.

**கல்வி**
இது ஒரு அகத்திக் கீரை.

**மன்னா**
மனிதர்க்கு உரமூட்டும்
ஆன்மீக உணவு.

**புன்னகை**
பகைவரையும் கவரச் செய்யும்
அற்புத ஆயுதம்.

*எம். கொண்சி,*
*கார்மேல் கொன்வென்ட்,*
*நெடுங்கண்டல்.*

**நிலா**
நட்சத்திர மெத்தையில்
நடை பழகும் தேவதை.

**வானவில்**
மழை வானம்
வரையும் சித்திரம்.

**தாலாட்டு**
குழந்தைச் செவி குடிக்கும்
மது போதை.

**தோல்வி**
உள்ளத்தில் இருந்து
ஊமையடி கொடுக்கும் பொலிஸ.

**வேர்**
மண்ணில் ஓடும்
மரத்தின் நரம்புகள்.

**அன்பு**
இதயம் திறக்கும்
இதமான திறவுகோல்.

**ஆயுதப் போராட்டம்**
தவேஷ நோயாளிகளுக்கு
துப்பாக்கியால் வைத்தியம்.

*சந்தான் கொண்சலா,*
*வண்ணாகுளம், அடம்பன்.*

# வங்காலை புனித ஆனாள் ஆலயம்

## 125 வது ஆண்டு நிறைவு விழா

- எம். ஆர். பிறின்ஸ் டயஸ் -

வேதசாட்சிகளின் பூமி எனப் பழம்பெரும் வரலாறு கொண்ட மன்னார் மாவட்டத்தின் வரலாற்றுப் பெருமை கொண்ட பழம் பங்குகளில் வங்காலைப் பங்கும் ஒன்று. மன்னார் மறைமாவட்டத்தின் 'மூத்த புதல்வி' என இது அழைக்கப்படுகின்றது. இப்பங்கில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்ற புனித அன்னம்மாள் அன்னையின் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு 125 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது.

வரலாற்று ஆசிரியரான அருட்திரு. எஸ். ஜீ. பெரேரா அடிகள் *'இலங்கையின் இயேசு சபைக் குருக்கள்'* என்னும் தமது நூலில் கூறுகின்றபடி, 1560 இல் போர்த்துக்கேயர் மன்னாரைக் கைப்பற்றினர். அதனைத் தொடர்ந்து 16 வருடங்களுக்கு முன் மன்னாரில் புதுக்கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டவேளை, தென்னிந்தியாவின் முத்துக்குளிக்கும் துறைகளிலிருந்து விசுவாசிகள் குழு ஒன்றுடன் இயேசு சபைக் குருக்கள் கடல் கடந்து வந்து வேதசாட்சிகளின் தீவு என்னுமிடத்தில் குடியேறினார்கள். இவர்கள் எட்டு ஆண்டுகளுக்கு முன் இறந்த புனித பிரான்சீஸ் சவேரியாரினால் மனந்திருப்பப்பட்ட முதற் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகும்.

அவர்களில் ஒரு தொகுதியினர் மாதோட்டப் பகுதியில் புதிய இடத்தைப் பெற்று 'வங்காலை' என அழைக்கப்பட்ட இடத்தில் குடியமர்ந்தனர். இது மாதோட்டப் பகுதியில் கப்பல்கள் வந்து செல்லும் உப துறைமுகமாக விளங்கியது. *வங்கம்* என்பது கப்பலைக் குறிப்பதனால *வங்காலை* எனப் பெயர் வரப்பெற்றுள்ளது.

அருட்திரு. எஸ். ஞானப்பிரகாசர் அடிகள் எழுதியுள்ள *'ஆயர் ஹென்றி யூலன் காலத்தில் யாழ் மேற்றாசனத்தின் 25 வருட கத்தோலிக்க வளர்ச்சி'* என்ற நூலில், வங்காலையின் ஆலயம் பற்றி யாத்திரிகரான கோடினர் (CORDINER) என்பவர் கூறுவதாக இப்படி எழுதுகிறார். "ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) ஆட்சியின் இறுதிக் காலத்தில் ஒரு பழங்கோயில் இருந்தது அது பெங்கலி (BENGALY) என்னும் இடத்தில் இருந்தது" எனக் குறிப்பிடுகின்றார். மேலும் 1833 இல் 'காசிச் செட்டி' என்பவர், வங்காலை ஆலயம் பற்றித் தமது நூலில் "ஒரு றோமன் கத்தோலிக்க கோயில், சுடப்படாத களிமண் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது" எனக் கூறுகிறார். இக்கூற்றுக்களிலிருந்து போர்த்துக்கேயர் காலத்திலேயே இங்கு ஆலயம் அமைக்கப்பட்டிருந்ததை உறுதிசெய்ய முடிகிறது. ஆலயம் அமைந்த வரலாறு ஆய்வுக்குரியதாகும்.

125 ஆண்டுகள் கண்ட புனித அன்னம்மாள் ஆலயத்துக்கு அடிக்கல் நாட்டியவர் அருட்திரு கூறே அடிகளாவார். இவ் வைபவம் 1880ல் நடைபெற்றுள்ளது. ஆலயத்தை கட்டி முடித்தவர் அருட்திரு பரோன் (Fr. Baron) அடிகளாவார். இவ்வாலயம் 1893.7.16ம் திகதி, மாவட்ட முதல்வராக விளங்கிய அருட்திரு மசியற் (Fr. Massiet) அடிகளாரால் ஆசீர்வதிக்கப்பட்டது. வங்காலைப் பங்கு உருவானதை ஆராயும்போது, 1872ம் ஆண்டுக்கு முன்பு மாதோட்டம் என்று ஒரு மீசாம் மட்டும் இருந்தது. அதே ஆண்டில் மாந்தை வடக்கு, மாந்தை தெற்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அப்பொழுது யாழ் ஆயராக இருந்த கலாநிதி ஹென்றி யூலன் அவர்களால், 1896ல் மேற்குறிப்பிட்ட இரு மீசாமுடன் மாதோட்டம் மத்தி (Central)



என ஒரு மீசாம் புதிதாக உருவாக்கப்பட்டு அதற்குத் தலைமை அலுவலமாக வங்காலை இருந்தது. இவற்றிலிருந்து வங்காலை மாதோட்ட மீசாமில் முக்கியமான ஓர் இடமாக இருந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டக்கூடியதாக இருக்கின்றது.

1896ல் புதிய மீசாமாக்கப்பட்டபோது முதலாவது பங்குத் தந்தையாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வண. ஏ. டோறா கடமையாற்றினார். தொடர்ந்து பிரான்சைச் சேர்ந்த வண. R. மங்கோ, வண. ஏ.எம். றொக்ஸ் போன்றோரும் பங்குத் தந்தையராக சிறப்புடன் சேவையாற்றினர். தொடர்ந்து பங்குத் தந்தையர்களாக பணிபுரிந்தவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

வண. எஸ். எம். வாஸ், வண. எஸ். அன்ரனி, வண. எச். பெருசல், வண. ஏ. பவ்றில், வண. ஜே.லெப்னே, வண. ஜே. அல்போன்சஸ், வண. பி. ஏ. மரிசலீன், வண. என். ஏ. பெனடிக்ட், வண. எம். எஸ். நல்லையா, வண. என். ஜோசப்பு, வண. இ. டிலாகே, வண. எஸ். கோமஸ், வண. பி. கொன்சால்வேஸ், வண. ஜே. நீக்லாஸ், வண. எஸ். ஏ. மைக்கல்சாமி, வண. எவ். றெனால்ட், வண. எஸ். என். இ. குணசீலன், வண. கிங்சிலி சுவாம்பிள்ளை (மட்டுநகர் - திருமலை ஆயர்) வண. ஓம்லோ, வண. ஏ. லோறன்ஸ் சேவியர், வண. பெனற் கொன்ஸரன்ரைன், வண. தேவசகாயம், வண. தோமஸ் சௌந்தரநாயகம், (யாழ்.ஆயர்) வண. பி. எம். இம்மனுவேல், வண. ஜே. கீதபொன்கலன் துரைசிங்கம், வண. ஏ. சி. கிறிஸ்ரோப்பர், வண. மேரி பஸ்ரியன், வண. அந்தோனிப்பிள்ளை, வண. பீ. அருள்நாதன், வண. எம். போல் நட்சத்திரம், வண. எம். நோபேட், வண. ஜே. தேவசகாயம்பிள்ளை, வண. பி. கிறிஸ்து நேசன் (உதவிப் பங்குத்தந்தை) (மறைக்கல்வி இயக்குனர் - மன்னா ஆசிரியர்) வண. பி. யேசுராஜா, (வாழ்வோதய இயக்குனர்) வண. விக்டர் அவிதப்பர்.

வங்காலைப் பங்கினை வளப்படுத்தி சகல துறைகளிலும் இறையருளால் மக்கள் முன்னேற்றம் அடைவதற்கு அயராது உழைத்த இவர்களையும், எமது பங்கில் 1930கள் தொடக்கம் 75 ஆண்டுகளாக சேவை புரிந்த திருக்குடும்ப கன்னியர் சபைகளைச் சார்ந்த அனைத்து அருட்சகோதரிகளையும் நன்றியோடு நினைவு கூருகின்றோம். இன்று பல்வேறு இடங்களிலும், வெளிநாடுகளிலும் இறைத்தொண்டு செய்யும் எமது குருக்கள், துறவற சபைகளின் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், இறைத்தொண்டு புரியும் தொண்டர்கள், கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுநிலையினர், அதிகாரிகள் அத்தனை பேரும் இப்பங்கின் இறைவாழ்வின் நற்சான்றுகளாவர்.

# புனித ஆனாள் அன்னையின் வரலாறு

இயேசுக் கிறிஸ்து தோன்றுவதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் யூதேயா நாட்டில் எஸ்தோவான் - எமரென்சியா தம்பதிகளுக்கு அழகிய பெண் குழந்தை பிறந்தது. அதற்கு 'ஆனாள்' எனப் பெயரிட்டு, அன்புடன் அழைத்தனர். ஆனாள் என்றால் 'அனைத்து அருளும் அழகும் நிரம்பியவள்' என்பது பொருள். அனைவரிடமும் அன்பும் பரிவும் கொண்டு நட்புடன் வாழ்ந்தாள். பக்தியில் இறைவனிடம் ஒன்றித்திருந்தாள். யூத வழக்கப்படி, பதினான்கு அல்லது பதினைந்து வயதில், யூத குலத்தில் பிறந்து, இறையருளில்



வளர்ந்த சுவக்கீன் என்பவரைத் தன் பெற்றோரின் ஆசியுடன் திருமணம் செய்து, இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்தாள். திருமணமாகி 20 வருடங்களாகியும், அவர்களுக்குக் குழந்தைப் பேறு கிட்டவில்லை.

யூதசட்டப்படி, குழந்தை இல்லாதவர்களுக்கு அது கடவுள் தந்த சாபம் என்னும் அவல நிலையிருந்தது. ஒரு முறை திருநாளின்போது, சுவக்கீன் பலி செலுத்துவதற்காக ஆலயத்திற்கு சென்றபோது, பெரிய குருவாகப் பணியாற்றிய ரூபன் என்பவர், சுவக்கீனிடம், "குழந்தை இல்லாத தம்பதிகள் யெகோவா முன் நிற்கவும் தகுதியற்றவர்கள்" என்று கூறி, அவரை விரட்டிவிட்டார். அவமானத்தால் தலைகுனிந்து, மனமுடைந்து நொந்து போன சுவக்கீன் வீட்டுக்குச் சென்று அன்னாளைக் காண விரும்பாமல், ஒரு மலைக்குச் சென்று, கரம் நீட்டி, கண்ணீர் சிந்தி, நம்பிக்கையோடு இறைவனிடம் மன்றாடினார். தன் கணவன் வீடு திரும்பாததன் காரணத்தை அறிந்துகொண்ட அன்னாளும் அதிக உருக்கமாக இறைவனிடம் மன்றாடினாள். இறைவனது வல்லமையில் ஆழ்ந்த விசுவாசம் கொண்டு, தன் இழிநிலையைப் போக்கி, தாயாகும் வரம் தனக்கு அருளும்படியும், பிறக்கும் குழந்தையை இறைவனுக்கே அர்ப்பணித்து விடுவதாகவும் வாக்களித்து கண்ணீருடன் வேண்டினாள். கதிரவனைப் போன்று ஒளி வீசப்போகின்றவள், இறைத்தூதர்களுக்கு மேலாக உயர்த்தப்படப் போகிறவள் அன்னை மரியாள். இறையருளால் அவர்களது மன்றாட்டு கேட்கப்பட்டது.

தம்பதிகள் இருவரும் இறைபுகழ் பாடி, மகிழ்ந்தனர். புனித ஆனாள் - சுவக்கீன் வாழ்ந்த பகுதியை உள்ளடக்கிய புனித ஆனாள் ஆலயம் ஒன்று ஜெருசலேம் தேவாலயத்திற்கு அருகில் உள்ளது. உயிருள்ள செபவாழ்வு, அசையாத விசுவாச வாழ்வு, இறைத்திட்டத்திற்கு எந்த நிலையிலும் தன்னை முழுமனதுடன் கையளிக்கும் மனப்பக்குவம், தன்னைப்போல் பிறரையும் அன்பு செய்யும் பரந்த உள்ளம், இன்னல் வந்தபோதும் இன்முகத்துடன் இறைத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் சீரிய பண்புகள் ஆகியவை அன்னை ஆனாளின் அணிகலன்களாகும். (தொடர்ச்சி 12ம் பக்கம்)

வாழ்வு தரும் வார்த்தை ... வாழ்வு தரும் வார்த்தை .... வாழ்வு தரும் வார்த்தை ...

# சாகா வாழ்வுக்கு வழிகள் மூன்று

உடல், உயிர், ஆன்மா என்ற மூன்று நிலைகளைக் கொண்டவன் மனிதன். உடல் திடப்பொருள் என்றும் உயிரும், ஆன்மாவும் சித்துப் பொருள் என்றும் அழைக்கப்படுகிறது. உடலை விட்டு உயிரும், ஆன்மாவும் பிரிவது சாவு என்கிறோம். சாவு பல்வேறு வழிகளில் மனித இனத்தை சந்திக்கின்றது. இயற்கை அனர்த்தங்களால் சாவு. கடல் நீரில் மூழ்கி சாவு, சுனாமி கடல் பேரலையால் சாவு, மலை சரிந்து குடும்பத்துடன் சாவு, மழை வெள்ளம் பெருகி அனேகர் சாவு, சினிமாத் திரையரங்கில் தீ விபத்தால் சாவு....... இன்னும் பல்வேறு சூழ்நிலைகள் சாவை கொணர்கின்றன! இயற்கை அனர்த்தத்தினால் சாவு, மனிதனால் மனிதனுக்கு சாவு என சாவின் பட்டியல் தொடருகின்றது. நாம் விரும்பியோ, விரும்பாமலோ சாவு நம்மைத் தழுவிக் கொள்கிறது. சாவிலிருந்து நாம் தப்பவே முடியாது.

## சாகா வரம்

இறைவன் தான் படைத்த மனிதனை, சாவு இல்லாத, நோய், துன்பம் அணுகாத நிலையில் வைத்திருந்தார் என விவிலியம் கூறுகிறது. (தொடக்க நூல்) சாவு அணுகாத சாகாவரம் இருந்தது. ஆனால் பாவத்தின் விளைவாக அந்த வரம் எடுக்கப்பட்டது. "நன்மை, தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே ... உண்ணும் நாளில் சாகவே சாவாய்" (தொ. நூ. 2:17) என்று இறைவன் கூறுகின்றார். அப்படியாயின் அந்த ஆதி மனிதன் ஏற்கனவே சாகாவரம் பெற்று, சாவு அணுகாத மேலான நிலை வாழ்வு வாழ்ந்திருக்க வேண்டும். இது இறைவனை முகம் முகமாக சந்தித்து, உரையாடி, உறவாடி, அன்புகொண்டு வாழ்ந்த நிலையாகும். இந்தப் புனித நிலையை, மனிதன் பாவம் செய்து இழந்தான். எனவே சாவு புகுந்தது. மனித இனத்திற்கு நோயும், வேதனையும் தொடர்ந்தது. சாகாவரம் பறிக்கப்பட்டது என்பதே விவிலியம் கூறும் உண்மை.

ச. வில்பிரேட். மாளிகைப்பிட்டி

சாவைத்தேடிக் கொண்ட மனிதனை வாழ்விக்க, சாவை வென்ற சத்தியன் மானிட வடிவமேற்றார். தனது பாடுகள், மரணம், உயிர்ப்பின் வழி நிலை வாழ்வை, சாகா வாழ்வை பெற்றுத் தந்தார். "சாவே உன் கொடுக்கு எங்கே! சாவே! உன் வெற்றி எங்கே!" என்று பவுல் அடிகள் கூறுமளவு சாவு தோற்கடிக்கப்பட்டது. சாகாமை வழங்கப்பட்டது. இது உடல் சாவல்ல. உள்ளத்துச் சாவு. ஆன்மீகச் சாவு. கிடைத்தது சாதாரண வாழ்வல்ல. நிலை வாழ்வு. நித்திய வாழ்வு. சாகா வாழ்வு. என்றென்றும் இறைவனுடன் வாழும் வாழ்வு. இந்த சாகா வாழ்வை வாழ, இயேசு காட்டும் வழிகள் மூன்று.

### 1. உடலும், இரத்தமும் உணவு

"எனது தசையைத் தின்று, எனது இரத்தத்தைக் குடிப்பவன் நிலை வாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்." (யோவான் 6:5) என்பது இவ்வுலகில் இயேசுவுடன் வாழ்ந்து, இறப்பின்பின் மீண்டும் இயேசுவோடு வாழும் வாழ்வாகும். இவ்வுலகில் நாம் அவரது உடலையும், இரத்தத்தையும் உணவாக அருந்தும்போது அவரது இறை பிரசன்னம் நம்மில் உறைகிறது. அவர் வாழ்வும், நம் வாழ்வும் ஒன்றிக்கிறது. இந்த ஒன்றிப்பு நிறைவு பெறும்போது, அவ்வாழ்வு தொடர் வாழ்வாகும்: நிலையான வாழ்வாகும். அதுவே சாகா வாழ்வாகும். (யோவான். 5-56)

### 2. இறைவார்த்தை என்னும் உணவு

" என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள்" (யோவான் 8:51) சாகாமல் என்றும் வாழ்வதற்கு இறைவனின் திருவார்த்தையைக் கேட்க வேண்டும். கேட்டு, அதன் படி வாழ வேண்டும். முற்காலத்தில் மூதாதையர்கள் வழியாகவும், இறைவாக்கினர் வழியாகவும் இறைவனின் வார்த்தை பேசப்பட்டது. அவ்வார்த்தையைக் கேட்டு அம்மக்கள் அவரோடு ஒன்றித்து வாழ்ந்தனர். காலம் நிறைவுற்றபோது, இறைவனே மனுவுருவில் பேசினார். அவ்வார்த்தைகளை மக்கள் பலர் கேட்டனர். அதன்படி வாழ்ந்தனர். சாகாமல் இன்றும் நம் மனங்களில் வாழ்கின்றனர். விவிலியம் கடவுளின் வார்த்தைகளே. இவ்வார்த்தைகளைத்



தினம் தினம் வாசித்து (உட்கொண்டால்) இந்த இறை வார்த்தை நமக்கு உணவாகும். உணவு வாழ்வாகும். அந்த வாழ்வில் இயேசு வாழ்வார். அவரில் நாம் வாழ்வோம். என்றுமே வாழ்வோம், சாவே அணுகாது வாழ்வோம்.

### 3. நம்பிக்கை என்னும் உணவு

"*உயிர்த்தெழுதலும் உயிரும் நானே........ என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாக மாட்டார்.* (யோவான் 11:25-26) இயேசு இன்றும் உயிரோடு வாழ்கின்றார். (திருச்சபையில்) இது நமது நம்பிக்கை. உயிர்த்தெழுதலும் அவரே. அவரில் நம்பிக்கைகொள்ளும் நாமும் ஓர் நாள் உயிர்த்தெழுவோம். திருப்பலியில், நற்கருணை வழிபாட்டின்போது "ஆண்டவர் வரும் வரை அவரது மரணத்தை அறிக்கையிடுகின்றோம். அவரது உயிர்ப்பையும் எடுத்துரைக்கின்றோம்." என்று நாம் தினம் தினம் கூறி உயிர்ப்பை அறிக்கையிட்டு வாழ்ந்தால், உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தால் நாம் என்றுமே சாகமாட்டோம். ஆகவே *நம்பிக்கை* எனும் உணவு நமக்குத் தேவை.

இறைவார்த்தை நமக்கு உணவு. உடலும் குருதியும நமக்கு உணவு. உயிர்ப்பில் கொள்ளும் நம்பிக்கை நமக்கு உணவு. சாவிலிருந்து சாகாமைக்கு துன்பத்திலிருந்து துன்பமின்மைக்கு அழிவிலிருந்து அழியாமைக்கு அழைத்துச் செல்ல உதவும் இந்த மூன்று வழிகளை நாடிச் செல்வோம். வாழ்வு பெறுவோம்.

# இளைஞர் பொழிவு

## சமாதானம்


"ஏன்டா இன்னைக்கு இப்படி சோர்வா இருக்க? என்னடா நடந்திச்சு?"
"ஒன்றுமில்லடா, பஸ்ஸில பள்ளிக்கூடத்துக்கு வரும்போது என் தங்கச்சியைப்போல ஒரு சின்னப் பிள்ள பிச்சையெடுத்துக்கிட்டு இருந்தது, அந்தப் பிள்ளைக்கு ஒரு உதவியும் செய்யலன்னு நினைச்சு கவலையா இருக்கு. என் தங்கச்சியா இருந்தா விட்டுட்டு வந்திருப்பேனா....?"
பிறருக்கு உதவி செய்ய விரும்புகின்றேன். ஆனால் செய்யாமல் விட்டுவிடுகிறேன். பின்பு வருத்தப்படுகிறேன். இது எனக்குள்ளே ஏற்படுகின்ற முரண்பாடு. இதனால் மன அமைதியை இழக்கிறேன். நேர்மை, நீதி, அன்பு உள்ள நல்லவனாக வாழ விரும்புகின்றேன். ஆனால் என் சுயநலத்தாலும், சமுதாய மதிப்பீடுகளின் அழுத்தத்தாலும் என்னுடைய மதிப்பீடுகளின் அழுத்தத்தாலும் என்னுடைய நல்ல குணங்களை இழந்துவிட்டு பின்பு வருத்தப்பட்டு மன அமைதியை இழக்கின்றேன்.
"எங்கடி போயிட்டு வார? டியுசனுக்குப் போயிருந்ததா ஏன்டி பொய் சொல்ற? பீச்சில ஒரு பையனோட உன்னைப் பார்த்ததா பக்கத்து வீட்டுக்காரங்க சொன்னாங்க! நான் உன்னை இனி நம்புறதா இல்லை"
தாய் தன்னை நம்பவில்லை என்ற எண்ணம் மகளின் மன அமைதியைக் கெடுத்து, சாப்பிட முடியவில்லை, இரவில் நித்திரையும் வராமல் தற்கொலை செய்துகொள்கிறாள் மகள். தாய்க்கும் மகளுக்கும் ஏற்பட்ட முரண்பாடு அந்தக் குடும்பத்தின் சமாதானத்தைக் கெடுத்து சோகத்தில் முடிந்து விடுகிறது.
இரண்டு பேருக்குள் ஏற்படுகின்ற முரண்பாடு சமாதானத்தைக் கெடுத்து விடுகின்றது. இதேபோல இரண்டு குழுக்களுக்குள் ஏற்படுகின்ற முரண்பாடுகள் சமாதானத்தை இழக்கச்செய்து நாட்டில் குழப்பத்தை, சண்டையை, போர்களை ஏற்படுத்தி விடலாம். வித்தியாசமான ஜாதி, மதம், மொழி பேசும் மக்களிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள் சமாதானத்தை இழக்கச்செய்து அடிபிடி சண்டையை உருவாக்கிவிடுகிறது.

## சிந்தனைத் தொடர் – 11

### Fr. வின்னி யோசப் எழுதுகிறார்

நமக்குள், இரண்டு பேருக்குள், குழுக்களுக்குள் ஏற்படுகின்ற முரண்பாடுகள் சமாதானத்தை இழக்கச்செய்கிறது. இதனால் முரண்பாடுகள் தவறானவை, அதைத் தவிர்க்கவேண்டும் என்பது சரியான கருத்தல்ல. முரண்பாடுகள் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது.
முரண்பாடுகளை வெறுப்போடும் கையாளலாம், விருப்போடும் கையாளலாம். அதை எப்படிக் கையாள்கிறோம் என்பதைப் பொறுத்தே நம் உள்ளத்திலும், நமது குடும்பத்திலும், சமுதாயத்திலும் சமாதானம் பிறக்கும். முரண்பாடுகளை விருப்பத்தோடு கையாளும்போது நம்பிக்கை பிறக்கும், உறவு வளரும், அன்பு, சமாதானம், மகிழ்ச்சியான வாழ்க்கை மலரும். முதலில் குறிப்பிட்ட தாய்க்கும், மகளுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டை எப்படிக் கையாண்டு சமாதானத்தை உருவாக்கியிருக்கலாம் என்று பார்ப்போம்.
தாய்: "மகள் எங்க போய்ட்டு வாரீங்க? ஏம்மா பிந்திப்போச்சு? நீ பிந்திவருகிற ஒவ்வொரு நிமிசமும் மனசு வேதனையால் துடிக்குது".
மகள்: "sorry ம்மா, Friend – டோட Birthday, டியுஷன் முடிச்சு பீச் போயிருந்தோம்மா".
தாய்: "பக்கத்து வீட்டு மாமி சொன்னா உன்னை ஒரு பையனோட பீச்சில பார்த்ததா! ஏன் மகள் நீ தப்பு செய்யமாட்டேன்னு தெரியும். ஆனா லேட்டா வருவதா இருந்தா சொல்லிட்டுப் போம்மா!"...
மகள்: "சரிம்மா". (அம்மாவுக்கு என்மேல எவ்வளவு நம்பிக்கை)

கம்போடியா நாட்டில் அகதிகள் இருந்த ஒரு முகாமில் நடந்த சம்பவம். பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அகதிகளாக இருந்தார்கள். எப்போதுமே சண்டையும், கொலை கொள்ளையும் தான். அரசாங்கப் படைகளால்கூட கட்டுப்படுத்த முடியவில்லை. அருட்தந்தை சீராக் அகதிப் பணிக்காக அந்த முகாமிற்கு செல்கிறார். ஒரு நாள் மன்னிப்பு வழிபாடு நடத்திக்கொண்டிருக்கும்பொழுதே ஒரு பெண் எழுந்து, என் கணவனையும், குழந்தையையும் கொலை செய்தவன் இங்குதான் இருக்கிறான் நான் இப்போது அவனை முழுமையாக மன்னிக்கிறேன் என்று கூறுகின்றாள். ஒரே அமைதி! உடனே அவன் எழுந்து, அவள் காலில் விழுந்து உன் கணவனையும் குழந்தையையும் கொன்றதற்காக என்னை மன்னித்துவிடு என்று கதறுகின்றான். இந்த மன்னிக்கின்ற நிகழ்ச்சி முகாம் முழுவதும் பரவுகிறது. ஒருவர் ஒருவரை மன்னிக்க ஆரம்பிக்கிறார்கள். முழுமையான சமாதானம் அங்கே திரும்புகிறது. படைவீரர்களால் ஏற்படுத்த முடியாத சமாதானம், ஒரு மன்னிப்பால்



இன்றைய நிலையில் நாட்டின் சமாதானத்திற்கு அடிப்படைத் தேவை தமிழ், சிங்கள, முஸ்லிம் சமுதாயத்திற்குள் நம்பிக்கை ஏற்படவேண்டும். இந்த நம்பிக்கை அன்புறவை ஏற்படுத்தி இதன் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் மறைந்து சமத்துவம் மலரவேண்டும். இந்த சமத்துவத்தின் அடிப்படையில்தான் நீதியான நிலையான சமாதானம் நாட்டிலே மலர முடியும். இன்று இந்த சமாதானம் சிலருக்கு எட்டாத விடிவெள்ளியாக வலம் வருகிறது. சமாதானம் இல்லையென்றால் நம் வாழ்க்கையும் இல்லை. வளர்ச்சியும் இல்லை, மகிழ்ச்சியும் இல்லை என்பதை எல்லோரும் உணர வேண்டும்.
தானத்தில் மிகவும் சிறந்தது எது? குரு சீடர்களிடம் கேட்டார். முதல் சீடன் அன்னதானம் என்றான். இரத்ததானம் என்றான் மற்றவன், இல்லவே இல்லை, சமாதானம் குருவே என்றான் மூன்றாவது சீடன். தானத்தில் சிறந்தது சமாதானம், இறைவன் தருவதும் சமாதானமே.
சமாதானத்திற்கான மக்களின் ஏக்கம் ஏஞ்சல் எழுதிய கவிதையால் உயிர்பெறுகிறது.

ஈழத்துப் பெண்ணே
பூமிப்பந்தில் பூத்துக்குலுங்க வரும் புதுப்பெண்ணே!
வழமான வாழ்வுக்கு வரங்கள் நீ தரவேண்டும்!
அகிலமதில் அனுதினமும் ஆனந்தம் வேண்டும்!
வியர்வை மழையில் விடியல் வேண்டும்!
விழிநீர் காணாத விழிகள் வேண்டும்!
காயங்கள் இல்லாத நியாயங்கள் வேண்டும்!
வெடிகுண்டு வெடிக்காத நிமிடங்கள் வேண்டும்!
மண்ணில் மனிதம் மலர்ந்திட வேண்டும்!
வன்முறை தொலைந்த வாழ்க்கை வேண்டும்!
கலவரப் புயல் தேசக்கரையைக் கடந்திட வேண்டும்!
நம்நாட்டில் சமாதானம் நிலைத்திட வேண்டும்!

நமது நாட்டில் நீதியான நிலையான சமாதானம் மலர்ந்து, மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

*(தொடர்ந்து பேசுவேன்)*

# திருச்சபையின் நோக்கும் போக்கும்

## ஓர் விமர்சனக் கண்ணோட்டம்

### தொடர் 14

அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி (அமதி)

திருச்சபை கிறிஸ்துவின் மறையுடலாக இருப்பதினாலும், அப்போஸ்தலர் வழிவந்த மரபின் அடிப்படையில் ஊற்றெடுத்திருப்பதாலும் இன்றும் நிலைத்து இறையாட்சியின் கருவியாக விளங்குகின்றது. இன்றைக்கு திருச்சபை பல சவால்களுக்கு மத்தியில் குறிப்பாக திருச்சபையிலிருந்து பிரிந்து போன சபைகளின் தவறான பரப்புரைகள் மத்தியில் கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை தனது தெளிவான போதனைகளினாலும், ஒழுக்கம் சார்ந்த கோட்பாடுகளினாலும் பேணிப் பாதுகாத்து வருகின்றது. ஆனால் வெறும் கோட்பாடுகள் மட்டும் கத்தோலிக்க மக்களுக்கு வழிகாட்டியாக அமைந்துவிட முடியாது. மாறாக திருச்சபையின் வாழ்வு கிறிஸ்துவின் மனநிலையில் ஊற்றெடுத்து வாழப்படுகின்றபோதே இறையாட்சிக்கு சாட்சியம் பகரும் வாழ்வாக மாறமுடியும். திருச்சபை தூயது அதேவேளையில் பாவம் நிறைந்தது என்பது வெறுமனே திருச்சபையின் பலவீனங்களை நியாயப்படுத்தும் கோஷமாக மட்டும் நோக்கப்பட முடியாது. கிறிஸ்துவே திருச்சபையின் தலையாக இருப்பதினால் அதனை வழிநடத்தும் திருச்சபைத் தலைமைகள் மற்றும் இறைமக்கள் எவ்வளவு தூரம் கிறிஸ்துவின் மனநிலையை உள்வாங்கி வாழ்கின்றார்கள் என்பது கேள்விக்குறியே!

### புதிய பார்வை வேண்டும்!

இன்று திருச்சபையின் அமைப்புக்கள் பலம் வாய்ந்தவையாக உள்ளன. இதன் மூலமே திருச்சபையின் தொடர்பாடல் அதி உச்சமான நிலையில் செயற்பட்டு அனைத்து மக்களையும் திருச்சபை சென்றடையக் கூடியதாகவுள்ளது. ஆனால் அதே வேளையில் அதன் அமைப்புக்களினூடாக இறைமக்களின் நம்பிக்கை வாழ்வு ஆழப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக ஆன்மீகத்தைப்பற்றிய தெளிவான பார்வை வலியுறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. ஆன்மீகம் என்பது வெறுமனே ஆலய திருவிழாக்களைக் கொண்டாடுவதிலும், சில சமயக் கடமைகளை நிறைவேற்றுவதிலும், அருட்சாதனங்களைக் கொடுப்பதிலும்தான் தங்கியுள்ளது என்ற நிலையில் இன்னும் விளங்கிக் கொள்ளப்படுவது அறியாமை ஆகும். ஆன்மீகத்திற்கு கருவான *உறவின்* மையத்தில் ஆன்மீகம் கட்டியெழுப்பப்படும்போதுதான் இறைமக்களின் நம்பிக்கை வாழ்வு ஆழம் பெற்று சாட்சியமுள்ளதாக மாறமுடியும்.
அத்துடன் முன்னைய மறைக்கல்வியும் ஆன்மீகத்தை பற்றிய எதிர்மறையான பார்வையையே வளர்த்துள்ளது என்று கூறலாம். ஏனெனில் 'அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே' என்று சிலவற்றை விலக்கி வாழ்வதுதான் ஆன்மீகம் என்ற கருப்பொருளில் விளங்கிக்கொள்ளப்பட்டது. எதைச் செய்யவேண்டும் என்று பெரிதாக ஆன்மீகத்தைப்பற்றிய விழிப்புணர்வு இன்றும் அருகித்தான் காணக்கிடக்கின்றது. எனவே நேரிய (Positive) ஆன்மீகத்தை வளர்த்தெடுக்க ஆன்மீகத்தைப் பற்றிய புதிய பார்வை தேவைப்படுகின்றது. இப்புதிய பார்வையானது இறைவனோடு மட்டும் உறவு என்ற உறவு நிலையைக் கடந்து அடுத்தவருடன் உறவும் இணைந்தே உண்மையான ஆன்மீகத்திற்கு வழிவகுக்கும் என்பது பற்றிய விழிப்புணர்வு இன்று இறைமக்களிடையே அதிகம் தேவைப்படுகின்றது.
எமது மண்ணில் விசுவாச வித்தை இட்ட மேலைத்தேய போதகர்கள் குறிப்பாக பக்திமயப்படுத்தப்பட்ட ஒரு ஆன்மீகத்தையே பரிந்துரை செய்தார்கள்.



இதன் விளைவாகவே ஆலய விழாக்களைக் கொண்டாடுவதும் சில பக்தி முயற்சிகளை மேற்கொள்ளுவதும்தான் ஆன்மீகமாகக் கருதப்பட்டது. இன்றும் திருச்சபையை வழிநடத்தும் தலைமைகள், குருக்கள் இறைமக்கள் மத்தியில் பக்தியும், உறவும் இணைந்து உருவாகும் ஆன்மீகத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பின்தங்கியே நிற்கிறார்கள். இதனால்தான் இன்றும் சந்திகளில் சுரூபங்கள் வைப்பதிலும் மேலோட்டமான மத செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறார்கள். எனவே ஆன்மீகத்தைப் பற்றிய புதிய பார்வை உறவை மையப்படுத்தியதாக அமைய மாற்றம் பெறவேண்டும்.

### ஆன்மீகம் உறவு சார்ந்ததே

திருச்சபையின் அமைப்புக்கள் இறைமக்கள் மத்தியில் உறவினை வளர்க்கும் கருவிகளாக செயற்படும்போது அவை அர்த்தமுள்ளவையாக மாறமுடியும். இன்றும் கிறிஸ்தவர்கள் மத்தியில் தொடர் புதுப்பித்தல்கள் தேவைப்படுகின்றன. பாரம்பரியம் என்ற போர்வைக்குள் முற்று முழுதாக ஆன்மீகத்தை முடக்கிவிட முடியாது. காலத்தின் தேவைகளுக்கேற்ப திருச்சபையின் அமைப்புக்களிலும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு உண்டு. இன்றும் குருக்கள் ஆதிக்கம் கொண்ட அமைப்புக்களாகவே திருச்சபையின் செயற்பாடுகள் அமைகின்றன. இறைமக்களும் பக்தி மயப்படுத்தப்பட்ட ஆன்மீகச் செயற்பாடுகளுக்கே முக்கியத்துவம் அளித்து வருகின்றார்கள். இன்னும் அன்பியங்கள் வழிபாட்டு நிலைக்கு மாறிவருகின்றது. பெரும்பாலும் ஆண்கள் அன்பியத்திற்கு விலக்கானவர்களாக வாழுகின்ற நிலையும் காணப்படுகின்றது. இன்னும் ஆன்மீகத்தை பக்திச்சாயம் பூசப்பட்ட நிலைக்குள் வைத்து சிந்திப்பதினால்தான் கிறிஸ்தவம் உறவை மையப்படுத்திய ஆன்மீகத்திற்குத் திரும்பவில்லை. ஞாயிறுக் கடமையோடு முடிந்துவிடுகின்ற ஆன்மீகமாகவே இன்று ஆன்மீகம் பலருக்கு அமைந்து விடுகின்றது. பங்குத்தலத் திருச்சபைகளில் மனித உறவுகளைச் சீரமைத்து, ஒன்றாகச் செயற்படவைக்கும் உறவுகளை மையப்படுத்திய ஆன்மீகச் செயற்பாடுகளே தேவை. பக்தியை மையப்படுத்திய ஆன்மீக வாழ்விற்கு எத்தகைய சவால்களும் எழுவதில்லை. மாறாக அடுத்தவருடன், அயலாருடன் உறவை மையப்படுத்தி வளர்த்தெடுக்கப்படும் ஆன்மீகமே இன்று சவால்களையும், முரண்பாடுகளையும் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது எனலாம். இதனால்தான் இன்றைய ஆன்மீகயியலாளர்கள், கிறிஸ்தவர்களை "திருமுழுக்கு பெற்ற அஞ்ஞானிகள்' (baptized pagans) என்று அழைக்கின்றார்கள். ஆகவே அயலாருடைய நல்ல உறவை இறைவார்த்தையின் அடித்தளத்தில் கட்டியெழும்பும் பயணத்தில் தளர்வுகள், சோர்வுகள் இருக்க முடியாது.
அத்துடன் திருச்சபைத் தலைமைகளினதும், குருக்களினதும் சாட்சிய வாழ்வும் இறைமக்களின் ஆன்மீக வாழ்விற்கு உந்து சக்தியாக அமைய வேண்டும். சந்திகளில் சுரூபங்களை வைத்து ஏட்டிக்குப் போட்டியாக மத முரண்பாடுகளை தோற்றுவிக்கும் செயற்பாடுகளுக்கு அடித்தளமிடுவோர் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் நிலவும் சாதிய, வர்க்க வேறுபாடுகளுக்கு எதிராகவும் கிளர்ந்தெழுதல் அவசியமாகின்றது. திருச்சபையில், பங்குத்தலத் திருச்சபைகளில் உள்ளரங்க புதுப்பித்தலும் (Internal Renewal) தவிர்க்க முடியாதது. இறைமக்கள் மத்தியில் ஒற்றுமையை, சகோதரத்துவத்தைக் கட்டிக்காக்க முழக்கமிட்டு அறைகூவல் விடுக்கும் திருச்சபைத் தலைமைகளும், குருக்களும், துறவியரும், தங்கள் மத்தியில் அத்தகைய சகோதரத்துவ ஒன்றிப்பும், ஒருமைப்பாடும் நிலவுகின்றதா என்று ஆய்ந்து பார்க்கவேண்டும். இல்லையெனில் வேலி பயிரை மேய்ந்த கதையாகிவிடும். இன்று உறவை மையப்படுத்திய சீடர்களின் பெருக்கத்திற்கே திருச்சபை வழிசமைக்க வேண்டும்.

### ஒருமைப்பாடு மலர உழைப்போம்!

ஒருமைப்பாடு என்பது திருச்சபையின் வெறும் கருத்தியலன்று. மாறாக அது இறைமக்கள் மத்தியில் வளர்த்தெடுக்கப்பட வேண்டியதொன்று. இத்தகைய ஒருமைப்பாடு திருச்சபையில் பல்வேறு மட்டங்களில் உருவாக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதனை நாங்கள் வாழ்விற்கும் வழிபாட்டிற்குமிடையேயுள்ள ஒருமைப்பாட்டின் அடித்தளத்திலேயே நோக்க வேண்டும். உதட்டளவில் உச்சாரணம் செய்து நன்றி கூறிப் புகழ்வதுதான் வழிபடுவது என்பது தவறு. இறைவனை இதயத்தில் ஏற்று இறைவார்த்தைக்கு ஒப்ப வாழும் வாழ்க்கை முறைதான் இங்கு ஒருமைப்பாடாகும். இன்னும் பக்திக்கும், உறவிற்குமுள்ள ஒருமைப்பாடும் இதனைச் சார்ந்ததே. ஆண்டவனை அன்பு செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அயலானை உதறித்தள்ளும் முரண்பாடற்ற வாழ்க்கை முறையில் வெளிப்படும் ஒருமைப்பாடு முக்கியமானது. இறைவனுக்கு வெறுமனே பக்தி செலுத்துவதைவிட அடுத்தவனில் இறைவனைக் கண்டு வாழும் ஒருங்கிசைவான (Integrated Spiritualily) ஆன்மீகம் இன்று தேவையானதும், சவாலானதும்கூட.
ஈற்றில் குருகுலத்திற்கும், இறைமக்களுக்குமுள்ள ஒருமைப்பாடும் இறையாட்சியின் மலர்ச்சிக்கு இன்றியமையாதது. இவர்களுக்கிடையேயுள்ள நெருங்கிய உறவு, குருக்களின் ஆதிக்கமற்ற மனநிலை, பணிசார்ந்த வேறுபாட்டைப் பற்றிய விழிப்புணர்வு போன்றவைதான் ஒரு ஆரோக்கியமான ஒருமைப்பாட்டிற்கு வித்திடும். வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் ஒருமைப்பாடு மலர அனைவரும் உழைக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.


*(விமர்சனம் தொடரும்)*

## புனித மக்ஸி மில்லியன் கோல்பே செய்த

# உன்னத தியாகம்

அருட்சகோதரர் கலாநிதி
பப்பிரிஸ்ற் குருஸ்

"தன் வாழ்க்கையை தன் நண்பனுக்காக அர்ப்பணிப்பதைவிட மேலான தியாகம் ஒன்றுமே இல்லை"



1938ம் ஆண்டில் ஜப்பானில் (MAXI MILLIAN KOLBE) *மக்ஸி மில்லியன் கோல்பே* என்ற போலந்து நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்க குரு மிகவும் திறமையாகப் பணிபுரிந்து வந்தார். இவர் தேவ அன்னையில் ஆழ்ந்த பயபக்தி கொண்டவர். தனது கோடை கால விடுமுறைக்காக அவர் ஜப்பானிலிருந்து தன் சொந்த நாடாகிய போலந்துக்கு செல்லும் வழியில், கொழும்பு துறைமுகம் வந்தடைந்து, அக்காலத்தில் போலந்து பிரஜைகளால் நடாத்தப்பட்ட கொம்பனி வீதியிலிருக்கும் (Slave Island) நிப்போன் ஹோட்டலில் ( HOTEL NIPPON) இரண்டு நாட்கள் தங்கி, அதற்கு முன்னால் உள்ள புனித செபமாலை இராக்கினியின் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து, திரும்பவும் தனது பிரயாணத்தை மேற்கொண்டார். இவருடைய புனித பாதங்கள் இலங்கை மண்ணைத் தொட்டு பரிசுத்தப்படுத்தின. நாம் எத்துணை பாக்கியவான்கள்!

அவர் தனது சொந்த நாட்டை வந்தடைந்ததும், அந்நாட்டைக் கைப்பற்றிய *அடோல்வ் ஹிட்லருடைய* துருப்புக்களால் நீதியற்ற முறையில் கைதுசெய்யப்பட்டு, போலந்திலுள்ள மிகவும் கொடூரமான அவுஷ்விட்ஸ் (AUSCHWITZ) என்ற கைதிகள் முகாமில் அடைக்கப்பட்டார். அம்முகாமில் பல பகுதிகள் இருந்தன. ஒவ்வொரு பகுதியிலும் 600 கைதிகள் கடுங்காவலில் வைக்கப்பட்டார்கள். அக்காலத்திலிருந்தே ஜேர்மன் கைதி முகாம்களின் ஒழுங்கு முறைகள் மிகவும் பயங்கரமாக இருந்தன. அங்கிருந்து தப்பி ஓடுவதென்றால் அது அசாத்தியமான காரியந்தான்.

அவ்விதம் இருந்தும் ஓர் இரவு, கைதியொருவன் தப்பியோடிவிட்டான். இந்த நிகழ்வு ஜேர்மன் நடைமுறைக்கு முற்றிலும் மாறானது. இந்த அவமானத்தை ஜேர்மன் கப்ரனால் தாங்க முடியவில்லை. மற்ற 599 கைதிகளையும் கூப்பிட்டு எச்சரித்தான். "தப்பி ஓடிய கைதி இன்று 6 மணிக்கு முதல் பிடிபடாவிட்டால், உங்களில் 10 கைதிகள் உயிரிழப்பார்கள்"

இது என்ன நீதி! இது என்ன நியாயம்! ஜேர்மன் கைதி முகாமில் நீதி என்ன? நியாயம் என்ன? அங்கு அவர்கள் வைப்பதுதானே சட்டம்! இதைக் கேள்வியுற்ற அருட்தந்தை மக்சிமில்லியன் கோல்பே மிகவும் வேதனைப்பட்டார். அநீதியை அவரால் தாங்க முடியவில்லை.

அன்று மாலை 6 மணியாகிவிட்டது. தப்பியோடிய கைதி இன்னும் பிடிபடவில்லை. ஜேர்மன் கப்டன் கோபத்தினால் பொங்கி எழுந்தான். 599 கைதிகளைக் கூப்பிட்டு திரும்பவும் கர்ஜித்தான்.

"தப்பியோடிய கைதி இன்னும் பிடிபடவில்லை. ஆகையினால் உங்களுள் 10 கைதிகளுக்கு இன்று மரண தண்டனை" என்று கூறி, 'நீ... நீ...நீ...' என்று 10 கைதிகளை சுட்டிக் காட்டினான். அவர்கள் இம்மரண தண்டனையைக் கேட்டு கதறி அழத் தொடங்கினார்கள். ஏன் இந்த அநீதியான மரணம்! அவர்கள் குற்றவாளிகள் இல்லையே! ஆனால் அங்கு அவர்களுடைய குரல்களைக் கேட்பார் யாருமில்லை.

அந்த அப்பாவி 10 கைதிகளுக்குள் ஒருவனுடைய பெயர் பிரான்சிஸ் கஜோனிசெக் (FRANCIS GAJOWNIZECK) அவன் குடும்பக்காரன். அவனுக்கு மனைவியும், இரண்டு குழந்தைகளும் இருந்தார்கள்.

அவன் வண. பிதா மக்ஸிமில்லியனுடைய பங்கைச் சேர்ந்தவன். அவனைக் கண்ட மக்ஸிமில்லியன் கோல்பே திடுக்கிட்டார். அவருடைய இதயத்தில் கருணையும் இரக்கமும் பொங்கியது. இப்படி இக்கட்டான சந்தர்ப்பங்களில் இறை பக்தர்களுக்கு ஆத்ம சக்தி கிடைப்பது உண்மைதான்.

மனத்திடங்கொண்டு மக்ஸிமில்லியன் கோல்பே ஜேர்மன் கப்டன் முன்னிலையில் வந்து மிகவும் தாழ்மையாகக் கூறினார்.

"கப்டன் அவர்களே, தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுடைய கட்டளையின்படி 10 அப்பாவிக் கைதிகள் அநீதிக்குட்பட்டார்கள். பிரான்சிஸ் கஜோனிசெக் எனது பங்கைச் சேர்ந்தவன். அவன் அப்பாவிக் குடும்பக்காரன். அவன் ஒரு குற்றமும் செய்யவில்லை. அவன் இன்று இறந்தால், அவனுடைய சிறு குடும்பத்தை யார் கவனிக்கப்போகிறார்கள்? ஆகையினால் அவனுக்குப் பதிலாக நான் உயிரிழக்க ஆயத்தமாக இருக்கின்றேன். தயவுசெய்து அனுமதி அளியுங்கள் கப்டன். அவனை விட்டுவிடுங்கள்."

தெய்வாதீனமாக கப்டன் வண. மக்ஸிமில்லியனின் தாழ்மையான வேண்டுகோளை ஏற்றுக்கொண்டான். அன்று, கன்னிமரியாள் பரலோகத்திற்கு எடுக்கப்பட்ட நாளுக்கு முந்தின நாள், ஆவணி மாதம் 14ம் திகதி! மாதாவின் மைந்தன், உயர்ந்த உள்ளம் படைத்த தேவவீரன் மக்ஸிமில்லியன் கோல்பே, தன் நண்பன் பிரான்சிஸ் கஜோனிசெக்கிற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். இப்பெருந்தியாகம் ஆவணி மாதம் 14ந் திகதி 1941 ம் ஆண்டு போலந்திலுள்ள அவுஷ்விட்ஸ்ஸில் என்ற ஜேர்மன் கைதி முகாமில் நடந்தது.

அந்தத் தீரச் செயல், பாரெங்கும் பரவியது. பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, 1971 ம் ஆண்டு, திருத்தந்தை 6ம் சின்னப்பர், மக்ஸிமில்லின் கோல்பேக்கு முத்திப்பேறு பட்டம் கொடுத்தார். அந்த வைபவத்தைக் கண்டு களிக்க, பிரான்சிஸ் கஜோனிசெக்கிற்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. ஏழையாய் இருந்தாலும், பல முயற்சிகள் எடுத்து, கஷ்டங்களுக்கு மத்தியில், போலாந்திலிருந்து, இத்தாலி நாடு வந்து சேர அதற்குரிய பணத்தைச் சேகரித்து, அவ்விழாவிலே பங்குபற்றி, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். "வாழ்வது நானல்ல. என்னில் எனது நண்பன் மக்ஸிமில்லியன் கோல்பே வாழ்கின்றார்." என்று பெருமையுடன் கூறினான். 1992ம் ஆண்டு, புரட்டாதி மாதம், 10ம் திகதி, காலஞ் சென்ற திருத்தந்தை போலந்தைச் சேர்ந்த 2ம் அருளப்பர் சின்னப்பர் மக்ஸிமில்லியன் கோல்பேக்கு புனித பட்டம் சூட்டினார்.

## நாவண்ணன் எழுதும்

# வித்தான காவியம்

மன்னார் வேதசாட்சிகளின் வரலாற்றைக் கூறும்

## காவியத் தொடர் – 3

### மக்கள்

கரையார்கள், பரதவர்கள்
கடையர்கள் என மூன்று
வரையான குலமக்கள்
வாழ்ந்தாலும் இத்தீவில்
உரையார்கள் தாழ்வென்றும்
உயர் வென்றும் தமக்குள்ளே.

சூளைதரும் சுண்ணாம்பை
செய்தொழிலாய்க் கொண்டவர்கள்
பாளைதரும் பதநீரால்
பனைவெல்லம் செய்வோர்கள்
ஊளையிடும் அலைகடலில்
உளிழத்து மீன் வளைப்போர்கள்.

மூச்சடக்கி ஆழ்கடலில்
மூழ்கி முத்தெடுப்போர்கள்
வீச்சுவலை கரை வலையால்
வீங்கு பணச் செழிப்புற்றோர்
ஆச்சரியம் யாதென்றால்
அவர்களுக்குள் பேதமில்லை.

திரை ஆளும் கடல் போன்று
திகழ் ஆழ நட்புடையார்
கரைவாழும் மானிடரும்
காழ்ப்பறியாப் பூப்புனிதர்
வரை போலும் உயர்குணத்தார்
வாழ்ந்தார்கள் ஒன்றாக.

சங்கிலியன் ஆளுகையில்
சற்குணம்சேர் குடிமக்கள்
பங்கமிலா ஆட்சியினால்
பரிபா லனம் செய்தான்
அங்கவர்கள் ஆளுநனாய்
இளஞ்சிங்கம் எனுமிளவல்.

குடிமக்கள் எல்லா மோர்
குலமக்கள் என வெண்ணி
அடிமைகளும் ஆள்பவரும்
அனைவருமே ஒன்றென்றும்
கொடி ஒன்றே காய் பலதாம்
கொள்கையை கொண்டிருந்தான்.

நீர் தேடும் மான் போன்று
நெறிதேடும் நன்மாந்தர்
ஓர் வாழும் அனைவருமே
ஒரு குடும்ப உறவோடு
வேர்விட்ட விழுதுடைய
விருட்சமென வே வாழ்ந்தார்.

### தூத்துக் குடியில் ஒரு துறவி

இப்படியாய் வாழுங்கால்
இந்தியாவின் தென் கரையில்
ஒப்பரிய ஒரு ஞானி
உலவி வரக் கேள்வியுற்று
அப்பெரியார் யார் என்று
அறிவதிலே ஆவலுற்றார்.

வெள்ளை நிறத் தோல் மனிதர்
வேற்று மொழி பேசுபவர்
அள்ள அள்ளக் குறையாத
அருட் சுரங்கமான அவர்
கள்ள மிலார் கல்விமானாம்
கர்த்தர் வழிப் போதகராம்.

பிரான்சிஸ்கு சவேரியெனும்
பெயர் கொண்டார் பிறர் வாழ
பிராணை அர்ப்பணித்து
பின்னர் சாவினை வென்ற
பிரான் இயேசு மதம் சாற்றும்
பெருமகனாம் அத்துறவி.

அன்புடன் அகிம்சை வழி
அவர் கூறும் மறை நெறியாம்
என்பதும் பிறர்க்குரித்தாம்
என்பதவர் இலட்சியமாம்
இன்ப நல் வீட்டினுக்கு
இவர் வழியை உரைப்பவராம்.

இறை முதல்வன் முன்பாக
ஏற்றமோ தாழ்வில்லை
குறை நிறை என்கின்ற
கூறுகள் பலவில்லை
கறையது இல்லாத
கட்டளையாம் போதனைகள்

தூத்துக் குடிக் கரையில்
துறவி அவருள்ளார்
பூத்துக் குலுங்கு கின்ற
பூம்பொழிலைப் போலவரின்
கூற்றைக் கேட்பதற்கு
கூடுகிறார் மக்கள் தொகை.

அறமது கூறும் அந்த
அற்புத மறையினை யாம்
திறமுற அறிந்திடுதல்
தேவையே எனக் கண்டு
துறவியை வரவழைக்க
தூதினை அனுப்புமென்றார்

தூதுக் குழுவொன்றை
தூத்துக் குடிக் கனுப்பி
மோதும் கடல்தாண்டி
முனிவரவர் வந்திங்கு
வேதமொழி மொழிவதற்கு
வேண்டிட முடிவெடுத்தார்.

இந்தக் கருத்தினை
இயம்பிட இடைமறித்து
தந்தார் இன்னொருவர்
தயவாய் தன் கருத்தை
அந்தக் கருத்தென்ன
அதனையும் கேட்போமே.

"சைவமே தமிழென்பார்
சகலதும் அதுவென்பார்
கைதொழும் மதம் மாறில்
காவலன் அதை ஏற்காய்
செய்குவன் இடரெதுவும்
சிந்தித்துச் செயற்படுக"

"திருக்கேதீஸ் வரக் கோயில்
திகழ் மாந்தை மன்னாரில்
செருக்கோடு வந்தவன் யார்
செப்புதற்குப் புது வேதம்
உருக்கொள்வான் சங்கிலியன்
உண்டாகும் கலவரங்கள்"


"புதுவேதம் பின்தொடரல்
புதைகுழிக்கு வழிகோலும்
மது போலும் மதமாகும்
மக்களுக்கு கேடு தரும்
எதுவும் யாம் சிந்தித்து
ஏற்றவைகள் செய வேண்டும்"

சாற்றிய அவர் கருத்தை
சபை யதுவோ ஏற்கவில்லை
கூற்றிலே நிறைவுண்டு
குழப்பமேன் கொளல் வேண்டும்
ஈற்றிலே முடிவெடுத்தார்
இந்தியா செல்வதற்கு.

(காவியம் தொடரும்)

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி



பேய்களின் பிரச்சாரப் பிரிவின் பொறுப்பாளர் தன் படையணியினருக்கு பதவியுயர்வு போட்டிப் பரீட்சையை நடத்தினார். எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற, முதல் நிலை வகித்த 3 பேருக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. நடுநிலைமையைக் காப்பாற்றுதற்கும், சிறந்த ஒரு நபரைத் தேர்ந்தெடுப்பதற்கும் வேறு சிறப்புப் படைப் பிரிவுகளிலிருந்து அவற்றின் பொறுப்பாளர்கள் 5 பேர் நடுவர்களாக அழைக்கப் பட்டிருந்தார்கள். தேர்வுக்கான குறித்த நாள் வந்தது. 3 பரீட்சாத்திகளிடமும், "மக்களின் இறை நம்பிக்கை, இறைப்பற்றினை இல்லாதொழிக்க என்ன சிறந்த சிந்தனையை மக்கள் மனங்களில் விதைக்கலாம்?" என்ற கேள்வியே கேட்கப்பட்டது. சிறப்பான, கவர்ச்சியான, சாத்தியமான, சுருக்கமான, சுவையான சிந்தனையை முன்வைப்பவரே முதலிடம் பெறுவர் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

முதலாமவர் கேட்கப்பட்டபோது, "மோட்சம் இல்லை என்று மக்களிடம் பரப்புரை செய்யலாம்." என்ற கருத்தை முன்வைத்தார். நடுவர்கள் திருப்தி அடையவில்லை. ஏனென்றால், மோட்சம் என்று ஒன்று உண்டு என்று பலர் நம்புவதினால், மோட்சம் இல்லை என்பதை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்தனர். இரண்டாமவர் அழைக்கப்பட்டபோது, "நரகம் இல்லை என்று பரப்புரை செய்யலாம். ஏனெனில் நரகம் இல்லை என்றால், மக்கள் தான்தோன்றித்தனமாக வாழ எத்தணிப்பார்கள்." என்றான். இங்கேயே பலருக்கு வாழ்க்கை நரகமாக மாறியிருக்கும்போது, நரகம் இல்லை என்றால் இதனையும் பலர் நம்பப் போவதில்லை.!.... அதனால், இக்கருத்தும் நிறைவளிக்கவில்லை. மூன்றாமவர், "மோட்சமும் உண்டு. நரகமும் உண்டு. ஆனால், இப்ப என்ன அவசரம்? பிறகு பார்ப்போம். பேந்து பார்க்கலாம் என்று பரப்புரை செய்யலாம்" என்று கூறிய போது, இக்கருத்து நடுவர்களால் சிறப்பாக வரவேற்கப்பட்டு, ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரச்சாரத்திற்கு அங்கீகரிக்கப்பட்டது.

நம்மவர்களில் பலர் பொதுவாக எல்லா விடயங்களுக்கும், கடைசி நேரம் வரை காத்திருப்பார்கள். (TILL THE VERY LAST MOMENT OR THE ELEVENTH HOUR). அது பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதாக இருந்தாலென்ன, பிரயாணம் போவதாக இருந்தாலென்ன, யாரையாவது சந்திக்க வேண்டியிருந்தாலென்ன, பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்ப்பதாக இருந்தாலென்ன, நிகழ்வொன்றிலே பங்கேற்பதாக இருந்தாலென்ன, வேலைக்குச் செல்வதாக இருந்தாலென்ன எல்லாவற்றிற்கும் கடைசி நேரம் வரை இருப்பார்கள். இந்தக் கவலை இல்லாத – மன்னிக்கவும் - 'கர்லம் கடந்த' மனிதர்கள்.....!

இரண்டாவதாக இப்படிக் கடைசி நேரத்திலாவது குறிப்பிட்ட செயலைச் செய்து முடித்தாலும் பரவாயில்லை. ஆனால் பலர் அதனையும் கைவிட்டு பிற்போட்டு விடுகிறார்கள்.

உங்களையே நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் பிற்போட்ட எச்செயலை இதுவரையில் செய்து முடித்திருக்கிறீர்கள்? சாதாரணமாக பிற்போடுகின்ற காரியங்கள் அப்படியே தொங்கி நிற்பதையும், அல்லது அப்படியே கைவிடப்படுவதையுமே காண்கிறோம். காலவதியான (EXPIED DATE) பொருள் போன்ற ஒன்றாக மாறிவிடுகிறது. இதனால் பயனுள்ள பல வாய்ப்புக்களை இழந்து விடுகிறோம். அதனால்தான், 'நாளை என்பது இல்லை என்பதற்குச் சமன்.' என்று சொல்கிறார்கள். எனவேதான், 'நன்றே செய், அதை இன்றே செய்' என்கின்றனர்.

இயேசுகூட "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" (லூக்கா 19:9) என்றும், "நீ இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்...."(லூக்கா 23:43) என்றும் கூறி வாழ்வை, மீட்பை அக்கணமே வழங்குகிறார்.

எனவே நமது வாழ்வின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்குத் தடையாக விளங்கும் 'பிறகு பார்ப்போம்' எனும் பிற்போடும் மனநிலையை நீக்குவோம். அன்றன்றைய நாள் கடமைகளை, காரியங்களை அன்றைய நாள்களிலே முன்னெடுப்போம். வாழ்விலே வளர்ச்சியும், செயல்களில் வெற்றியும் நமதாகும். என்ன ஆயத்தமா?

# மறைக்கல்வி நிலையச் செய்தி மடல்

## மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகள்

### நற்கருணை ஆண்டை முன்னிட்டு

## நற்கருணை வினாவிடைப் போட்டி – 2005



இவ்வருடம் மன்னார் மறைமாவட்டத்தின் முக்கிய நிகழ்வாகிய நற்கருணை ஆண்டை முன்னிட்டு, மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் "நற்கருணை வினா விடை" எழுத்து மூலமான போட்டி நிகழ்வு ஒன்று மாணவர்களுக்கு நடாத்தப்பட உள்ளது.

நற்கருணையோடு தொடர்புடைய 150 வினாக்களும், அதற்குரிய விடைகளும் தயார்செய்து, குறிப்பிட்டளவு பிரதிகள் பங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் தொகைக்கு ஏற்ப, இவற்றைப் பிரதிசெய்து வழங்குவதற்குரிய ஒழுங்கை அவ்வப்பங்குகளே மேற்கொள்ள வேண்டுமென பங்குத் தந்தையர் கேட்கப்பட்டுள்ளனர். இப்போட்டி பங்கு மட்டத்தில் செப்ரம்பர் 10ந் திகதி நடைபெற்றுப் பின்னர் மறைமாவட்டத்தில் செப்ரம்பர் 17ந் திகதி நடைபெறும்.

### போட்டிக்கான குழுக்களும் வினாவிடைகளும் பின்வருமாறு

| குழு | தரம் | வினா விடைகளின் தொகை |
|---|---|---|
| 1. | 3,4,5 | 1 – 75 வரையான வினா விடைகள் |
| 2. | 6,7 | 1 – 100 வரையான வினா விடைகள் |
| 3. | 8,9 | 1 – 125 வரையான வினா விடைகள் |
| 4. | 10,11,12 | 1 – 150 வரையான வினா விடைகள் |

பங்கு மட்டத்தில் இப்போட்டி நிகழ்வுகளை குறிப்பிட்ட தினத்தில் நடாத்தி, 1ம்,2ம்,3ம் இடம்பெறும் மாணவர்களைத் தெரிவுசெய்து, மறைமாவட்ட மட்டத்தில் நடைபெறுகின்ற போட்டிக்கு அழைத்து வரும்படியாக கேட்கப்பட்டுள்ளது. மறைமாவட்ட மட்டப் போட்டியில், தெரிவுசெய்யப்படுபவர்கள் சிறந்த பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படுவர். பெயர்கள் மன்னா பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும். பங்கு மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு, அவ்வப் பங்குகளே பொறுப்பேற்று பரிசுகள் வழங்கும்

குறிப்புகள்

இப்போட்டிகளை நடாத்துவதன் நோக்கம் போட்டி அடிப்படையில் தகுதி வாய்ந்த மாணவர்களைத் தெரிவுசெய்து பரிசுகளை வழங்குவது மட்டுமல்ல மாறாக நற்கருணை ஆண்டாகிய இந்த ஆண்டில நற்கருணை பற்றிய அறிவை எல்லா மாணவர்களும் பெற்று, பயனடைய வேண்டும் என்பதேயாகும். இப்போட்டிக்கு மறையாசிரியர், பெற்றோர் ஆகியோரின் பங்களிப்பு மிக அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பங்கு மட்டத்தில் ஆயத்தங்களை மேற்கொண்டு மாணவர்களை ஊக்குவித்து, தயார்செய்து, சிறப்பான முறையில் போட்டிகளை நடாத்தி முடிக்குமாறு பங்குத் தந்தையர்களையும் பங்கு மறையாசிரியர் ஒன்றியங்களையும் மறைக்கல்வி நிலையம் கேட்டுள்ளது.

## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க

### நிர்வாக உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல்

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரிய சங்க நிர்வாக உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த ஒகஸ்ட் மாதம் 19,20ந் தகிதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. 19ம் திகதி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வு 20ந் திகதி மதிய உணவுடன் நிறைவுபெற்றது. இந்நிகழ்வில் அருட்சகோதரி றெஜினா அவர்கள் *பங்கில் கத்தோலிக்க ஆசிரியரின் இறையரசுப் பணி* பற்றி சிறப்பான கருத்துரை வழங்கினார். அடுத்த நாள் காலை அருட்பணியாளர் லாசர் சவிரிமுத்து அவர்கள் இறைவார்த்தையின் வலிமை பற்றி தியான உரை வழங்கினார். பின்னர் குழு கலந்துரையாடல்களும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## மறையாசிரியர் ஒன்றிய

### நிர்வாகிகளுக்கான ஒன்று கூடல்

மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர் ஒன்றிய நிர்வாக சபையினருக்கான ஒன்றுகூடல் கடந்த 26,27ந் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. 26ம் திகதி வெள்ளி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்த ஒன்று கூடல் 27ந் திகதி காலை உணவுடன் நிறைவுபெற்றது.

இவ்வொன்றுகூடலில் அருட்சகோதரி றெஜினா அவர்களினால் *மறையாசிரியர்களின் வாழ்வும் பணியும்* பற்றிய கருத்துரை இடம்பெற்றது

இக்கூட்டத்தில் பணிகள் பற்றிய மீளாய்வு, மறையாசிரியர் தேர்வு, நற்கருணை வினாவிடைப் போட்டி, நற்கருணைப் பாடத்திட்டம், பங்கு மறைக்கல்வி, அருட்சாதனப் பாசறைகள், மறையாசிரியர் - களுக்கான பயிற்சிகள், மறைக்கல்வித் தேர்வு, மறைக்கல்வி வாரம் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

### துறவற வாழ்வில் பொன்விழா வெள்ளி விழாக் காணும்

## திருக்குடும்ப அருட்சகோதரிகள்

### அருட்சகோதரி அமலி

இவர் மன்னார் முத்தரிப்புத்துறையில் அமரர் வின்செண்ட் பெரேராவுக்கும் மாசில்லா துரத்துக்கும் அருமைப் புதல்வியாக 1933ம் ஆண்டு மாசித் திங்கள் 5ம் நாள் பிறந்தார்.

குடும்பத்தின் ஏகபுதல்வியாக இரு ஆண் சகோதரர்களுடன் விசுவாசத்திலும் நற்புண்ணியங்களிலும் நன்கு வளர்ந்து வந்த இவர் தமது கிராமத்திலுள்ள ஆரம்பப் பாடசாலையில் தனது கல்வியை முடித்துவிட்டு இருந்த காலத்தில் அங்கு பங்குக் குருவாக பணிபுரிந்த அருட்பணி. மைக்கல்சாமி அவர்களின் ஊக்கத்தினால் இளவாலையில் உள்ள திருக்குடும்ப கன்னியர்களின் பாடசாலையில் நவசந்நியாச ஆரம்ப நிலைக்குள் அடி எடுத்து வைத்து 1955ம் ஆண்டு தனது முதல் அர்ப்பணத்தைச் செய்தார்.

1956 மாசி 5ம் திகதி இளந்துறவியாக தனது ஆசிரியப் பணியை இளவாலையில் ஆரம்பித்து ஊர்காவற்துறை, சில்லாலை, மாதகல், பேசாலை, தலைமன்னார், நானாட்டான், வவுனியா ஆகிய இடங்களில் ஆசிரியையாக பணியாற்றியதுடன் குழுவில் விசேட பொறுப்புகளை ஏற்று பணிபுரிந்தார். சமுகத்தில் ஏழைகள் மத்தியில் பணிபுரிந்து அவர்கள் துயர் போக்கி உதவி செய்தார். 1991 - 1993 வரை வவுனியாவில் போதனா ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டு அயற் பாடசாலைகளிலும் அவரது பணி பரந்து சென்று பயனளித்தது. 1993ல் ஆசிரியப் பணியிலிருந்து இளைப்பாறியபின் கிளிநொச்சியில் குழுத்தலைவியாக தனது பணியைத் தொடர்ந்தார். 1997 - 1999 வரை முழங்காவில் அன்பகத்தில் சிறுவர் இல்லத்தைப் பொறுப்பேற்று அங்கு வந்தவர்களை தாயன்புடன் பராமரித்து அனாதரவாக விட்டுச்சென்ற பச்சைப் பாலன்களையும் பராமரித்து ஆளாக்கிய பெருந்தகை இவர்.

அதன் பின்னர் 2002 வரை மன்னார் குழுவில் இணைந்தார். மறைக்கல்வி நடுநிலையத்தில் கற்பித்தல் மேற்பார்வையாளராகவும் விரிவுரையாளராகவும் குடும்ப பணியகத்தில் விரிவுரையாளராகவும் திருக்குடும்ப பொது நிலையினர் துணை அங்கத்தவர்களின் உருவாக்கத்திற்கு பொறுப்பாளராகவும் இருந்து சிறந்த பணியாற்றினார்.

2002ல் இருந்து இன்று வரை வங்காலையில் இவர் ஆற்றிவரும் பணிகள் வியப்புக்குரியதே. புனித தேரேசாள் மன்றம் ஒன்று அமைக்கப்பட்டு இளம் பிள்ளைகளுக்கு தையல், பின்னல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவர்கள் கிறிஸ்தவ மதிப்பீடுகளிலும் நெறிப்படுத்தப்பட்டனர். 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான நற்கருணைக் குழு ஒன்றையும் இவர் அமைத்தார். பங்கில் நற்கருணை வழிபாடுகள் இக்குழுவினரால் முன்னின்று நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பணிகள் அனைத்தையும் செய்ய இவருக்கு சக்தியளிப்பது என்ன? எனும் வினாவிற்கு அவரின் பதில், "எனது குழுவில் எமது ஒன்றிணைந்த வாழ்வு, செபம், குழுத்தலைவிகள் சகோதரிகளின் பக்கத்துணை, பாராட்டு, ஊக்குவிப்பு இவைகள்தான் எனக்கு சக்தியையும், உற்சாகத்தையும் அளிக்கின்றது. அத்துடன் பங்குக் குருக்களின் ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் எனக்கு ஊக்கத்தை உற்சாகத்தை அளிக்கின்றன" என்கிறார். எமது கண்ணோட்டத்தில் இவரின் விசுவாச வாழ்வு, அர்ப்பணிப்பு, கையளிப்பு, அன்புறவு, சுயமறுப்பு, செபவாழ்வு சபையின் மனப்போக்கான *இறைவன் மாத்திரமே அவர் ஒருவருக்கே மகிமை* என்னும் வாழ்வு ஆகியவையே இவருடைய மகிழ்ச்சியின் ரகசியமாகும்.

*அருட்சகோதரி மெற்றில்டா ஞானப்பிரகாசம்.*

### அருட்சகோதரி மேரி கத்தரீன்

1935ம் ஆண்டு மிக்கேல் கூஞ்ஞ, றோஸ் மரியை அல்போன்ஸ் ஆகிய பெற்றோருக்கு 4வது பிள்ளையாகப் பிறந்தார்.

அன்னார் தனது ஆரம்பக் கல்வியை தலைமன்னார் புனித லோறன்ஸ் வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். பின் நடுத்தர வகுப்புக்களை மன்னாரிலும், மேல் வகுப்புக்களை யாழ் இளவாலை திருக்குடும்ப மடத்திலும் பயின்று துறவற வாழ்க்கைக்கு தன்னை அர்ப்பணித்தார்.

1954ம் ஆண்டு தொடக்கம் 1985ம் ஆண்டுவரை மன்னார் மறைமாவட்டத்திலும், யாழ் மறைமாவட்டத்திலும் ஆசிரியராகவும், அதிபராகவும் தனது வாழ்க்கையை கல்வி கற்பிப்பதிலும் தலைமைத்துவத்திலும் அர்ப்பணித்தார்.

இதன்பின் வெளிநாடான பிலிப்பைன்சில் அடிமட்டத்தில் வாழ்ந்த மக்களுக்கு சேவை செய்ய தானே மனமுவந்து சென்றார். பிலிப்பைன்சில் சுமார் 20 வருட வாழ்வை இறைவனுக்கு தொண்டு புரியும் ஊழியராக இருந்து அங்கே தனது 50ஆவது வருட துறவற வாழ்க்கையை நிறைவுசெய்கிறார்.

இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் ஓர் விசுவாசமான ஊழியக்காரியாக 50 ஆண்டுகளை இவர் நிறைவு செய்கின்றார். அன்னாருக்கு இறைவன் மென்மேலும் நீடிய ஆயுளைக் கொடுத்து தனது அருட்கரங்களினால் தொட்டு ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் இன்னும் இறையரசுப் பணியில் சளைக்காது வீறுநடை போட இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

### அருட்சகோதரி அழகேஸ்வரி

நானாட்டானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருக்குடும்ப சபையின் துறவியுமாகிய அருட்சகோதரி அழகேஸ்வரி செபஸ்ரியாம்பிள்ளை 2005 ஐப்பசி 1ல் தனது துறவற வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காணுகின்றார். இவர் தனது பணியினை முதலில் கிளிநொச்சி கரடிப்போக்கு சிறுவர் இல்லத்திலும், கொழும்பு முகத்துவாரம் என்னுமிடத்தில் சமூக சேவையோடு சுகாதார டிப்ளோமா கல்வியையும் தொடர்ந்தார். தொடர்ந்து துறவிகள் உருவாக்கத்தை கொழும்பிலே முடித்துக்கொண்டு யாழ் நகரில் பாலர் பாடசாலையுடன், வைத்தியசாலையிலே நோயாளர் சந்திப்பை மேற்கொண்டார். பின்னர் புனித றொக்ஸ் வித்தியாலயத்தில் கல்விப்பணியோடு பட்டப் படிப்பையும் தொடர்ந்தார். பின்னர் யாழ் திருக்குடும்ப பாடசாலையின் ஆரம்ப பிரிவில் பணியாற்றும்போது பி. ஏ. படிப்பை நிறைவுசெய்தார்.

தற்போது இவர் மானிப்பாய் புனித அன்னாள் பாடசாலையின் அதிபராக பணியாற்றி தன் கல்வி பட்டப் பின்படிப்பை தொடர்வதோடு சமூகப் பணியும் ஆற்றி இறையன்பின் துறவியாக வாழுகின்றார். மன்னா சார்பாக அன்னாருக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

### ஜேர்மன் கொலோன் நகரில் ......

1ம் பக்கத் தொடர்ச்சி

திருத்தந்தையின் திருப்பலியில் பங்கெடுக்க ஆயிரக்கணக்கான குருக்கள் வரிசையில் இருந்தனர். திருத்தந்தையை அருகில் நின்று பார்க்க முடியாதவர்களுக்கு உதவியாக ஆங்காங்கே பெரிய அளவிலான 15 தொலைக்காட்சித் திரைகள் வைக்கப்பட்டிருந்தன. முன்னதாக சனிக்கிழமை நடந்த வழிபாட்டில் பேசிய திருத்தந்தை, *கொள்கைகள் மட்டுமே உலகைக் காப்பாற்றிவிடாது. அனைவரும் ஆண்டவன் பக்கம் திரும்ப வேண்டும* என்றார்.

### 13 வயதின் கீழ்பிரிவினருக்கான ....

1ம் பக்கத் தொடர்ச்சி

லீக் முறையிலான முதல் சுற்றில் கொழும்பு தேஸ்ரன் கல்லூரியுடன் 1:1 என்று சமநிலையிலும், பதுளை ம.ம.வி உடன் 1:1 என்று சமநிலையிலும், நுவரெலியா திரித்துவக் கல்லூரியுடன் 2:0 என்று வெற்றியீட்டியும், மாத்தறை சென். தோமஸ் கல்லூரியுடன் 2:1 என்று வெற்றியீட்டியும் மொத்தம் 8 புள்ளிகளுடன் 2ம் சுற்றுக்குத் தெரிவானது.

அரையிறுதிப் போட்டியில் கண்டி தர்ம தத்துவ கல்லூரியுடன் 2:1 என்று பெனால்ரி முறையில் வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி, இறுதிப் போட்டியில் கண்டி கடுகஸ்தோட்ட சாகிறா கல்லூரியுடன் மோதி பெனால்ரி முறையில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 2005ம் ஆண்டு சாம்பியனாகி, மன்னாருக்கு பெருமை தேடித் தந்துள்ளது.

இச்சாதனை வீரர்களை மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். ஏ. றெவ்வல், மற்றும் திணைக்களத் தலைவர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மன்னார்வாழ் மக்கள் யாவரும் புடைசூழ்ந்து கல்லூரி மாணவர்களின் பேண்ட் வாத்திய இசையுடன் நகர நுழைவாயிலில் இருந்து மாலை அணிவித்து, கரகோஷம் முழங்க கல்லூரியை நோக்கி அழைத்து வந்தனர். இம்மாபெரும் சாதனையை நிகழ்த்த காரணமாயிருந்த கல்லூரி அதிபர் சகோ. J. ஸ்ரனிஸ்லாஸ் அவர்களையும், பயிற்றுவிப்பாளர் திரு. ரி. ஜேக்கப், அணித்தலைவர் ஆ. இம்தாத் மற்றும் வீரர்களையும், உதவிய ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் யாவரையும் மனமார வாழ்த்துகின்றோம். -

*P. ஞானராஜ்*

## நன்றி நவிலல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 09 - 10 - 1961 | 26 - 06 - 2005 |

அமரர் ச. நிமால் யோசவ் பீரிஸ்

( U. N. H. C.R அலுவலர்)

*"தன் உயிரை நேசிக்கிறவன் அதை இழந்து விடுவான். இவ்வுலகில் தன் உயிரை வெறுப்பவனோ முடிவில்லா வாழ்வுக்கு காப்பாற்றிக் கொள்கிறான்" யோ. 12: 24 - 25*

26.06. 2005 அன்று எம்மிடமிருந்து இறைவனிடமாய் சென்ற திரு. நிமால் பீரிசின் மரணச் சடங்கிலும் இறுதி நிகழ்விலும் கலந்து எமது துயரில் பங்குகொண்ட ஆயர், குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்கள், அரச அதிபர், அதிகாரிகள், ஊழியர்கள், U.N.H.C.R அலுவலர்கள், கல்விப் பணிப்பாளர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், அனைத்து அரச, அரச சார்பற்ற அதிகாரிகள், அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கழகங்கள், மன்றங்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அத்தோடு வெளிநாடுகளில் இருந்தும் அனுதாபச் செய்திகளை அனுப்பிய அனைத்து நல்உள்ளங்களுக்கும் எங்களது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து நிற்கின்றோம். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுமாறு வேண்டுகின்றோம்.


தகவல் : தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர், உறவினர்

## இருபத்தைந்து ஆண்டுகளைக் காணும் மன்னார் மறைமாவட்டம்

# மன்னாரில் புனித வளனார் துறவற சபையினரின் பணி

## சிறு வரலாற்றுக் கண்ணோட்டம்

### கல்முனையிலிருந்து அருட்சகோதரர். கலாநிதி எஸ். ஏ. ஐ. மத்தியு



மன்னார் என்பது பூர்வீகப் பெயர். மாதோட்டம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடம். கலங்கள் வந்து போகும் ஒரு வாணிப நெருக்கடியுள்ள இடம். இலங்கை வரலாற்றில் அதற்குச் சிறப்பிடம் உண்டு.

மன்னார் என்பதன் கருத்து என்ன? இதை ஆய்வாளர்களின் முடிவுக்கு விட்டுவிடுவோம். சாதாரணமாக *'மன்'* என்றால் 'நிலைபெற்ற' என்பதாகும். *'ஆறு'* என்பது 'வழிப்படுத்தல்.' *சிறுபானாற்றுப்படை, பெரும்பானாற்றுப்படை* என்று படிக்கின்றோமல்லவா. திருமுருகனுக்கு ஆற்றுப்படுத்தும் *திருமுருகாற்றுப்படையும்* உண்டல்லவா. மன்னார் (று) (மன் ஆறு) ஆற்றுப்படுத்தும் நிலை பெற்ற வழியாக இருந்திருக்கலாம்.

இவ்வாற்றுப்படுத்தல் இலங்கை, இந்தியா ஒரு காலத்தில் அழிந்து விட்ட லெமூறியாக் கண்டம் எனப்படுகின்ற இடங்களின் நிலைபெற்ற வழி (மன்னார்) முத்துக்களை அள்ளிச் செல்லும் பொருளாதாரம் மிக்க ஊராக இருந்திருக்கலாம். இவற்றையெல்லாம் ஆய்வாளர்களுக்கு விட்டுவிடுவோம். இதை ஆராய்வது சுலபமான காரியமுமல்ல.

### *இறைபணியாளர்களுக்கு நன்றி*

இருபத்தைந்து ஆண்டு காலத்தில் இரண்டு ஆயர்களை கண்டு கொண்டது புதிய மன்னார் மாவட்டம். ஈழத்தில் மிகக் கஷ்டமான காலகட்டத்தில் மன்னாருக்கு தலைமை வகித்த, வகிக்கின்ற இந்த ஆயர் பெருமக்களின் அயராத பெருமுயற்சிகள் பாராட்டுக்குரியன. இவர்களோடு வியர்வைகள் சிந்த உடனுழைப்பாளிகளாக இருந்த குருக்களுக்கும், துறவியர்களுக்கும், மக்கள் நலம் போற்றிய இறை பணியாளர்களுக்கும் அஞ்சலி செலுத்த வேண்டிய பெருநாள் இருபத்தைந்தாவது நிறைவு ஆண்டாகும்.

இவ்வேளையில் நினைத்துப் பார்க்க வேண்டியவை ஏராளம் உண்டு. அனைத்தையும் இச்சிறு கட்டுரை வாயிலாக வெளிப்படுத்தல் கடினமானது. யூபிலி விழா மலர் ஒன்று ஆவணமாக வெளிவருமாயின் ஆய்வாளர் பலர் அதில் எழுதுவார்கள். இச்சிறு கட்டுரை இருபத்தைந்தாவது ஆண்டு பூர்த்தியான புதிய மறைமாவட்டங்களில் ஒன்றைப் பற்றிய சிறு தொகுப்பாக நாம் எண்ணவில்லை.

### *புனித பிரான்சிஸ் சேவியர்*

ஒரு மறைமாவட்டம் உருவாவது எளிதான விடயமல்ல. 1840 களில் இலங்கை முழுவதுமே கோவா மறைமாவட்டக் கிளையாக இருந்த வரலாற்றை எண்ணிப் பார்ப்போம். அதனிலும் மேலாக இறை விசுவாசத்தை மன்னார் மக்களினூடாக விதைத்த ஒரு பெருந்தகையை நாம் நினைவு கூருதல் வேண்டும். ஸ்பானிய நாட்டு பெரும் தலைவன் - விசுவாசி – புனித பிரான்சிஸ் சேவியர் என்பவரே அவர். தென் கிழக்கிந்திய கோவாவில் அவருடைய அழியாத உடல் இன்னும் உள்ளது. இம்மாபெரும் புனிதரை நினைவுகூரும் நாளும் இந்த ஜுபிலி ஆண்டாகும்.

### *மன்னார் வேதசாட்சிகள்*

யாழ்ப்பாண இரண்டாம் சங்கிலி மன்னன் 600 கிறிஸ்தவர்களை துடிக்கத் துடிக்க வெட்டிக் கொன்ற இடம் மன்னார். மறைமாவட்டமாகும். இது இலங்கைத் தீவின் கிறிஸ்தவ வரலாற்றில் சிகரமான இடமாகும். ஏன் கொன்றான்? எதற்காக கொன்றான்?என்பதெல்லாம் இன்றளவும் ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தப்படவில்லை. இது கவலைக்குரியதே. இது பற்றிய ஆழமான ஆராய்ச்சிகள் முடுக்கிவிடப்படவேண்டும் என இவ்வேளையில் வலியுறுத்துவது அவசியமாகும். இந்த வேதசாட்சிகள் தம் இரத்தத்தினால் பெருவிருட்சங்களை உருவாக்கி உள்ளார்கள்.

### *புனித வளனார் துறவற சபையினர்*

புனித வளனார் துறவற (Sociaty of St. Joseph - S.S.J) சபையினர் மன்னாரில் கல்வித் தொண்டிற்காக காலடி வைத்த ஆண்டு 1894 ஆகும். அவர் தம் வரலாறு இக்கட்டுரையில் பின்னர் குறிக்கப்படும். மன்னார் வேதசாட்சிகளுடைய கல்லறைகளின் வரலாறு கண்டு ஒருநூல் எழுதியவர் ஒரு வளனார் துறவற சபைத் (S.S.J) துறவியாவார். இந்நூல் கொழும்பு மறைமாவட்ட நூலகத்தில் இருப்பதாக எனக்கு ஞாபகமூட்டியவர் முன்னை நாள் குருமடத் தலைவர் அருட்பணி பெனாண்டோ அடிகளாவார். இந்நூலும் ஆய்வுக்குப் பயன்படுமல்லவா?

மேற்கூறியவற்றை இங்கு குறிப்பிட முக்கிய காரணம் இந்த ஜுபிலி ஆண்டில் நாம் நினைவுகூர வேண்டிய நன்றியாகும். மிக பிரசித்தி பெற்ற மடு மாதா திருக்கோயில் மன்னாரில் அமைந்துள்ளது. இலங்கை வாழ் அனைத்து மக்களினதும் பக்தியின் இருப்பிடம் அதுவாகும். காட்டில் அமைந்துள்ள அந்தத் திருத்தலம், இலங்கை வாழ் மக்கள் வழிபட்டு புனிதம் பெறும் தலமாகும். அது மக்கள் விசுவாசத்தின் விளக்காக ஒளி விடுகின்றது.

அதன் வரலாற்றில் ஒரு சிறு துளி. புனித வளனார் சபைத் துறவிகளில் ஒருவர் பல்துறை ஆற்றல் நிரம்பப் பெற்றவர். அவர் அத் திருக்கோயிலின் பிரதான வாயிலின் அல்லது முகப்புக் கதவினை வடிவமைத்து செப்பம் செய்து தம் கரங்களினால் பூட்டினார் என்பதை அவர் தம் வாயிலாக 1960 களில் பலமுறை சொல்லக் கேட்டது நாம் அறிந்ததாகும். வேறு ஆதாரங்கள் எம்மிடம் கிடையாது. 1894ம் ஆண்டை ஒட்டிய காலப் பகுதியில் இது நடைபெற்றிருக்கலாம்.

இவற்றையெல்லாம் நாம் குறிப்பிடுவதற்குப் பல்லாயிரம் மக்கள் விசுவாசிகளினருக்கும், குருத்துவப் பரம்பரையினருக்கும், ஏனைய துணை நின்றோருக்கும் நன்றி நவில்வது இவ்வேளையில் பொருத்தமானது.

"நான் சுகப்படுத்திய பத்துப் பேரில் இவ் அந்நியனான சமாரியுன் ஒருவன்தானே நன்றி கூற வந்தான்." என இயேசு நன்றியின்மையைக் கடிந்து கொள்வதையும் முக்கிய கருத்தாக நாம் கொள்ள முடியும்.

ஒரு காலத்தில் புனித வளனார் துறவற சபையின் மேலாளர் பதவியினை மும்முறை வகித்தவன் என்ற வகையில் மன்னார் மறைமாவட்டத்திற்கு அது எமது சபை யாழ் மறை மாவட்டத்தோடு இணைந்த காலப் பகுதியில் செய்த கல்விச் சேவைகள் பற்றிக் குறிப்பிடல் அவசியம் என நினைக்கின்றேன்.

இன்றைய புனித சேவியர் கல்லூரி 1870ல் ஆரம்பிக்கப்பட்டது. அது அதற்கு முன்னர் 'நல்லாயன் பாடசாலை' எனப் பெயர் பெற்றிருந்தது. இதனுடைய விருது வாக்கு "FORTRES IN FIDE" (STRONG IN FAIT) மன்னார் 600 வேதசாட்சியரின் ஞாபகார்த்தமாக இவ்விருது வாக்கியம் எழுந்திருக்கலாம். இக்கல்லூரி சமயத்திற்கும், சமூகத்திற்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. 1894ம் ஆண்டில் கொழும்புத் துறையை தாயகமாகக் கொண்டிருந்த புனித வளனார் சபையினர் யாழ்ப்பாணத்திற்கு வெளியேயுள்ள தமது பணித்தளமாக புனித சேவியர் பாடசாலையைப் பொறுப்பேற்று நடத்தினார்கள். அருட்சகோ. K. பீலிக்ஸ் (S.S.J) அவர்கள் தலைவர் ஆவார். அக் கல்லூரி அவரது இதயமாக மாறியது. கல்லூரி பல்துறை வெற்றியினைக் கண்டது. மாணவரது ஆன்மீக வளர்ச்சி மிகவும் குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் நாம் நினைவுகூர வேண்டியோர் அருட்பணி. மேரி (Mary) (O.M.I) இவரே பங்குத்தந்தை. இவர் நீண்ட வரலாற்றைச் சுருக்கிக் கொண்டு தமது நன்றிகளை அவருக்குச் சமர்ப்பிப்போம்.

அருட்திரு. K. பீலிக்ஸ், அவர்களுடன் அருட்திரு V. பேதுறுப்பிள்ளை, அருட்திரு S. மரியாம்பிள்ளை, (S.S.J) போன்றோர் மாணவர்களையும் மக்களையும் கவர்ந்த விதம் தனி வரலாறாகும்.

மன்னார் கல்வி வரலாற்றில் பெண்களுக்கான கல்விக்கு உரமிட்டு வளர்த்தவர்கள் திருக்குடும்பக் கன்னியர்கள் ஆவார்கள். அவர் தம் கல்வி வரலாறு தனித்துவமிக்கது. நீண்ட சொல்லொணாத் துயரமிக்கது. இந்த யூபிலி ஆண்டில் இவர் தம் சேவையை நினைவு கூருவோம்.

புனித சவேரியார் கல்லூரி வரலாற்றில் கல்விமான்களாகவும், நிருவாகிகளாகவும் பணியாற்றிய அருட்பணி வில்லியம் யேசுதாசன், அன்டோனியஸ், மத்தியூஸ், கருணாகரன், ஸ்ரனிஸ்லோஸ் தம் அரும்பணிகள் மூலம், இக்கல்லூரி வரலாற்றில் தனியிடம் பிடித்துக்கொண்டவர்களாவார். இச் சேவைகளும் இவற்றோடு இணைந்தவைகளும் ஒரு பெரு மலரில் வெளிவர வேண்டும். மன்னார் அறிஞர்கள் இத்திட்டத்திற்கு உயிரளிக்க வேண்டும்.

1951 தொடக்கம் புனித சவேரியார் கல்லூரி தனித்துவம் பெற்று பெண்களுக்கான தனிப் பாடசாலையை 1951ம் ஆண்டு *புனித சவேரியார் பெண்கள் பாடசாலை* என்ற பெயரில் உருவாக்கியது.

1951ம் ஆண்டு யாழ் ஆயர் எமிலியானுஸ் பிள்ளை (O.M.I) ஆண்டகை தனது சொந்த தமையனாராகிய டிலாசால் சகோதரருடைய மாகாண சிரேஸ்டராகிய அருட்சகோதரர் லூக் கிறேகரியை தலைமையாசிரியராகப் பணியில் அமர்த்தி மேலும் கல்வியைச் சிறப்புறச் செய்தமையை நாம் நன்றியோடு நினைவுகூர வேண்டும்.

அவரோடு பின்னர் கல்விப்பணி புரிந்த அருட்சகோதரர் அல்பேட் சீசர் (F. S. C) அருட்சகோதரர் ஹிலாரி ஜோசப் (F.S.C) அருட்சகோதரர் பொனிபஸ் பெரேரா (F.S.C) ஆகியோரது சேவைகள் சிறப்பிடம் பெறுகின்றன. இவர்களுள் மக்கள் மனங் கவர்ந்த அருட்சகோதரர் கில்லறி ஜோசவ் (F.S.C) மன்னார் கல்வி வரலாற்றிலும் கல்லூரி வரலாற்றிலும் தனியிடம் பெறுகிறார். 1894 – 1947 வரையில் புனித வளனார் துறவற சபையினர் ஆற்றிய கல்வி சமய சமூகப் பணிகள் தனிச் சிறப்பிடம் பெற வேண்டும்.

1947றகுப் பின் உள்ள காலப் பகுதியில் குறிப்பாக 1951ம் ஆண்டிலேயே டிலாசால் சகோதரர்கள் (Lasalian) யுகம் தொடங்கியது. மேலும் ஆங்கிலக் கல்வியை மன்னாரில் இக்கல்லூரி மூலமாக அறிமுகம் செய்து பணியாற்றிய அருட்பணி. கொலின் பிற்காலத்தில் ஆயராகிய ஜூலியன் (Julian) அருட்பணி. சின்னப்பர், அருட்பணி. E. ரொட்றிக்கோ ஆகிய பங்குத் தந்தையர்கள் நம் மனக்கண்முன் நிற்க வேண்டியவர்கள்.

இக்கல்லூரி 1939/04/17 ல் S.S.C எனப்படும் உயர் வகுப்பு அங்கீகாரம் பெற்று கல்லூரி என்ற உயர் ஸ்தானத்தையும் பெற்றுக்கொண்டது.

### முடிவுரை

கட்டுரையின் விரிவஞ்சி மேலோட்டமாக இதனை வரைந்துள்ளோம். குறிப்பாக மன்னார் மறைமாவட்டம் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் இவ்வேளையில் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆயர் அவர்களின் முயற்சி தனி ஆய்வுக்குரியது. பாராட்டுதல்களுக்கு உரியது. தற்போதைய ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு துன்பப்படுத்தப்படும், துன்புறும் மக்களுக்காக அஞ்சாது குரல் கொடுப்பவர். அவர் வாழ்க!

அவர் தம் குருக்கள், துறவியர், கன்னியர்கள் இறைமக்கள் குறிப்பாக பல்வகையிலும் வறுமைப்பட்டவர்கள் இவ்வேளையில் தெய்வ நம்பிக்கையில் வாழ்க என்று வாழ்த்துகின்றோம்.

## யாழ் மறைமாவட்டக் குருக்களுக்கான புதிய நியமனங்கள்

### பருத்தித்துறை மறைக்கோட்டம்

11. அருள்திரு. பி. எவ். போனிபஸ் பங்குத்தந்தை மிருசுவில்
12. அருள்திரு. ஜே.ஏ. அருள்தாஸ் உதவிப் பங்குத்தந்தை மிருசுவில்
13. அருள்திரு எஸ்.எம்.பி. ஆனந்தக்குமார் பங்குத்தந்தை கரவெட்டி
14. அருள்திரு ஜே.பி. அன்ரனிதாஸ் பங்குத்தந்தை தாளையடி
15. அருள்திரு. எஸ். நேசநாயகம் உதவிப்பங்குத்தந்தை தாளையடி.

### கிளி முல்லை மறைக்கோட்டம்

16. அருள்திரு. ஏ.எவ். பெனற் கிளிமுல்லை மறைக்கோட்ட முதல்வர் பங்குத்தந்தை கிளிநொச்சி.
17. அருள்திரு. ஏ. ஞானப்பிரகாசம் பங்குத்தந்தை இரணைப்பாலை
18. அருள்திரு. பி.எவ். இராஜசிங்கம் பங்குத்தந்தை புதுக்குடியிருப்பு
19. அருள்திரு. ரி. ரவிராஜ் பங்குத்தந்தை தருமபுரம்
20. அருள்திரு. ரி. ஆர். வசந்தசீலன் பங்குத்தந்தை வலைப்பாடு
21. அருள்திரு. சி. ஜஸ்ரின் பங்குத்தந்தை முழங்காவில்
22. அருள்திரு. எம்.ரி. சறத்ஜீவன் பங்குத்தந்தை உருத்திரபுரம்
23. அருள்திரு. எம். கான்ஸ்போவர் பங்குத்தந்தை குழமங்கால்
24. அருள்திரு. ஏ. அன்ரன் றோக் பங்குத்தந்தை வட்டக்கச்சி
25. அருள்திரு. ஏ.பி. திருமகன் உதவிப் பங்குத்தந்தை முல்லைத்தீவு.

### யாழ் மறைக்கோட்டம்


1. அருள்திரு. ஜி.வி. பிலேந்திரன் பங்குத்தந்தை பாண்டியன் தாழ்வு
2. அருள்திரு. எம் றெக்ஸ் சவுந்தரா பங்குத்தந்தை கொய்யாத்தோட்டம்
3. அருள்திரு. ஜி. அருள்நேசன் பங்குத்தந்தை நெடுந்தீவு
4. அருள்திரு. எக்ஸ். டுபிள்யு. ஜேம்ஸ் பங்குத்தந்தை ஊர்காவற்றுறை

### இளவாலை மறைக்கோட்டம்

5. அருள்திரு. ஏ.பி. தேவசகாயம் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் - பங்குத்தந்தை இளவாலை.
6. அருள்திரு. ஏ. யூட் நிக்சன் பங்குத்தந்தை சில்லாலை
7. அருள்திரு. எம். ஜேசுரெட்ணம் பங்குத்தந்தை பண்டைத்தரிப்பு
8. அருள்திரு. ஏ.பி. அன்ரனிப்பிள்ளை பங்குத்தந்தை மானிப்பாய்
9. அருள்திரு எஸ். செபநேசரெட்ணம் பங்குத்தந்தை உரும்பிராய்
10. அருள்திரு. ஜே. பிரான்சிஸ் பங்குத்தந்தை மாரீசன்கூடல்

- நன்றி - பாதுகாவலன்

புதிய பணித்தளங்களைப் பொறுப்பேற்கும் யாழ் மறைமாவட்ட அருட்பணியாளர்களுக்கு மன்னா தனது மகிழ்வான செபம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றது.



# அன்பின் கங்கை அன்னை தெரேசா

**விறு விறுப்புத் தொடர் 20**

எழுத்துருவாக்கம்
சொல்லின் செல்வர்
அமுது

## நீல நாடாவில் ஒரு பூ

குழந்தைகளை வளர்ப்பதற்காகத் தத்தெடுத்துக்கொண்டு போனவர்களில் இரண்டொருவர் சித்திபெறவில்லை.
டக்ளஸ் என்றவன் ஒரு ஆங்கில - இந்தியக் கலப்பில் பிறந்தவன். அவனுடைய முகம் விகாரமாக இருந்தமையால் அவனுடைய பெற்றோர் சிறுவனை அன்னை திரேசாவிடம் ஒப்படைத்துவிட்டு இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டனர்.
அவன் முகத்திற்குப் புதிய உருவம் கொடுப்பதற்கு சத்திர சிகிச்சைக்கான செலவினையும் அன்னையிடம் கொடுத்தனர்.
சத்திர சிகிச்சையின் பின்னர் அவனுடைய முகம் சீரடைந்தது.
ஒரு ஐரோப்பியக் குடும்பம் அவனை வளர்க்க விரும்பியதால் அவனைக் கொண்டுசென்றனர். வளர்ப்புப் பெற்றோர் பிரிய வேண்டி வந்தமையால் பையன் அன்னை திரேசாவின் இல்லத்திற்கே திருப்பியனுப்பப்பட்டான். அன்னை திரேசாவைப் பார்த்ததும் பழகிய அந்த முகத்தைக் கண்ட டக்ளஸ் "என்னை நீங்கள் விரும்புகிறீர்கள் இல்லையா, அன்னையே?" என்று கேட்டான். "எப்போதும் நான் உன்னை விரும்புகிறேன்" என்றாள். கண்ணீர்த் துளி விழுந்தது அவள் கன்னங்களில். பையன் அந்த அன்னையைக் கட்டி முத்தமிட்டான். சன்னி கண்டு இரண்டு ஆண்டுகளால் அவன் உலகைப் பிரிந்து சென்றான். ஆனால் தன்னை நேசிக்கவும், விரும்பவும் இந்த உலகில் ஓரிடம் இருக்கிறது என்ற செய்தியை விட்டுச் சென்றான்.
ஆறு வயதுள்ள சடோனா முகர்ஜி. தாய் இறக்கும் தருணத்தில் அவளருகில் படுத்திருந்ததைக் கண்டு, தூக்கிக்கொண்டு போனார்கள் குழந்தை இல்லத்துக்கு.
மெலிந்த தோல், பழுப்பு நிறமான மயிர், கட்டையாய் வெட்டப்பட்ட அந்தச் சிறு பெண்பிள்ளை, எச்சந்தர்ப்பத்திலாவது சிரித்ததை எவரும் கண்டதில்லை. குழந்தை இல்லத்திலிருந்து வைத்தியம் செய்வதற்காக, வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவளுடைய தம்பிக்காக ஓயாது அழுதாள். அவள் தன் உணவை மெதுவாகவே உட்கொண்டாள். சகோதரியின் சொல்லுக்குப் பயந்து, மற்றோருடன் விளையாடினாள். ஆனால் அவள் முகத்தில் கவலையும், பயமும் முத்திரை குத்தியிருந்தன. அவளுடைய தம்பி பாச்சு திரும்பி வந்தபோது, சிரிப்பின் மெல்லிய கோடு மின்னி மறைந்தது. குழந்தைகளை வந்து ஒழுங்காகத் தரிசிக்கும் ஒரு பார்வையாளர் அவள் தலையில் மினுமினுக்கும் நீலநிற நாடாவைக் கொண்டு ஒரு பூவை முடிச்சுப் போட்டதும், கண்ணாடியில் பார்த்தாள். அரிசிப் பல்லுத் தெரிய அவள் சிரித்தாள். அப்படி ஒரு அற்புதமான முதற் சிரிப்பைத் தாம் கண்டதில்லை என்றார்கள் சகோதரிகள்.
தாய் தந்தை இறந்து போனால், அல்லது பிரிந்து வாழ்ந்தால் அவர்களுடைய பெண் பிள்ளைகளுக்குக் குறிப்பாக 13 - 19 வயதிற்கு இடைப்பட்ட பெண்பிள்ளைகளுக்கு ஆபத்து காலடியில் காத்திருக்கும். பலர் விலைமாதர்களாகப் போய்விடுவார்கள்.



பலரித்தில் வேசித்தனத்தின் நாற்றங்கள் ஆழமாய் வேரூன்றி விடுகிறது. மறியல் வீட்டுக் கம்பிகளை எண்ணுவதில் பலரின் காலம் கரைந்தது. இவற்றையறிந்த அன்னையவர்கள் இளம் பெண்களைக் காப்பாற்ற முன்வந்தார். தாங்கள் பாதுகாப்புடன் வாழ்வதையும், விரும்பப்படுவதையும் அவர்கள் உணர்ந்து மகிழ்ச்சியடைந்தார்கள்.
குழந்தையில்லம் பசித்தவர்களுக்கு உணவளிக்கும் மையத்தானமாக விளங்கியது. அமெரிக்க அறக்கொடை நிறுவனங்களும், கத்தோலிக்க துன்பம் துடைக்கும் சேவையாளரும் ஒழுங்காக கல்கத்தா துறைமுகத்திற்கு உணவுப் பொருட்களைக் கப்பல் மூலம் அனுப்பி வைத்தனர். ஒவ்வொரு காலையிலும் பெரிய அண்டாக்களில் அந்த உணவுப் பொருட்களின் சமையல் நடைபெறும். குடும்பங்கள் பாத்திரங்களைக் கொடுத்து வரிசையில் நின்று உணவுப் பண்டங்களைப் பெற்றுச் செல்வர். புரதமும், உயிர்ச்சத்துக்களும், ஊட்டமும் கொண்ட உணவு, கோதுமையுடன் அல்லது சோற்றுடன் கொடுப்பது வழக்கம். "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" 'உண்டியளித்தோன் உயிரளித்தோனே' என்றும் ஆன்றோர் கூறினர். திரேசா அம்மையார் இவ்வாறு பசித் துன்பத்தைத் துடைத்து ஆறுதல் அளித்து வந்தார். பலருடைய வாழ்க்கைப் பயணத்தில் வறுமை பறந்து போயிற்று. சிலர் "அன்னை திரேசா தந்த பாத்திரம்" என்று தங்க நகைகளைப் போலக் காப்பாற்றி வருகின்றார்கள். சில காலத்துக்கு முன்பு நடுச்சாமத்தை அண்டிய நேரத்தில் எங்கள் கதவு வாசலில் ஒரு பிள்ளை வந்து நின்றது. அழுகையோடு தன் கதையைச் சொன்னது. "நான் அம்மாவிடம் போனேன். அங்கே வர வேண்டாம் என்று அம்மா கலைத்துவிட்டாள். என் தந்தையிடம் போனேன். அவரும் என்னை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். தயவுசெய்து நீங்களாவது, எனக்கு அன்பு காட்டுவீர்களா?" என்றபோது அந்தப் பிள்ளையின் கண்களில் கண்ணீர்க்குடம் வந்தது. இந்த வறுமையை பல இடங்களில் ஒவ்வொரு நாளும் காணலாம். (கங்கை தொடர்ந்து பாயும்)

# உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் பகுதி இல.28

இப்பகுதிக்கான வினாக்கள் யாவும் ஜூன் மாத மன்னாவில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளன. ஜூன் மாத இதழ் உங்களிடம் இருக்கிறதுதானே. ஒரு முறை புரட்டிப்பாருங்கள். விடைகளைக் கண்டுபிடிப்பது மிகமிக எளிது.

1. எமது புதிய பாப்பரசர் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களுடன் அப்போஸ்தலிக்க பணிபற்றிய முதற் சந்திப்பை நடாத்திய ஆயர்குழு எது?
2. நம்மில் அனேகர் பதுவைப் புனிதராம் அந்தோனியாரின் பக்தர்களாக இருக்கின்றோம். அந்தோனியார் என்பது அவர் குருத்துவத்துக்காகச் சூடிக்கொண்ட பெயர். இவரது இயற்பெயர் அதாவது தாய்தந்தை இட்ட பெயர் என்ன?
3. "தன்னை நம்புகிறவன் தன்னைத் தொலைக்கிறான். இறைவனை நம்புகின்றவன் அனைத்தையும் சாதிக்கின்றான்" இது யாருடைய கூற்று?
4. இவ்வருடம் தமது குருத்துவ வாழ்வில் 25 வருட ஆண்டுகளை நிறைவு செய்து இறைவனுக்கு நன்றி கூறிய இரு துறவறசபைக் குருக்கள் யார்? அவர்கள் எந்த எந்த துறவற சபையைச் சேர்ந்தவர்கள்?
5. "உங்கள் பகைவரிடம் அன்பு காட்டுங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்தால் நீங்கள் இறைவனின் மக்களாக இருப்பீர்கள்" இது கிறீஸ்துவின் வார்த்தை. இது மத்தேயு நற்செய்தியில் எங்கே குறிப்பிடப்பட்டுள்ளது?
6. நாம் கிறீஸ்துவின் சீடர்கள் என்பதை எல்லோரும் அறிந்து கொள்ள நாம் செய்ய வேண்டியது என்ன?
7. திருச்சிலுவைக் கன்னியர்கள் (HOLY CROSS SISTERS) நம் ஈழத்திருநாட்டில் கல்வி, மருத்துவம், சமூகச் சீர்திருத்தம் ஆகிய பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து 75 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளனர். 1930ம் ஆண்டில் அவர்கள் பணி ஆரம்பமாகியது எங்கே?
8. கடந்த மே மாதம் 6ந் திகதி முதல் 8ம் திகதிவரை 255 மறையாசிரியர்கள் பங்கு கொண்ட சிறப்புத்தியானம் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இத்தியானத்தை வழிநடாத்தியவர்கள் யார்?
9. "அண்மைக்கால நற்கருணை அதிசயங்கள்" என்னும் தொடரை எழுத்துருவாக்கி மன்னாவில் தருபவர் யார்?
10. உங்களுக்குத் தெரியுமா மறையறிவுப் போட்டி 23ல் பரிசுக்கு உரியவராகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?

### அறிவித்தல் .... அறிவித்தல் ......

உங்களுக்குத் தெரியுமா? என்ற இப்போட்டிக்குள் இன்னுமொரு போட்டியை நடாத்தி பெறுமதி மிக்க பரிசுப் பொதியை வழங்கத் தீர்மானித்துள்ளோம். விபரங்கள் அடுத்த **மன்னாவில்!**

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 26 இற்கான கேள்விகளுக்கு 16 பேர் விடையளித்திருந்தனர்.

இவர்களுள் பரிசுக்குரியவராக
தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி,

**அ. ஸிரோமி, பெரிய கோமரசங்குளம், வவுனியா**

இவர்களுள் பாராட்டுக்குரியவர்களாக
தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்.

1. க.பொலின், தரம்-13, வர்.பிரிவு,மன்/புனித சவே.பெ.கல்லூரி.
2. அ. யூலியற் றொசானி, 2ம் குறுக்குத் தெரு, கூமாங்குளம்.
3. சே. றொக்ஸி, பெரிய கோமரசங்குளம், வவுனியா.
4. ச. மேரி சியாமினி, நெடுங்கண்டல், அடம்பன்.
5. றோ. மேரி ஜாக்குலின், வஞ்சியங்குளம், வங்காலை.
6. செ. அரவிந்தன், சின்னக்கடை, மன்னார்.
7. க. எமிலின், மன்.எழுத்தூர் றோ.க.த.க.பாடசாலை, மன்னார்.
8. அ. துஸ்யந்தன், பெரிய கோமரசங்குளம், வவுனியா.
9. அ. மேரி லூட்ஸ் (லக்ஷி), நாவாந்துறை வடக்கு, யாழ்.
10. பற்றிமா நவரோஸ், டென்மார்க்.

# தமிழால் உலகாண்ட தமிழ்த்தூது தனிநாயகம் .... 5ம் பக்கத் தொடர்ச்சி

நம் தமிழ்ப் பண்பாட்டை கிழக்கிலும், மேற்கிலும் போய்ப் பரப்ப நம் தமிழ்ப் பேராசிரியர்களுக்கு போதியளவு ஆங்கில அறிவு தேவைப்படுகிறது. இது பல தமிழ்ப் பேராசிரியர்களுக்கு இல்லாததன் விளைவு தமிழின் பெருமையை உலகறிய முடியாத நிலை ஏற்படுவதோடு தாழ்வு மனப்பான்மை (Inferiority Complex) நிலவுகிறது. உலக மொழிகள் பலவற்றைக் கற்று அவற்றினூடாக தமிழை உலகறியச் செய்தவர் நம் தனிநாயக அடிகளாவார். எனவேதான் தமிழின் வளர்ச்சி பற்றி தமிழரின் மேம்பாடு பற்றி அவர் கூறும் கருத்துக்களுக்கு நாம் செவிமடுத்துச் செயலாற்றுதல் சிறப்புடையதாகும்.
தனிநாயக அடிகளார்க்கு தமிழிடத்தில் தலையாய பற்று நிலவியது. அதேவேளையில், தாம் தழுவி நின்ற கத்தோலிக்க மதத்திலும், கத்தோலிக்கக் குருத்துவ வாழ்விலும் மிக்க ஈடுபாடு இருந்தது. "All my Greatness blossomed from my Priesthood. The whole world was before me but I was put up by them" என்று கூறுகின்றார்.

### பரிபாடல் அமிழ்தம்

தனிநாயகம் அடிகளார் கத்தோலிக்க குருவாய் விளங்கினபோதும் குறுகிய மதச்சிந்தனை அவரிடம் குறுக்கிட்டதில்லை. அனைத்து மதங்களின் உண்மைகளையும் உணர்ந்த ஒப்பற்ற பெரியவராய் விளங்கினார். (He was a catholic: but he was catholic in outlook)
சங்க இலக்கியத்தின் ஒரு நூலாக விளங்கும் பரிபாடலில் வரும் பின்வரும் பாடலை அவர் அடிக்கடி சொல்லுவார், "யான் இரப்பவை பொன்னும், பொருளும் போகமும் அன்று. நின்பால் அன்பும், அருளும், அறனும் இம்மூன்றும்"
தனிநாயகம் அடிகளார் மறைவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்திலுள்ள வீரசிங்கம் மண்டபத்தில் தந்தை செல்வநாயகத்தின் நினைவுச் சொற்பொழிவுகளில் கலந்துகொண்டார். 1980 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 28ஆம் நாளிலும் 29ஆம் நாளிலும் பின்வரும் தலைப்புகளில் அடிகளார் உரை நிகழ்த்தினார்கள். "Research in Tamil Study Retrospect and Prospect" (தமிழ்த்துறை ஆராய்ச்சி - அதன் வரலாறும் வருங்காலமும்) என்ற சொற்பொழிவை ஆங்கிலத்திலும் இரண்டாம் நாள் சொற்பொழிவை *தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும்* என்று தமிழிலும் நிகழ்த்தினார்.

### நெஞ்சுருக்கும் சொல்

இச்சொற்பொழிவை செவிமடுத்த தமிழ் அறிஞர்களும், பொதுமக்களும், அடிகளார் நீண்ட காலம் நலம் பல பெற்று வாழவேண்டும் என இறைஞ்சி நின்றனர்.
இறுதிநாள் என் கைகளைப் பற்றிக்கொண்ட அவர் கண்கள் கலங்கிய நிலைகளில் "தம்பி நாம் எங்கே போய்கொண்டிருக்கின்றோம்? ஈழத்தமிழர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்து இருக்கின்றது" என்று நெஞ்சுருகக் கூறியவற்றை இன்று நினைக்கிறபோதுகூட என் கண்கள் கலங்குகின்றன. நான் அவரைச் சந்தித்த இறுதிப் பொது நிகழ்ச்சி அதுவேயாகும்.

### நிலைத்த தமிழ்ப் பணி

1913 ஆகஸ்ட் இரண்டாம் நாள் தோன்றிய தனிநாயகம் அடிகளார் 1980இல் செப்டெம்பர் முதல் நாளில் தனது 67வது அகவையில் இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கினார். நிலையாமை ஒன்றுதான் நிலையானது என்பதற்கமைய அவர் வாழ்வும் முற்றுப்பெற்றது. ஆனால் அவர் ஆற்றிய நிலையான தமிழ்ப் பணி நிலமிசை நிலைத்து வாழ்வதும் உறுதி.
அவர் மறைந்து 25 ஆண்டுகள் உருண்டோடிய நிலையிலும் அவர் நினைவு எம் நெஞ்சைவிட்டு அகல மறுக்கிறது. இருக்கும் போதே இறந்தவர்களாகக் கொள்ளப்படுவர் சிலர். ஆனால் இறந்தும் வாழும் செம்மல்களுள் ஒருவராக நம் தனிநாயக அடிகளார் விளங்குவதனால் அச்செம்மலை எம் சிந்தனையில் ஏற்றி பெருமிதம் கொள்கிறோம், பேருவகை அடைகிறோம்.

\- மா. க. ஈழவேந்தன் -

# வந்து பாருங்கள் .... 16ம் பக். தொடர்ச்சி

அந்த வகையில் எமது மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள பங்குகளில் 12 பங்குகளில் இருந்து 72 மாணவர்கள் இதில் பங்குகொண்டு இந்நிகழ்வின் ஊடாக பயன்பெற்றனர். மாணவர்களை சிந்திக்க வைக்கவும் அழைத்தலின்மேல் உள்ள வாஞ்சையை தூண்டி எழுப்பக் கூடியவகையிலும் இங்கு கண்காட்சிகள் பல்வேறு தலைப்புக்கள் கொண்டதாக நடத்தப்பட்டன. இவ்வைபவத்தை சிறப்பிக்கும் முகமாக எமது ஆயர், அருட்பணி ஸ்ரனி அடிகளார், அருட்பணி பிறான்சிஸ் குலாஸ் அடிகளார், அருட்பணி. செங்கோல் அடிகளார் அத்துடன் அருட்சகோதரி றெஜினா போன்றோர் ஊடாக நற்சிந்தனைகள், ஆன்மீக கருத்துக்கள் அழைத்தல் பற்றிய கருத்துக்கள் போன்றன மாணவர்கள் உள்ளங்களில் தூவப்பட்டன. மேலும் குருமட அதிபர் அவர்களினால் ஒழுக்கசார் விடயங்கள், குருமட வாழ்வு சம்மந்தமான விளக்கங்கள் குருமட அனுமதி பற்றிய தகுதிகள், விபரணங்கள் போன்றவை மாணவர்கள் மத்தியில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன.
இவ்வாறு இக்குருமடத்தில் இடம்பெற்ற வந்து பாருங்கள் நிகழ்விற்கு வருகை தந்த மாணவர்களுள் இறையழைத்தல்மேல் ஆர்வமுள்ள, விருப்பமுள்ள சரியான அறிகுறிகள் உற்ற ஒரு சில நல்ல மாணவர்களை பங்குத்தந்தையர்கள் தெரிவுசெய்து ஐப்பசி மாதம் 18ம் திகதி குருமடத்தில் நடைபெறவுள்ள நுழைவுப்பரீட்சைக்கு அனுப்பிவைப்பார்கள்.
பரீட்சைக்கு சமூகம் தரும் மாணவர்கள் 1ம் 2ம் தவணை மதிப்பீட்டு அறிக்கைகளின் (Report) போட்டோ பிரதிகளையும், பங்குத்தந்தையரின் சிபாரிசுக் கடிதங்களையும், விண்ணப்பப் படிவத்துடன் சேர்த்துக்கொண்டு வருதல் வேண்டும்.
நுழைவுப் பரீட்சையின் பின்னர் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் கார்த்திகை மாதம் 5ம் திகதி நடைபெறவிருக்கும் ஆயருடைய நேர்முகப் பரீட்சைக்கு பெற்றோருடன் சமூகமளிக்க வேண்டும்.

# புனித ஆனாள் ....7ம் பக்கத் தொடர்ச்சி

இப்போது புனித ஆனாளின் திருப்பண்டங்கள் பிரான்சின் ஆப்ட் நகரிலுள்ள கோயிலில் வைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் 1660 ஆம் ஆண்டு, 13ம் லூயி என்ற அரசனின் மனைவியான ஆஸ்திரிய நாட்டு ஆன் (ஆனாள்) என்பவரால் கட்டப்பட்டது. இளவரசி நீண்ட நாட்களாக குழந்தைப் பேறற்றிருந்தாள். பிரான்ஸ் நாட்டை ஆட்சி செய்ய தனக்கு வாரிசு இல்லையே என்று ஏங்கினாள். புனித ஆனாளிடம் தன் வேண்டுதலை, கண்ணீரோடு ஒப்படைத்தாள். அரசியின் வேண்டுதலை புனித ஆனாள் கனிவோடு நிறைவேற்றினாள். அவளுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அவனே, பின்பு பிரான்ஸ் நாட்டு அரசனான 14ம் லூயி என்பவனாகும். இக்குழந்தை பிறந்ததன் நினைவாகவும், நன்றியாகவும் இவ் ஆலயம் அமைக்கப்பட்டது.
அன்னை புனித ஆனாள், குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டும் வரத்தை இயேசுவின் மூலம் அருளுகின்றவளாகவும், கடற் பயணிகளுக்கும், கடற்றொழிலாளர்களுக்கும் சிறந்த பாதுகாவலியுமானாள். இந்த அன்னைக்கு ஆடித்திங்கள் 26ம் நாள் வங்காலைப் பங்கு மக்கள் விழா எடுக்கின்றனர். இவ்வாண்டு, புனித ஆனாள் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவினையும் வங்காலைப் பங்கு மக்கள் சிறப்பாக கொண்டாடுகின்றனர்.

# குடும்பக் குவலயம்

## கொஞ்சம் உங்களோடு.... 4

- சினேகமுடன் விமல் (அ.ம.தி) -



### என் இனிய மானுடமே...

*இக் "கொஞ்சம் உங்களோடு" என்ற இப்பகுதியில் கருக்கலைப்பு பற்றி தொடர்ந்தும் உங்களோடு உரையாடலாம் என எண்ணுகின்றேன். உண்மையில் கருக்கலைப்பு பற்றி அதிகம் அழுத்துவதால் கருக்கலைப்புக்கு துணை போனவர்கள் மனம் மாறி அப்பாவச் செயலை விட்டு விடச் செய்வதும் தொடர்ந்து கருக்கலைப்பு செய்ய முனைபவர்களுக்கு எச்சரிக்கையைக் கொடுப்பதும் இக்கருக்கலைப்பை முன்னின்று நடத்துகின்றவர்களுக்கு அழுத்தத்தைக் கொடுப்பதுமே எமது நோக்கம்.*

- சினேகமுடன் விமல் (அ.ம.தி) -

### கருப்பையினுள்ளே குழந்தை எப்படி கொல்லப்படுகிறது?

மிகக் கொடூரமான முறையில் கருப்பையுனுள் குழந்தை மனித முயற்சியாலும், உபகரணங்களின் உதவியினாலும், தற்போது நவீன மின் பாவனையாலும் கொல்லப்படுகிறது. The Silent Cry (சத்தமில்லா அழுகை / கூக்குரல்) என்ற கருக்கலைப்பு பற்றிய ஒளி நாடாவைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. அதிலே குழந்தை தன்னைக் கொல்ல வரும் ஆபத்துக்களிலிருந்து தப்ப கருப்பையினுள்ளே, அங்குமிங்கும் ஓடி அந்தரப்படுவதைப் பார்க்க என் நெஞ்சு விம்மியது.

### கருக்கலைப்பு செய்யப்படும் கொடூரமான முறைகள் சில :-

குழந்தை சிறுசிறு துண்டுகளாக வெட்டப்பட்டு, பிரத்தியேகக் கருவியினால் உறிஞ்சி எடுக்கப்படுகிறது.

**வெட்டியகற்றல்** :- கூரான ஆயுதங்களால் குழந்தை சிறுசிறு துண்டுகளாக வெட்டி அகற்றப்படுகிறது.

**சத்திர சிகிச்சை** :- தாயின் வயிறு பிளக்கப்பட்டு, குழந்தை வெளியே எடுக்கப்படுகின்றது. அல்லது கொல்லப்படுகிறது.

பிறசாரண செறிவு கூடிய கரைசல்களை கருப்பையுனுள் செலுத்துவதால் குழந்தை சாகடிக்கப்படுகிறது.

சில மாத்திரைகள் (குளிசைகள்) தாயால் உட்கொள்ளப்படுவதால், குழந்தை கொல்லப்படுகிறது அல்லது வெளியகற்றப்படுகிறது.

கிராமங்களில் சில பரியாரிகளினால் அல்லது வயோதிபப் பெண்களினால் மருத்துவ மூலிகைகள் கொடுக்கப்பட்டு குழந்தை கொல்லப்படுகிறது. இப்படி பலவழிகளில் குழந்தை கொல்லப்படுகிறது அல்லது அழிக்கப்படுகின்றது.

### கருக்கலைப்பைத் தவிர்க்க என்ன செய்யலாம்?

உங்கள் குடும்பத்துக்கு எத்தனை குழந்தைகள் தேவையென்பதை கணவன் - மனைவியாகிய நீங்களே தீர்மானியுங்கள். அதன்படி இயற்கைக் குடும்பக்கட்டுப்பாட்டு முறையை கடைப்பிடியுங்கள்.

இது பற்றிய தெளிவை இதுபற்றி தெரிந்தவர்களிடம் விளக்கமாக அறிந்துகொள்ளுங்கள். தன்னடக்கம் அல்லது சுயகட்டுப்பாடு குருக்கள் துறவிகளுக்கு மட்டுமல்ல. கணவன் மனைவிக்கும் மிகவும் அவசியமானது.

குழந்தை பெண் குழந்தையாகவோ, ஊனமுற்ற குழந்தையாகவோ கருவிலே இருப்பது கண்டறியப்பட்டால் அதுபற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், அக்குழந்தை உங்கள் குழந்தை. அக்குழந்தையை உருவாக்கியவர்களும், அக் குழந்தைகளுக்கு பொறுப்பாளிகளும் நீங்களே. உங்கள் குழந்தையை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது, நாளை நீங்கள் முதியவர்களாகி உங்களுக்கும் இயலாமைகள் தோன்றுகின்ற போது, உங்களையும் உங்கள் பிள்ளைகள் ஏற்றுக்கொள்வார்கள்.

திருமணம் முடிக்காத அல்லது, வேற்று ஆடவரால் கருவுற்ற பெண்கள், அல்லது பாலியல் வல்லுறவுக்கு உட்பட்ட பெண்கள் குழந்தையைக் கொல்ல வேண்டுமென்ற கட்டாயமில்லை. மாறாக இவ்வகைக் குழந்தையைப் பெற்றெடுக்க அருட்சகோதரிகள் துணையோடு சில காப்பகங்கள் இயங்குகின்றன. அங்கு இரகசியமும் பேணப்படுகிறது. குழந்தையில்லா எத்தனையோ தம்பதிகள் பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்க்க இக்காப்பகங்களில் விண்ணப்பித்த வண்ணமே இருக்கிறார்கள். ஆயினும் இக்காப்பகங்கள் சீரழிந்த வாழ்வு முறையை தவிர்க்கும் நல்நோக்கத்துக்காகவே தொடங்கப்பட்டு இருக்கின்றன என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இன்னும் தவறு நடக்காமல் இருக்க இளைஞர், யுவதிகள், ஆண், பெண் அனைவரும் கிறிஸ்தவ விழுமியங்களின்படி சுயகட்டுப்பாட்டுடனும், கற்பு நெறி தவறாமலும் நடத்தல் அவசியமானது.

உடலுறவு புனிதமானது. கணவன் - மனைவிக்கிடையே உள்ள உறவின் உச்சக்கட்டம் உடலுறவில் நிறைவேறுகிறது. அவர்களது மகிழ்ச்சி இன்னொரு உயிருக்கு உயிர்ப்பாக அமைகிறது. இதனை திருமணத்தின்பின் பாலியல் பலாத்காரமாக (Marital Rape) கணவன் திணிக்க முற்படுவதும், அல்லது மனைவி வேற்று ஆடவரோடு தன்னை திருப்திப்படுத்த முனைவதும் தவறான அணுகுமுறைகளாகும். பரஸ்பர உறவும், உரையாடலும், நட்பும், உறவும் கணவன் மனைவிக்கிடையே இருத்தல் அவசியமாகும்.

முடிவாக, அண்மையில் சுவீடன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெறுவதற்காக 'பெண் உரிமைகள்' பற்றிய ஆய்வுக்கட்டுரையைத் தயாரித்துக்கொண்டிருந்த எனது நண்பரான ஒரு விரிவுரையாளரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் கூறிய கருத்து என்னை மிகவும் கவர்ந்தது. "பெண்களின் பலமும் கருப்பை தான், பலவீன்மும் கருப்பைதான்" என்றார். பெண்களின் பலம் கருப்பை. ஏனென்றால், அது ஓர் உன்னதமான உயிரை உற்பத்தி செய்கிறது. கருப்பை பலவீனம். ஏனென்றால் பெண்கள் பலவீனப்படுவதும் அதனால்தான். இன்னுமொரு பிரபல பெண் எழுத்தாளர் சொல்கிறார் "பெண்கள் பலவீனமானவர்கள் என்று யார் சொன்னது? ஓர் பிள்ளையை பத்து மாதம் சுமந்து பெற்றெடுக்கக்கூடிய வலிமையும் திடமும் பெண்களிடம்தானே உள்ளது"

ஆகவே பெண்களின் பலம் கருப்பை. எனவே கருக்கலைப்புப் பற்றிய தெளிவுக்கு வருவோம். எப்படித்தான் கருக்கலைப்புப் பற்றி பேசப்பட்டாலும் கருக்கலைப்பு இரகசிய சூழலில், நான்கு சுவர்களுக்கு நடுவே அரங்கேறிய வண்ணமேயுள்ளது. கருக்கலைப்பில் ஈடுபட்டோர், துணைநின்றோர் நாளும் குற்ற உணர்வுகளோடு வாழ்கிறார்கள் என்பது கண்கூடு. ஏனென்றால் கடவுளின் பார்வையும், கடவுளின் குரலாக ஒலிக்கின்ற மனச்சாட்சியும் எம் உள்ளத்தை உறுத்திய வண்ணமே இருக்கும். ஆகவே இதிலே ஈடுபட்டவர்கள் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து தெளிவுக்கு வந்து, கருக்கலைப்புப் பற்றி பாதக விளைவுகளை மற்றவருக்கும் சொல்லி சிசுக் கொலைகள் அற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவோம். (தொடர்ந்து பேசுவேன்)

# மருத்துவப் பொழிவு

## பல் ஈறு பாதுகாப்பு..!

பல் ஈறுகளைப் பாதுகாக்க கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகள் வருமாறு:



1. பற்களில் கறை படியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதை தவிர்ப்பதற்குச் சரியான பல் துலக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும்.
2. பற்படலம் மற்றும் பற் கரைகளில் பதுங்கியிருக்கும் நுண் உயிரிகளின் தாக்குதலால் ஈறு அழற்சி ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு பற்கரை மற்றும் பற்படலத்தை நீக்க வேண்டும்.
3. சுமார் 6 அங்குல நீளக் கைப்பிடியுடன், ஒன்றரை அங்குல நீளம் நைலோம் நாரிழைகள் உள்ள பிரஷைப் பயன்படுத்தி பற்களை துலக்க வேண்டும். மசாஜ் செய்வது மாதிரி மேலும் கீழுமாக சுழற்சி முறையில் பற்களைத் துலக்குவதே சிறந்த முறை.
4. உணவுக்கு முன்னும் பின்னும் அல்லது நாளொன்றுக்குக் குறைந்தது இருவேளையெனும் பல் துலக்குவது அவசியம்.
5. பற்களுக்கிடையில் உணவுத் துணுக்குகள், கிருமிகள் சேராமல் பார்த்துக் கொள்வதோடு, புகைப்பழக்கம், வெற்றிலை, பாக்கு, புகையிலை மெல்லுதல் ஆகிய பழக்கங்களை அடியோடு விட்டொழிக்க வேண்டும்.
6. நகம் கடித்தல், பென்சில் கடித்தல், பற்களை நாக்கினால் தள்ளுதல், வாய் மூலம் சுவாசித்தல், விரல் சூப்புதல், கண்ட மருந்துகளை ஈறுகளில் தடவுதல், குண்டுசிகளால் பற்களைக் குத்துதல் போன்றவற்றையும் தவிர்க்க வேண்டும்.

மருத்துவரின் ஆலோசனைப்படி பற்களையும், ஈறுகளையும் பாதுகாக்க உணவுப் பழக்கங்கள் மற்றும் தூய்மைப் பழக்கங்களைக் கைக்கொள்வதோடு குறைந்தது 3 மாதங்களுக்கு ஒருமுறையாவது பல் மருத்துவரை அணுகி பரிசோதனைச் செய்து கொண்டால் ஈறு நோய்கள் இருக்கும் இடம் தெரியாமல் போகும்.

பற்களில் ஏற்படும் நோய்களுக்கும் இருதய நோய்களுக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. பற்களைத் தாக்கும் Perodonatal பக்ரீறியாக்களுக்கும், இருதய இரத்த நாளங்களில் உண்டாகும் நோய்களுக்கும் இடையிலான தொடர்பைக் கண்டுபிடிக்க ஒரு ஆய்வு நடந்துள்ளது.

ஆகையால் பற்களை முத்துப்போல் பராமரிப்பதன் மூலம் இருதய நோய்களில் இருந்தும் தப்பிக்க முடியும் என்பது உறுதி.

## புற்றுநோயைக் குணப்படுத்தும் மஞ்சள்

இந்திய உணவு வகைகளில் தனியொரு இடத்தை பிடித்து வைத்திருக்கும் மஞ்சளுக்கு மார்பகப் புற்றுநோயைக் குணப்படுத்தும் ஆற்றல் இருப்பதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். மஞ்சளில் காணப்படும் குரகுரியம் என்ற பொருள் மார்பகப் புற்றுநோய் செல்கள் மேற்கொண்டு நுரையீரலுக்குப் பரவி விடாதபடி தடுப்பது எலிகளைப் பயன்படுத்தி நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. தற்போது மனிதர்களில் இந்த சோதனை நடந்து வருகிறது. மஞ்சளை எந்த ரூபத்திலாவது உணவில் சேர்த்துக்கொள்பவர்களுக்கு மார்பகப் புற்றுநோய், புரோஸ்டேட் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் மற்றும் பெருங்குடல் புற்றுநோய் ஆகியவை வருவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாக இருந்தது ஏற்கனவே நடந்த ஆய்வுகளில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மஞ்சள் சாப்பிட்டால் மார்பகப் புற்றுநோயில் இருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்பதை தற்போதைய நிலையில் அறுதியிட்டுச் சொல்ல முடியாது..

## புற்றுநோய் தடுக்கும் வேர்க்கடலை

வேர்க்கடலையில் உயர் அளவில் புரதச்சத்து இருப்பதோடு ஆண்ட்டி ஆக்சிடாண்ட் எனப்படும் இரசாயனப் பொருள்களும் நிறைந்துள்ளன. இந்த இரசாயனங்கள் புற்றுநோய் மற்றும் இருதய நோய்கள் வராமல் தடுக்கும் ஆற்றல் உடையவை. உடல் செல்களை இந்த நோய்கள் பாதிக்காதவாறு இவை பாதுகாக்கின்றன. ஸ்ட்ராபெர்ரி போன்றவற்றில் நிறைந்துள்ளதைப் போல வேர்க்கடலையிலும் இவை அதிகமாக உள்ளன. சிவப்பு மற்றும் மஞ்சள் பழங்கள், காய்கறிகளில் இந்த குறிப்பிட்ட இரசாயனப் பொருட்கள் அதிகம் உள்ளன. அதுபோல வேர்க்கடலையை வறுப்பதால் இரசாயனத் தன்மை மேலும் அதிகரிக்கிறது. இவ்வாறு புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது. ஆகவே வேர்க்கடலையை உணவில் சேர்த்து புற்றுநோயைத் தடுக்க முயற்சிப்போம்.

## போஷாக்கான சமையல்

அரிசியை பலமுறை கழுவுவது தவிர்க்கப்படல் வேண்டும். அப்படி கழுவுவதால் அரிசியிலுள்ள விட்டமின் 'பி' சத்து கரைந்து விடுகின்றது.

அதிக நேரம் கீரை வகைகளை வேகவிடுவதால் அதிலுள்ள விட்டமின்கள் அழிந்து விடுகின்றன. எனவே குறைந்த வெப்பத்தில் சிறிது நேரம் வேகவிடுங்கள்.

பயறு, கடலை, கௌப்பி போன்றவைகளை அவிப்பதற்கு முன் சுமார் 16 மணித்தியாலங்கள் நீரில் ஊறவிட்டு, 8 மணித்தியாலத்திற்கு ஒரு முறை நீரை மாற்ற வேண்டும். இதனால் அதிலடங்கியுள்ள விஷப்பொருட்கள் அகற்றப்பட்டு விடுகின்றன. மரவள்ளிக் கிழங்கை அவிக்கும்போது மூடியை அகற்றியே அவிக்க வேண்டும். இதனால் அதிலுள்ள நச்சு ஆவி வெளியேறி விடுகின்றது.

மரக்கறி வகைகளையும், பழங்களையும் குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதால் அதன் சுவை சற்று வேறுபடினும் போஷாக்கில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## சமைப்போம்! சுவைப்போம்!

தொகுத்துத் தருவது

- எம் . தீபா வளனகம், மன்னார் -

### மஸ்கட்



#### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| கோதுமை மா | - 1/4 கி.கிறாம் |
| சீனி | - 3/4 கி. கிறாம் |
| ஏலப்பொடி | - 1 தே.க.(மட்டமாக) |
| சிறிதாக வெட்டிய கஜு | - சிறிதளவு |
| நெய்/தேங்காயெண்ணெய் | - 1/4 போத். |
| தண்ணீர் | - 1/2 தம்ளர் |
| உப்பு | - அளவிற்கு |
| கேசரிப் பவுடர் | - 2 சிட்டிகை |

#### செய்முறை

கோதுமை மாவை அரித்துப் பாத்திரத்திலிட்டு அளவிற்கு உப்பும் தண்ணீரும் சேர்க்க வேண்டும். கையிலொட்டாத பதத்திற்கு அடித்துக் குழைத்துப் பந்து போன்ற உருண்டையாக்க வேண்டும். பின்பு ஓர் மெல்லிய துணியில் வைத்துத் தளர்வான பொட்டலமாகக் கட்டிக்கொள்ள வேண்டும். பிறிதொரு பாத்திரத்தில் 10 தம்ளர் தண்ணீரை ஊற்றி இப்பொட்டலத்திலுள்ள மாவு பால்போல் கரைத்து நீருடன் சேரும் வரை நன்றாகப் பிசைந்து கொள்ள வேண்டும். மிகுதியாக வரும் இறப்பர் போன்ற பகுதியை வீசிவிட்டுப் பாத்திரத்தில் உள்ள கலவையை 12 மணி நேரத்திற்குப் புளிக்க வைத்துக்கொள்ள வேண்டும்.

பின்பு புளிக்க வைத்த மாக்கலவையை எடுத்து மேலே தெளிந்திருக்கும் தண்ணீரை மெதுவாக வடித்து ஊற்றிவிட்டு, மாக்கரைசலை மட்டும் எடுத்துக் கேசரிப் பவுடர் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பின்பு தாச்சியில் சீனியைப் போட்டு 1/2 தம்ளர் தண்ணீர் விட்டுக் காய்ச்சவும். சீனி முழுவதும் கரைந்து பாகு பொங்கிக் கொதிக்கத் தொடங்கும்போது மாக் கரைசலை விட்டு இடைவிடாது கரண்டியால் துளாவிக் காய்ச்சுக. கலவை பிசின் போன்ற பதத்தையடையும்போது நெய்யைச் சிறிது சிறிதாக விட்டு முழுவதுமாகச் சேர்த்து இடைவிடாது கிளறுக.

மாக் கலவை தாச்சியில் ஒட்டாது திரளும் பதத்தையடைந்ததும் (கையிலொட்டாத பதம்) கஜு, எலப்பொடி சேர்த்து நன்கு கிளறி எண்ணெய் பூசிய தட்டில் கொட்டி 1 1/2" தடிப்பாகப் பரவி 2"X2" அளவுடைய துண்டுகளாக வெட்டி ஆறிய பின்பு பரிமாறலாம்.





# பெரியப்பா பதில்கள்




கே: வாழ்க்கையில் நித்தமும் சோதனைகள் என்றால் அதைப்பற்றிய உங்கள் கருத்து என்ன?

*- க. சுமதி, இலுப்பைக்கடவை, மன்னார்.*

ப: சோதனைகளே சாதனைகளுக்கான படிக்கட்டுக்கள்!

கே: அன்பின் பெரியப்பா, குடிகாரர்களைத் திருத்தவே முடியாதா?

*- எம். கொண்சி, கார்மேல் இல்லம், அடம்பன்.*

ப: திருத்த முடியும். இப்படிப்பட்டவர்களை பேசாலை பங்குத்தந்தை வின்சன்ற் பற்றிக் அடிகளாருடன் தொடர்புபடுத்தி விடுங்கள். குடிப்பவர்களுக்கான சிந்தனை ஒன்று இதோ "நீ சிந்தித்தால் நீ குடிக்க மாட்டாய் நீ குடித்தால் நீ சிந்திக்க மாட்டாய்"

கே: பெரியப்பா, ஆதிகால மக்கள் காட்டில் வசித்தார்கள். தற்கால மக்கள் வீட்டில் வசிக்கிறார்கள். அவ்வாறு வசிக்கக் காரணம் உடைமையை பாதுகாக்கவா? அல்லது தங்களைப் பாதுகாக்கவா?

*- ப. ரெமோனா பறுனாந்து, 8ம் வட்டாரம், பேசாலை.*

ப: காட்டில் இருந்த மனிதன் வீட்டிற்கு வந்தது நாகரீக பரிணாம வளர்ச்சியின் ஒரு கட்டம்...... இன்று வீடு காடாகத்தானே மாறிக்கொண்டிருக்கிறது. அதாவது வீட்டு மனிதன் காட்டு விலங்கைப் போல மாறி மாறி கடித்துக்கொள்வதைப் பார்க்கும்போது நாகரீக வளர்ச்சி பின்னோக்கிய வீழ்ச்சியாகவே செல்கிறது.

கே: பெரியப்பா, மண்ணுலகில் இருந்து பலர் விண்ணுலகு செல்கிறார்கள். ஆனால் அங்கிருந்து ஒருவரும் இங்கு வரக்காணோமே?

*- பி. பெனில்டஸ் தற்குரூஸ், தோட்டவெளி, மன்னார்.*

ப: வரமாட்டார்கள். எப்படி வருவார்கள்? இந்த உலகில் இருந்து ஒருவாறு தப்பிப் பிழைத்து "ஆளைவிட்டால் போதும்" என்று அந்த உலகம் போய்ச் சேர்ந்தவர்கள் இந்த உலகத்திற்கு மீண்டும் வர எப்படி விரும்புவார்கள்?

கே: பெரியப்பா, நித்திரை வருதில்லை நித்திரைக் குளிசை போடலாமா?

*- தே. சின்னமலர், பண்டிவிரிச்சான்.*

ப: தொட்டாலே தூக்கம் வருகிற சில பத்திரிகைகள் சஞ்சிகைகள் இலங்கையில் இருக்கின்றன. அவற்றை எடுத்து வாசியுங்கள். உடனே நித்திரை வரும். நித்திரைக் குளிசை எல்லாம் இவற்றிற்குப் பிறகுதான்.

கே: கொள்ளைக்கும் திருட்டுக்கும் என்ன வித்தியாசம்?

*அருள்வரதன், ஆட்காட்டிவெளி.*

ப: மிரட்டி, உருட்டி, வாயைக்கட்டி, கையைக்கட்டி, கத்தியை துப்பாக்கியைக் காட்டி "மரியாதையாகக் குடு" என்று கேட்டால் அது கொள்ளை. காலையில் சோம்பல் முறித்து எழுந்து வெளியே வரும்போது வாசற் கதவு, பின்கதவு, யன்னல் உடைக்கப்பட்டு வீட்டுப் பொருள்கள் களவாடப்பட்டிருந்தால் அது திருட்டு.



கே: எல்லோரிடமும் நல்ல பெயர் எடுக்க என்ன வழி?

*- மணிரெத்தினம், வவுனியா.*

ப: என்னைப் பொறுத்தவரை அப்படி ஒரு வழியும் இல்லை.

கே: பெரியப்பா ஒரு விதத்தில் நீங்கள் எங்களுக்கு ஆசிரியர் தானே?

*- பி. மணிவண்ணன், முருங்கன்.*

ப: கற்றுக் கொடுப்பவர் எல்லோரும் ஆசிரியர்கள் அல்ல. யாரிடம் கற்றுக் கொள்கின்றோமோ அவரே ஆசிரியர். இலக்கணம் சொல்லி விட்டேன். இனி நீங்களே முடிவு செய்யுங்கள்.

கே: எனக்கு எதை நினைத்தோ ஒரே பயமாக இருக்கிறதே என்ன செய்வது? *- சாந்திக்குமார், செட்டிகுளம்.*

ப: நீங்கள் மட்டுமல்ல உலகத்திலுள்ள எல்லோருக்குமே ஏராளமான பயங்கள் உண்டு. "fபேன் சுற்றுகிறதே தலையில் விழுந்து விடுமோ.....", "எதிரே வரும் லொரி பிரேக் பிடிக்காமல் தறிகெட்டு ஓடி மேலே மோதி நம்மைச் சட்னியாக்கிவிடுமோ.....", "தலைச்சுற்று இருக்கிறதே லோ பிறசராக இருக்குமோ......", "மத்தியானம் தண்ணீர் குடித்தோமே அதில் கிருமி ஏதாவது.....?" இப்படி ஒவ்வொருவருக்குள்ளும் பய உலகம் இருக்கிறதாம். வெல்ல ஒரு வழி - பயப்படாதீர்கள்!

கே: பெரியப்பா, இன்றைய நவீன உலகில் ஆண்களைவிட பெண்கள்தானே அதிக புத்திசாலிகள்.. என்ன சொல்கிறீர்கள்? *- ஞானேந்திரன், வவுனியா*

ப: நீங்களும் நல்லா இருக்கணும், நானும் நல்லா இருக்கணும் என்றால் - இதுதான் சரியான விடை!

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 22 - 01 - 1991



உதிர்வு 06 - 09 - 2002

### அ. பிரேமதி (நித்திலா)
### கற்கிடந்தகுளம் - முருங்கன்

பாசத்தால் அனைவரையும் வென்ற எம்மவளே! உன் பாசமுகம் காணாமல் நாங்கள் வாடுகின்றோம். வாடா மலராய் நீ வாழ்வாய் என நினைத்து கூடி மகிழ்ந்தோம் நாங்கள். இங்கே பதினொரு வயதினிலே பச்சைக் குழந்தைபோல் எம்மைச் சுற்றி வந்தாயே! நித்திலா என்றழைத்ததும் நீ பாசத்துடன் பக்கமே நிற்பாயே. மூன்றாண்டல்ல மூவாயிரம் ஆண்டு மறைந்தாலும் எம்மால் உன்னை மறந்துவிட முடியாத ஓவியம் நீ செல்வமே. நீ எம்முடன் உறவாடிய நாட்கள் எம் மனதில் பசுமையான நினைவுகளாய் தோன்றி மறையுதம்மா. உன்னைப் பிரிந்தே உருகித் தவிக்கின்றோம். என்றும் நீங்காத நினைவுடன் உன் ஆன்ம சாந்திக்காக இறைஞ்சி நிற்கும்,

*அப்பா, அம்மா, அண்ணாமார்,*
*அக்காமார், அண்ணி மற்றும்*
*உற்றார் உறவினர்கள்.*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 15 - 02 - 1951



உதிர்வு 23 - 09 - 2004

### திருமதி. மேரி ஜொபிற்றா
### முத்துக்குமாரசாமி (மன்னார்)

பிரிவும் பிறப்பும் பிதாவின் சித்தமென படைத்தவன் அழைத்திட உடல் நீத்து சென்றவளே!
உடல் கொண்ட வேளையில் நீ உருத்தந்த உணர்வுகள் இன்னும் உலா வரும் போதிலே உன் நினைவுகள் உறங்காதம்மா!
உடல் நீத்து சென்றவளே, நீ நிறைவேற்ற செல்கிறாய் உன் பயணத்தின் தொடச்சியை. உடலற்று போனாலென்ன உன் உணர்வோடு வாழ்ந்திடுவோம். என்றும் உங்கள் நினைவுடன் வாழும்,

*கணவன், பிள்ளைகள், மருமக்கள்,*
*சகோதரர்கள், மைத்துனர்மார், மைத்துனிமார்,*
*பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.*
73, யூதா ஒழுங்கை,
புனித செபஸ்தியார் வீதி, மன்னார்.

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 05 - 1985



உதிர்வு 18 - 09 - 2002

### தே. கிளியோப்பெற்றா லெம்பேட்
### (கொவ்வங்குளம், நானாட்டான்)

முத்தான முத்தே எம் குடும்பத்தின் சொத்தே, பாரினிலே பரிவுடனே நல் பாசத்துடனே வளர்த்து உறவாடிய எம்மை பரதவிக்கச் செய்தது ஏன்? பாரினிலே நீ இறந்து மூவாண்டு சென்றாலும் பாசமுள்ள உன் உருவம் ஒரு போதும் மறைந்ததில்லை.
அன்பே ஆருயிரே, கவலை துடைப்பவரே யேசுநாதா கன்னல் மொழிப் புதல்வி கிளியோபெற்றா லெம்பேட் ஆன்மாதனை உம்முடைய விண்ணகத்தில் உவந்து ஏற்றருளும்.

*இவரின் பிரிவால் வாடும்*
*தாய், தந்தை, சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள்*

இவரின் ஆன்மசாந்திக்காக கொவ்வங்குளம் புனித தோமையார் ஆலயத்தில் 19.09.2005 திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

## பெரியப்பாவுக்கு எங்கள் பதில்

வாசகர்களே, நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பெரியப்பா பதில் தருகிறார். அதே போன்று பெரியப்பா கேட்கும் கேள்விகளுக்கு நீங்களும் பதில் அளியுங்கள்....? மூன்று தரமான குறும்பான, யதார்த்தமான பதில்கள் பிரசுரிக்கப்படும்.
என்று அறிவித்தல் கொடுத்து சில கேள்விகளையும் பெரியப்பா வெளியிட்டிருந்தார். ஆனால் வாசகர்களிடமிருந்து எதிர்பார்த்த தரமான, குறும்பான, யதார்த்தமான பதில்கள் வராதமையினால் இப்பகுதியை தொடர்ந்து நடத்தமுடியாதுள்ளது என்பதை வருத்தத்தோடு தெரிவித்து நிற்கின்றோம்.

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து
உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச் சந்தா**

உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 06 - 1947



உதிர்வு 26 - 09 - 2003

### திருமதி.யோசப்பின் பிலோமினா
### விஜயரெட்ணம் (பிரான்ஸ்)

ஆருயிரே எங்கள் அன்புத் தெய்வமே
பாசத்தின் உறைவிடமே பண்பின்
சிகரமே ஆறாது எங்கள் மனம்
மாறாது உங்கள் நினைவுகள்.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நாம் உம்மை மறவோம் அம்மா.

இவரின் ஆன்ம சாந்திக்காக பரிஸ் ஒப்புரவு அன்னை சிற்றாலயத்திலும், மன்னார் மரியன்னை ஆலயத்தில் 24.09.2005 சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்தருணத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும்,*
*அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.*

## 31ம் நாள் நினைவு

மலர்வு 19 - 09 - 1989



உதிர்வு 07 - 08 - 2005

### செல்வி. மேரி சிந்தியா
### (கொழும்பு - மட்டக்குளி)

கொழும்பு மட்டக்குளி சேர்ச் லேன் இல. 15B யை வசிப்பிடமாகக் கொண்ட செல்வி மேரி சிந்தியா அவர்கள் 07.08.2005 அன்று அகால மரணமானார். அன்னாரின் பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து மாலை 3.00 மணிக்கு சாந்த மரியாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின்பின் மாதம்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இங்ஙனம் தாய், சகோதரன், சகோதரி.*

## 5ம் ஆண்டு நினைவு

மலர்வு 09 - 04 - 1925



உதிர்வு 22 - 08 - 2000

### திருமதி. ம.இன்னாசியாப்பிள்ளை
### (கங்காணிதீவு - நானாட்டான்)

அம்மா, காலங்கள் மாறலாம், காற்றசைய மறக்கலாம், கடல் அலை வற்றலாம், எம் அன்பு ஒரு நாளும் மாறாதம்மா. உங்கள் ஆன்மா சாந்தியடைய தினமும் இறைவனிடம் பிராத்திக்கின்றோம். உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சங்களை விட்டகலாது.

இவரின் ஆன்ம சாந்திக்காக ஆவணி மாதம் 22ம் திகதி காலை 6.15 மணிக்கு புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

*உங்கள் அன்பின்,*
*பிள்ளைகள்,மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

## மன்னா அபிமானிகளே!

இறந்துபோன உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகள், யூபிலி மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றை மன்னாவில் பிரசுரிக்க வேண்டுமாயின் அந்நினைவுகள் எந்த மாதத்தில் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள். இத்திகதிக்கு பின்னர் வரும் எந்த விடயங்களும் அக்குறிப்பிட்ட மாதத்தில் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதை தெளிவாக அறியத்தருகின்றோம். நீங்காத நினைவுப் பகுதியில் இடம்பெறும் மரண அறிவித்தலுக்கான கட்டணமாக ரூபா 1000 அறவிடப்படும். பதிப்பாசிரியர்.

## அனைத்துத் தொடர்புகளுக்கும்


The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's St.
Mannar,
Sri Lanka.

பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார்
பேராலய வீதி,
மன்னார்

தொ. பேசி இல. 023 - 2232377

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல. 41
## இணைச்சட்டம் - 1 - 12

உங்கள் விடைகளை 10. 10. 2005க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 02 | * | | | | 03 |
| | | 04 | * | | | | | | 05 | |
| 06 | | | * | | | * | 07 | 08 | | |
| | | | | | 09 | | | | * | |
| * | 10 | | | 11 | | 12 | | | | 13 |
| | 14 | | | | | | | 15 | | |
| | | 16 | | | | | | | | |
| | | | * | 17 | | | 18 | | | |
| | 19 | | | | | | | | 20 | 21 |
| | | | * | | | | | 22 | | |
| 23 | | 24 | | | * | | | | | 25 |

### இடமிருந்து வலம்

1. மலையில் ................. நடுவிலிருந்து ஆண்டவர் உங்களோடு நேருக்கு நேர் பேசினார்.
6. அதனால் நீங்கள் உடைமையாக்கிக்கொள்ளும்படி, கடந்து சென்றடையும் ........... உடமையாக்கும் வலிமை பெறுவீர்கள்.
8. அவர்கள் புறப்பட்டு மலையில் ஏறி, எசுக்கோல் பள்ளத்தாக்கு வரை சென்று, அதை ................... பார்த்தனர். (2வது எழுத்து 3வதாய் நிற்கிறது).
9. நீங்கள் வீட்டிலிருக்கும்போதும், ................... செய்யும் போதும், படுக்கும்போதும், எழும்போதும் அவற்றைப் பேசுங்கள்.
14. நாமும் செரேது ஓடையைக் ............... சென்றோம்.
16. அவர்கள் உன்னைப் பற்றிக் கேள்வியுற்று .................. உன் பொருட்டுப் பதைபதைப்பர்.
17. உங்கள் கடவுளாகிய ஆண்டவரை உறுதியாகப் .............. க் கொண்ட நீங்கள் இன்றும் வாழ்கிறீர்கள்.
22. ஆண்டவர் அவர்களுக்குச் சொல்லியிருப்பதுபோல் ஆண்டவரே அவர்களது ................ ச் சொத்து.
23. ஏனெனில் ஏசாவுக்கு சேயிர் ........... உடமையாகக் கொடுத்தார்.

### மேலிருந்து கீழ்

1. இதனால் நீங்கள் ................ வாழ்வீர்கள்.
2. முன்னவை போன்ற இரு கற்பலகைகளைக் ......... எடுத்தேன்.
3. உங்கள் ................. வஞ்சிக்கப்படாதபடி கவனமாயிருங்கள்.
9. எனவே தான் லேவியர்க்குத் தம் சகோதரர்களுடன் .............. இல்லை.
10. அவர்களோடு .................. செய்ய வேண்டாம்.

12. ஆயினும் நீங்கள் .............. ச் செல்ல மறுத்தீர்கள்.
15. அந்த மக்கள் எண்ணிக்கையிலும், உயரத்திலும்,................ ஏனாக்கின் வழிமரபினர்.
19. அர்னோன் ஓடை வரை உள்ள கிலயாதின் பகுதியையும், அர்னோன் நடு ஓடையையும், அதன் ............... ப் புற நாடும் தொடங்கி..

### வலமிருந்து இடம்

3. ஆறுநாட்கள் நீ ............. உன் அனைத்து வேலைகளையும் செய்வாய்.
4. நீங்கள் .................. நிறைவு கொள்வீர்கள்.
5. உங்கள் கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு ................ அவர் வழிகளில் நடந்து அவரைப் பற்றிக்கொண்டால், அவர் இந்த நாட்டினரை எல்லாம் உங்கள் முன்னே விரட்டியடிப்பார்.
9. அந்த நாட்டில், ................ றி நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள்.
11. உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்கள் மூதாதையருக்கு ................. வாக்கிற்கிணங்க நீங்கள் போய் அதை உரிமையாக்கிக் கொள்ளுங்கள்.
13. நீங்கள் ...........ற வேண்டாம், அவர்களுக்கு அஞ்சவும் வேண்டாம்.
20. ஆண்டவர் உங்களை மக்களினத்தாரிடையே ...........
22. உங்கள் .............. பயனும் உங்கள் கடவுளாகிய ஆண்டவரால் ஆசி பெற்றதுமாகிய எல்லாவற்றுக்காகவும் நீங்களும் உங்கள் வீட்டார் அனைவரும் மகிழ்வீர்கள்.
25. நீங்கள் கற்றுக் கொள்ளும்படி வானினின்று வந்த ............... குரலை நீங்கள் கேட்குமாறு செய்தார்.

### கீழிருந்து மேல்

7. இந்த நாற்பது ஆண்டுகளும் உங்கள் மேலுள்ள ஆடை ................. போகவில்லை.
11. நீங்கள் .................. ற எல்லா மக்களினங்களுக்கும் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் அவ்வாறே செய்வார்.
18. நான் உங்களுக்குக் கட்டளையிட்டுச் சொல்பவற்றோடு எதையும் ............... வும் வேண்டாம்.
20. நீங்கள் அழிவுக்கு உள்ளாகாதபடி ..................... ச் செய்யாதீர்கள்.
21. அப்பொழுது நான் ................ பி மலையிலிருந்து இறங்கி நான் செய்திருந்த பேழையில் பலகைகளை வைத்தேன்.
23. நீங்கள் நெடுங்காலமாக இந்த ................ யில் சுற்றித் திரிந்துள்ளீர்கள்.
24. அர்கோபின் எல்லாப் பகுதிகளிலும், பாசானிலிருந்த ஓகின் ............... ம் மொத்தம் அறுபது நகர்களைக் கைப்பற்றினோம்.
25. ஆண்டவர் உங்களுக்கு .................... அளித்தது போல் உங்கள் சகோதரருக்கும் அமைதி அளிப்பார்.

# விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 39ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
க. சயந்தினி,
திருக்குடும்ப கன்னியர் மடம்,
மன்னார்.

*இரண்டாம் பரிசு*
ரி. நிலோஜா டயஸ்,
தாழ்வுபாடு,
மன்னார்.

*மூன்றாம் பரிசு*
ந. ஜெகப்பிரியன்,
புதுக்கமம்,
உயிலங்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 92 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 87 பேர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 39ல்**
**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. செ. அசம்ரா சாளினி, தரம் - 08, தி.கு.க.மடம், மன்னார்.
2. ரி. நிதர்சினி டயஸ், தாழ்வுபாடு, மன்னார்.
3. நவரட்ணம் பற்றிமா றோஸ், புதுக்கமம், உயிலங்குளம்.
4. இ. கியோமர் டலிமா,தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
5. கி. தயாளினி டலிமா, தி.கு.க. மடம், மன்னார்..
6. கா. ராண்சி டயஸ், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
7. அ. கரோலின் கீர்த்திகா, 70,பேராலய வீதி,திருகோணமலை.
8. ரி. எஸ். டக்ஷன், 76/100, சாந்திபுரம், மன்னார்.
9. எஸ்.எஸ். காஜனா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
10. பி. யசிந்தா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
11. ஆர். மேரி லக்ஷி, மன்/புனித.சவே.பெ.கல்லூரி, மன்னார்.
12. லாசரஸ் நிரஞ்சலா, இல.9, சிதம்பரபுரம், வவுனியா.
13. வி. பற்றிக் பிரசாத், இல. 268, திருநாவற்குளம், வவுனியா.
14. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
15. நீ. கிளாறா (புஷ்பம்), ஒலிமடு, நானாட்டான்.
16. பே.இராஜ்வேந்தன், மன்/புனித ஆனாள் ம.ம.வித்,வங்காலை.
17. எஸ்.சித்தா பீரீஸ், 1ம்வட்டாரம், அக்னேஸ்புரம்,வங்காலை.
18. என்.ஆன் சிந்துஜா, மன்.புனித.சவே.பெ.கல்லூரி, மன்னார்.
19. அ. றொசாணி, சென் மேரீஸ் வீதி, அடம்பன்.
20. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால்கந்தோர் வீதி, மன்னார்.
21. ராணி அரசரத்தினம், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
22. தேவிகா பத்மராஜா, பெத்தனி வயல்வீதி, மன்னார்.
23. எஸ். மரியதாசன், பாலையடி புதுக்குளம், வட்டக்கண்டல்.
24. செ. டினோஷன், பாசிமோட்டை, வட்டக்கண்டல்.
25. செ. மெசியாஸ், பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.
26. கு. சுதர்சன் றோபட், கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்.
27. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
28. ஏ. சந்துஜன், பிள்ளையார் கோவில் வீதி, வெளிக்குளம்.
29. ச. லின்ரா, கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
30. திரு. ஜோ.ம. சசிநாத், இல 9.:32, பூங்கா வீதி, வவுனியா.
31. எட்வின் மரியம் யாழினி, சுவிஸ்.
32. பியாற்றிஸ் பற்றிக், பிரதான வீதி, மன்னார்.
33. ம. யஸ்ரின் பிரபாகர், பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
34. அ. லீலா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
35. அ. அபிஷேக், அடம்பொன் தாழ்வு, வட்டக்கண்டல்.
36. அ. இசைக்கியேல், ஜோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
37. திருமதி. வசந்தி சத்தியசீலன், எழுத்தூர், மன்னார்.
38. பா. ஜெயசீலன், அந்தோனியார் புரம்.
39. கை. சுரேஜினி, சென் பீட்டர்ஸ் லேன், நிந்தனி, புத்தளம்.
40. எம்.செல்வநாயகம்,தி.கு.க.மடம்,ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்.
41. நீ. கரீஸ் கில்றோய் குரூஸ், சென் யூட்வீதி, பேசாலை.
42. ஆ. ஜெசி, 8ம் வட்டாரம், பேசாலை.
43. லீ. டெய்சி, புனித செப. கோவில்வீதி, பெற்றா,மன்னார்.
44. ப. வசந்தன், குருவில், வட்டக்கண்டல்.
45. யோ. யோண்டிமல் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
46. திருமதி. பி. பர்வின் நிருஷியா குரூஸ், பேசாலை.
47. ஏ.ரி. செல்வராசா டக்ஸ்சியா,76/100, சாந்திபுரம், மன்னார்.
48. ரி. பறுனாந்து (நிறஞ்சலா) இல.35, புதியமூர்வீதி, மன்னார்.
49. செ. வளன் நியூமன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
50. எஸ். காந்தன், நறுவிலிக்குளம், (திருகுபுரி) வங்காலை.

# சரியான விடைகள்

விவிலயக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 37
***எண்ணிக்கை (அதி. 13 – 24)***

**இடமிருந்து வலம**
1. தம்மருகே 16:5
3. நிலம் 22:5
7. தண்ணீர் 20:2
9. கட்டளை 22:18
10. குடிக்க 20:8
12. துளிர்த்து 17:8
15. தடியில் 13:23
16. குரலை 21:3
21. கொண்டு 15:36
22. அயல் 15:30

**மேலிருந்து கீழ்**
1. தலைவனுக்கும் 17:3
2. தூய்மையாகி 19:19
5. கொடுமை 20:15
8. நகர் 21:2
9. கடித்த 21:9
11. கறை 15:28
13. புல்லை 22:4
16. குரலில் 14:1
17. பாலும் 16:14

**வலமிருந்து இடம்**
2. தூபத்தையும் 16:7
4. பங்கும் 18:20
6. வயலின் 20:17
8. நகர் 21:3
14. உளவு 13:25
16. குடித்தால் 20:19
18. நாட்டு 14:14
19. செய் 15:38

**கீழிருந்து மேல்**
12. துளிர்க்கும் 17:5
16. குருத்துவத்தை 18:7
18. நாட்டின் 13:26
19. செரத் 21:12
20. வாதாடினார் 20:13
21. கொடுக்கும் 13:2
22. அப்பால் 13:17
23. மாட்சி 16:19
24. தலைவனை 14:4

# நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவு

மலர்வு 03 - 06 - 1939



உதிர்வு 06 - 08 - 2005

**திரு. ம. பிரான்சீஸ் சேவியர் றோச்**
**பள்ளிமுனை (கனடா)**

ஆசை, நேச பாசமுள்ள தம்பியே! மூன்று சகோதரிகளுக்கு முத்தெனப் பிறந்தவனே, புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்றவனே, பேளி என்ற மாதைக் கரம்பிடித்தவனே, முதல் முதல் வெளிநாடு சென்றவனே, உறவுகள் பலரை அங்கு அழைத்தவனே, கனடாவில் சின்னப் பள்ளிமுனை ஒன்றை நிரந்தரமாய் நிலை நாட்டியவனே, உன் எழில் வதனம் கண்டு ஈரெட்டு ஆண்டுகள் ஆயினவே. வருவாய் வருவாய் என வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தோமே, வருவேன் என்று கூறி வராமலே வானகம் சென்று விட்டாயே! உன் சுகவீனம் அறிந்து துயர்கொண்டோமே. இறை அருள் வேண்டி, செப உதவி கேட்டு நின்றோமே! உன் இவ்வுலக வாழ்வு அறுபத்தாறு ஆண்டுகள் என ஆண்டவர் அழைத்திட்டாரே, இறை சித்தத்தை ஏற்போம். உன் ஆன்மா இறைவனில் சங்கமமாகட்டும்.

அன்பு நிறை தம்பியே! இறைவனில் இன்பம் துய்ப்பீராக. உம் பிரிவால் துயருறும் சகோதரிகள், மாமி, மைத்துணர், மச்சாள்மார், மருமகன், மருமகள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்.

*இதைக் கண்ணுறும் அருட்தந்தையர் அருட்சகோதரிகள், பக்தி சபைகள், அனைவரும் இவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

*தகவல்: ம. மேரி திரேசா றோச்,*
*பள்ளிமுனை, மன்னார்*

# நீங்காத நினைவுகள்

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 28 - 11 - 1960



உதிர்வு 04 - 09 - 2003

**ப. கருணாகரன் குலாஸ்**
**8ம் வட்டாரம், பேசாலை**

ஆண்டு இரண்டு போனாலும் உங்கள் நினைவு என்றுமே எங்களை விட்டு அகலாது. இன்று நீங்கள் இல்லாது சிறகுடைந்த பறவையாய்த் தவிக்கின்றோம். எங்கள் அப்பாவே எங்கள் கண்ணீர் யார் துடைப்பார் என்று ஏங்குகின்றோம்.

*உங்கள் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்*
*உங்கள் அன்பு மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்.*

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 25 - 04 - 1934



உதிர்வு 19 - 09 - 2003

**அ. ஜெயசீலி கூஞ்ஞ**
**பெரிய பண்டிவிரிச்சான், மடு.**

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பிற்கு இலக்கணமாய், தாயும் தந்தையுமாய் நின்று எம்மைப் பாரினில் உயர்த்திய எங்கள் அன்புத் தாயே! காலன் உம்மை அழைக்க கண்ணீரில் எமை ஆழ்த்திச் சென்று ஈராண்டுகள் சென்றாலும், உம்மை எண்ணி எந்நாளும் தவிக்கின்றோம். நீங்கள் நித்திய சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டி நிற்கும்,

*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

மன்னா

# கடவுள் பெயரால் கேட்கிறோம்

# பயங்கரவாதத்தை நிறுத்துங்கள்!

## தீவிரவாதத் தாக்குதல்களுக்கு பாப்பரசர் மீண்டும் கண்டனம்

அண்மைக் காலமாக பல நாடுகளிலும் நடத்தப்பட்டுவரும் தீவிரவாதத் தாக்குதல்களுக்கு திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் மீண்டும் கண்டனம் தெரிவித்துள்ளார். எகிப்து, துருக்கி, ஈராக், பிரிட்டன் ஆகிய நாடுகளில் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதல்களுக்கே பாப்பரசர் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார். பயங்கரவாதிகள் நடத்திவரும் தாக்குதலால் பெருமளவு உயிரிழப்பு ஏற்பட்டு வருகிறது. இது மனித இனத்துக்கு எதிரான செயலாகும். வெடிகுண்டுத் தாக்குதலில் சொத்து நாசமும் ஏற்பட்டு வருகிறது. பொதுமக்களை பாதிக்கும் வன்முறைச் செயல்களைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் அவர் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் லண்டனில் இடம் பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து "கடவுள் பெயரால் கேட்கிறோம் பயங்கரவாதத்தை நிறுத்துங்கள்" என பாப்பரசர் வேண்டுகோள் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஜேர்மனியில் அடுத்த மாதம் முஸ்லிம் மற்றும் யூதப் பிரதிநிதிகளுக்கு இடையிலான பேச்சுக்கள் நடைபெறவிருக்கின்றது. பயங்கரவாதச் செயல்களை தடுப்பதற்கான செயல் திட்டம் குறித்து அப்போது விவாதிக்கப்படும்.

## சமாதான நீதிவான்



மன்னார் நானாட்டானைப் பிறப்பிடமாக கொண்டவரும், ஆஸ்பத்திரியடி, அடம்பனில் வசித்து தற்போது பள்ளிமுனை மேற்கு, மன்னாரில் வசிப்பவருமான திரு. எஸ். நசரேனு 22.08.2005ம் மன்னார் மாவட்ட நீதிபதி முன்னிலையில் மன்னார் மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நானாட்டான் றோ.க.பாடசாலையின் பழைய மாணவராவார். அத்துடன் மன்னார் மாவட்ட நீதிமன்று, மன்னார் கச்சேரி, கொழும்பு காணிக்கிளை இறுதியாக பதிவாளர் நாயக திணைக்களத்தில் குவாசிச் சபை செயலாளராகவும் பணிபுரிந்தவர். அத்துடன் அடம்பன் சென் மேரிஸ் கழக செயலாளராகவும் மன்னர் மாவட்ட ஓய்வூதிய சங்கத்தின் உப செயலாளராகவும் கடமை புரிந்தவர்.

## லண்டனில் புதிய தமிழ் கத்தோலிக்க ஒன்றிய நிர்வாகம்

மேற்படி ஒன்றியத்தின் பொதுக்கூட்டத்தில் நடப்பு வருடத் தலைவராக திரு குணம் விக்கிரமசிங்காவும், செயலாளராக திரு சீலன் பஸ்தியாம்பிள்ளையும் பொருளாளராக திரு. இ. மகேந்திரன் ஆகியோரும் ஏனைய 25 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதன் முதலாவது நிர்வாக சபைக் கூட்டத்தில் புதிய தலைவரின் அழைப்பை ஏற்று முதன் முதலாக லண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குனர் அருட்பணியாளர் இயுஜின் பிரான்சிஸ் அடிகளார் கலந்துகொண்டு ஒன்றியத்தின் நடப்பு வருட செயற்திட்டங்களுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கினார். இதன்படி உடனடியாக மூன்று தாயக தமிழ் மறை மாவட்டங்களிலிருந்தும் சகல அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டு அனாதைகளாக்கப்பட்டுள்ள சிறுவர்களின் புணர்வாழ்விற்கு உதவிடும் திட்டம் ஒன்றை ஆயர்கள் ஊடாகப் பெற்று அதை நடைமுறைப்படுத்துமாறு பணியக இயக்குனர் ஆலோசனை வழங்கினார்.

## மதமாற்றத் தடைச்சட்டம்

## இலங்கையில் பல பிரச்சினைகளைக் கொண்டுவரும்

### லண்டனில் இருந்து ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம்

லண்டனில் உள்ள கத்தோலிக்க, கிறிஸ்தவ மக்களும், சமயத்தலைவர்களும் கையொப்பமிட்ட பகிரங்க கடிதம் ஒன்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் விரைவில் சட்டமாக்கப்படவுள்ள உத்தேச மதமாற்றத் தடைச்சட்டம் பற்றிய தமது எதிர்ப்பை மேற்படி கடிதத்தில் அவர்கள் வெளிக்காட்டியுள்ளனர்.

இந்த உத்தேச மதமாற்றத் தடைச்சட்டம் இலங்கை நாட்டில் மேலும் பல பிரச்சினைகளை கொண்டுவரும் என்பதால் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ள அவர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியை வெளிப்படுத்த சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்கள். தங்களையும், தங்கள் அரசையும் சர்வதேச சட்டமுறைகளுக்கு அமைவாக நடந்து இலங்கைவாழ் பிரஜைகளின் மத சுதந்திரத்தைப் பாதுகாருங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேற்படி கடிதத்தில் கத்தோலிகக், மெதடிக்ஸ் திருச்சபைகளுடன் இங்கிலாந்துத் திருச்சபை அங்கத்தவர்களும் கையொப்பமிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஒக்டோபரில் நற்கருணை ஆண்டு இறுதி விழா

நற்கருணை ஆண்டின் இறுதி விழாக் கொண்டாட்டம் ஒக்டோபர் 2ஆந் திகதி முதல் 29ஆந் திகதி வரை வத்திக்கானில் ஆயர்களின் மாநாட்டில் நடைபெறவிருக்கிறது. 2004 ஒக்டோபர் முதல் 2005 ஒக்டோபர் வரை நற்கருணை ஆண்டாக அனுஷ்டிக்குமாறு மறைந்த திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் அழைப்பு விடுத்திருந்தார். அதற்கமைவாக நற்கருணை ஆண்டின் தொடக்க மாநாடு அமெரிக்காவின் மெக்சிக்கோ மாகாணத்தில் நடைபெற்றது. இந்நற்கருணை ஆண்டின் இறுதி விழாக் கொண்டாட்டம் எதிர்வரும் ஒக்டோபர் 2ந் திகதி முதல் 29ஆந் திகதி வரை வத்திக்கானில் ஆயர்களின் மாநாட்டில் கொண்டாடப்பட உள்ளது. ஆயர்களின் இம்மாநாடு நற்கருணைக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இம்மாநாடு வழிபாடு மற்றும் அருட்சாதனங்கள் ஆணையத்தின் தலைவர் கர்தினால் பிரான்சீஸ் அரின்ஸ், மெக்சிக்கோ பேராயர் கர்தினால் ஜவான் சான்டோவால், இந்தியாவின் ராஞ்சி பேராயர் கர்தினால் டெலஸ்போர் டோப்போ ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ளது. மறைந்த திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் மாநாட்டின் தயாரிப்பு வேலைகளை கர்தினால்கள் பலருக்கு பகிர்ந்தளித்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### மன்னார் சிறிய குருமடத்தில் அழைத்தல் ஊக்குவிப்பு

## வந்து பாருங்கள் - 2005 நிகழ்வு



யோவான் 1:39 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி சீடர்கள் இயேசுவிடம் நீர் எங்கு தங்குவீர் என வினவியபொழுது இயேசு "வந்துபாருங்கள்' என்றார். "வந்து பாருங்கள்' என்பதை மேற்கோள் வாக்கியமாகக் கொண்டு மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் "வந்து பாருங்கள்" எனும் நிகழ்வு யூன் மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளில் அர்த்தமுடையதாகவும், பயனளிக்கக்கூடிய விதத்திலும் நடைபெற்றது.

குருமட மாணவர்களின் ஆன்மீக, கல்வி, மனித விழுமியங்கள் போன்றவற்றில் கலந்துகொண்டு எதிர்காலத்தில் தெளிவான மனத்துடனும், ஒரே சிந்தனையுடனும், உறுதியுடனும் பணியாற்றக்கூடிய நல்ல பணியாளர்களாக உருவெடுக்க சிந்திக்கவைப்பதே இந்த "வந்துபாருங்கள்" நிகழ்வின் நோக்கமாகும்.

(தொடர்சசி 12ம் பக்கம்)


## பணிக்குருத்துவத்தில் வெள்ளி விழாக் காணும் அருட்பணியாளர்கள்

### அருட்பணியாளர் போல் நட்சத்திரம் (அமதி)



அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் போல் நட்சத்திரம் 24.08.1952 அன்று பிறந்தார். 29.08.1980ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1980 – 1985 வரை யாழ் தொடர்பகத்தில் இருந்துகொண்டு மறையுரைஞர் பணியை மேற்கொண்டார். 1985 – 1989 வரை நானாட்டான் பங்குத் தந்தையாகவும் 1989 – 1991 வரை வங்காலைப் பங்குத் தந்தையாகவும் 1991 – 1992 வரை உயிலங்குளம் பங்குத் தந்தையாகவும் பணியாற்றினார். மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றிய காலப்பகுதியில் மக்கள் மனங்கவர்ந்த பணியாளராக இவர் விளங்கினார். 1992 – 1993 வரை தொடர்பக முதல்வராகப் பணியாற்றிய இவர் 1993 – 1997 வரை உரோமாபுரியில் தனது உயர்கல்வியை மேற்கொண்டார். அதன் பின்னர் 1997 – 1999 வரை யாழ் புனித வளனார் சிறிய குருமட அதிபராகவும் 1999 - 2005 வரை அமலமரித் தியாகிகளின் உயர் குருமட அதிபராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். இக்காலப் பகுதியில் *நான்* என்ற அமதிகளின் உளவியல் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தார். இவர் 1999 - 2005 வரை யாழ் மாகாண அமதிகளின் முதல் ஆலோசகராகவும் உதவி முதல்வராகவும் பணியாற்றினார். 1997 - 2005 வரை யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் ஒழுக்கவியல் விரிவுரையாளராகவும் கடமைபுரிந்தார். இன்னும் மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றிய காலத்தில் மடுவில் மறையுரைகளை ஆற்றியுள்ளார். பல்வேறு ஆற்றல் திறமைகளைக் கொண்ட அடிகளார் தனது குருத்துவப் பயணத்தில் பல்வேறு உருவாக்கல் பணியிலும் சிறப்பாக ஈடுபட்டு உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அருட் பணியாளர் ஜி. விக்ரர் பிலேந்திரன்



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் 18.02.1954 அன்று பிறந்தார். இவர் 31.07.1980 அன்று குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1980 – 1981 வரை உருத்திரபுரத்தில் உதவிப் பங்குத் தந்தையாகவும் 1981 – 1983 வரை யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியின் உதவி ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் 1983 – 1988 வரை யாழ் புனித மடுத்தினார் சிறிய குருமட அதிபராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். 1989 – 1992 வரை தனது முதுகலைமானிப்பட்ட கல்விக்கான விடுப்பை மேற்கொண்டார். 1992ல் மீண்டும் புனித மடுத்தினார் குருமட அதிபராகப் பணியாற்றினார். 1994ல் கல்வி டிப்ளோமாவை மேற்கொண்ட இவர் 1992 – 1994 வரை யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி உப அதிபராகவும் பகுதித் தலைவராகவும் பணியாற்றினார். 1994 – 1996 வரை கல்விக்கான விடுமுறையை எடுத்துக்கொண்டார். 1996 – 1999 வரை யாழ் அடைக்கல அன்னை ஆலயப் பங்குத் தந்தையாகவும் 1990 – 1997 வரை யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத்துறை வரவு விரிவுரையாளராகவும் 1997 – 1998 வரை தற்காலிக விரிவுரையாளராகவும் 1998ல் நிரந்தர விரிவுரையாளராகவும் நியமிக்கப்பட்டார். 1990 முதல் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1994ல் கலாநிதிப்பட்டத்தைப் பெற்ற இவர் தற்போது யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத்துறைத் தலைவராகவும் 2005ம் ஆண்டிலிருந்து யாழ். பாண்டியன்தாழ்வு பங்குத் தந்தையாகவும் பணியாற்றி வருகின்றார். இவர் எழுதிய நூல்கள் 'பாடசாலைக் கலைத்திட்டத்தில் விழுமியக்கல்வி' (1996). 'Tamil Catholic literary Tradition' (1998) (ஆங்கிலத்தில்) 'Letters of the Holy Family Mi' 'தமிழில் விவிலியம் நேற்றும், இன்றும்' (1999), 'கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியங்கள்' (2001) (இந்நூல் வடக்குகிழக்கு மாகாண சபையின் சிறப்புப் பரிசு பெற்றது)


***ஆய்வுக் கட்டுரைகள்*** இலங்கைத் திருச்சபை வரலாறு பற்றி, யாழ்ப்பாண மறைமாவட்டத்திலுள்ள சில ஆலயங்களின் வரலாறு, இவை தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டவை.

### அருள்திரு றெஜினோல்ட் லூசியன் (அமதி)



குருப்பட்டம் 29.08.1980 யாழ் புனித மரியன்னை பேராலயம், ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை. மறைபோதகர் 1980 – 1983, 1983 – 1986 நுகெகொட ஆரம்பக் குருமட போதனா ஆசிரியர், 1986 – கொழும்பு பல்கலைக் கழக சட்ட பீடக் கல்வி, 1987 – பங்குத் தந்தை கல்ஸ்றொட் புனித செபஸ்ரியார் ஆலயம், 1090 – பங்குத்தந்தை வியாகுல மாதா ஆலயம், நியூ செட்டி கொழும்பு – 13, 1994 உரோமை கிறகோரியன் பல்கலைக்கழக திருச்சபை சரித்திர முதுகலைமானிப் பட்டம். 1997 – அம்பிட்டிய தேசிய குருமட விரிவுரையாளர், அம்பிட்டிய புனித மரியாள் ஆலயப் பங்குத்தந்தை.

### அருள்திரு மரியநாயகம் (அ.ம.தி)



பிறப்பு 13.05.1948 வசாவிளான், குருப்பட்டம் 29.08.1980. 1980 – 1982 உப அதிபர் யாழ் அ.ம.திகள் சிறிய குருமடம், 1982 – 1986 உதவி நொவிஸ் மாஸ்ரர் மக்கோனா, 1986 எம். ஏ உயர்கல்வி, 1987 – 1990 உதவி நொவிஸ் மாஸ்ரர், 1990 – 1993 மருதானை பத்திமா மாதா ஆலய துணைப் பங்குத்தந்தை, 1993 – 1996 கொழும்பு வைத்தியசாலை ஆன்மீக இயக்குனர். 1996 – 2002 கலாநிதிப்பட்டக் கல்வி,

*வெள்ளி விழாக் காணும் அருட்பணியாளர்கள் அனைவருக்கும் மன்னா தனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை மகிழ்வோடு தெரிவித்து நிற்கின்றது.*

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.